Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

ரூபா 30.00

ஜூன் 30 - ஜூலை 06, 2011


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 917

## பான் கீ மூன் மீண்டும் பதவியில்

## சாதித்தது சாதிக்கப்போவது என்ன?



## தோல்விகளையே எதிர்பார்க்கும் கூட்டமைப்பு



## புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்

## அன்பின் நெருக்கம்

ஒருவர் மீது இன்னொருவர் ஆரம்பத்தில் பழகும்போது மரியாதையான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம்தான் உரையாடுவார்கள். எடுத்த எடுப்பில் நீ... நான்... வாடா .... போடா என்று கூறிக்கொள்ளமாட்டார்கள். நண்பர்களாப் பழகுபவர்கள் ஆரம்பத்தில் கூட மரியாதையாகப் பழகினாலும், நாளடையில் அவர்களுக்குள்ளான கூச்ச சுபாவம் மெல்ல அகல அங்கே அன்பெனும் உணர்வு இருவரையும் ஆக்கிரமிக்கின்றது.

இதேபோன்றுதான் மாணிக்க வாசகப்பெருமானும் சிவபிரானை "நீ.." என அழைக்கிறார். "யாரொடு நோகேன் யார்க்கெடுத்தரைப்பேன் ஆண்டவன் "நீ.." அருளிலை யானால்.." என்று திருவாசகத்தில் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

"நெற்றியிலே திரிபுண்டரங்களைத் தரித்தவர்! முப்புரங்களை எரித்தவர்! முழு உலகத்துக்கும் அதிபதியானவரைப் பார்த்து கேவலம் ஒரு சிறு தொண்டன் "நீ.."யென அழைக்கலாமா...? என எழும் வினாவானது அர்த்தமற்றது. அளவு கடந்த பக்தியின் நிமித்தம் பரமனுக்கும் பாமரன் ஒருவனுக்கும் இடையிலான மரியாதை குறைந்த போனதால், அங்கே "நீ..." என்ற வார்த்தை பிறக்கிறது. இது அன்பின் நெருக்கத்தை வெளிப்படுத்துகிறது.

-அனந்தநாராயணன், கைதடி.

## வாயும் வார்த்தைகளும்

சமூக வாழ்வில் ஒருவரைக் கணிப்பீடு போட்டுக் கொள்வதற்கு அவரது வாயிலிருந்து உதிரும் வார்த் தைகளே போதுமானதாக இருக்கிறது. ஏனெ-னில் உடலை அலங்கார உடைகள் மூலம் போர்த்து . நாகரிகமாகத் தோற்றம் காட்டினாலும், அக்கணத்தில் அவரது வாயிலிருந்து ஒரு அவதூ றான வார்த்தை விழுமானால் அவருக்குரிய மதிப்பு மரியாதைகள் யாவும் அக்கணத்தில் அவரை விட்டு நீங்கி விடுகின்றன.

நாம் உணவுகளைப் பலவிதமாய் உட்கொள்ளும் போது அவை யாவும் செரிமாணத்துக்குள்ளாகி கழிவுகளாக வெளியேறிவிடுகின்றன. அதே சமயம் உணவுகள் உள்கொள்ளும் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளானது தூய்மையான தாக அல்லாவிடின், வாழ்வு துக்கத்துக்குள்ளாகி விடும்.

இதைத்தான் இயேசு கிறிஸ்துவும் "வாய்க்குள்ளே போகிறது மனுசனைத் தீட்டுப்படுத்தாதாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுசனைத் தீட்டுப்படுத்தும் (மத்தேயு:15:11)" எனக் கூறினார்.

சாமுவேல்-புதுக்குடியிருப்பு.

ஆன்மீகம்

## ஒரு சமுதாயத்தின் அழிவு

பெருமானார்(ஸல்) அவர்கள் ஒரு சமு தாயத்தின் அழிவு எப்போது என்னென்ன வடிவங்களில் வரும் என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டினார்கள். மனிதனின் மனதில் உறுதி உருக்குலைந்து உலக சுகங்களின் பால் அவனது மனம் ஈர்க்கப்படும் போது அந்தச் சமுதாயத்தின் அழிவுக்கான முதல் அறி குறி அறிவிக்கப்பட்டுவிட்டது என்பது பொருள். இனி இந்தச் சமுதயாம் தழைக்கப் போவதில்லை என உறுதியாகக் கூறலாம். இந்த நோய்களுக்கெல்லாம் ஆட்படுகின்ற சமுதாயம் எண்ணிக்கையில் எவ்வளவு பெரியதாக இருப்பினும் சரியே! அது தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவே முடியாது.

"எந்த ஒரு சமுதாயத்தவரும் தம் நிலையைத் தாமே மாற்றிக் கொள்ளாதவரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுதில்லை."
(அல்குர் ஆன்– 13:11)

முஹம்மது ஹஸனீ-கல்முனை-07

# வாசகர் சாலை

## வேண்டுகோள்!

அன்பு முரசே!

தொடரும் நாட்களில் உன்னை தொடர்ந்து வாசிக்கின்றேன், வாசித்து கொண்டிருப்பேன். மனதுக்கு நிம்மதியில் பயத்தை வெல்வது எப்படி? ஆக்கம் பயத்தால் ஏற்படும் விளைவுகளை மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சினிமா வில் வரும் படங்களுக்கு உரிய படத்தினுடைய பெயரை போடுவீர்களா? முரசு வாசகியின் அன்பான வேண்டுகோள். தேன்கிண்ணத்தில் பிரசுரமாகும் கவி தைகள் பிரமாதம்.

க. சிந்து, யாழ்ப்பாணம்.

## வாழ்த்துக்கள்

முரசுக்கு வணக்கம். பல தரப்பட்ட அம்சங்களையும் தூரநோக்கோடும், தெளிவாகவும் ஐயத்தைப் போக்கும்படியும் சிறப்பாகவும் எடுத்து வழங்குகின்றாய். மக்களின் தேவை உணர்ந்து அதற்கேற்றாற் போல செயற்படுவது பாராட்டுக்குரியது. இருந்தாலும் பல மாற்றங்களை முரசில் எதிர்பார்க்கின்றேன். அரசியல் கட்டுரைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. சர்வதேசம் நிகழ்த்திய ருவாண்டா துயரங்கள் எனும் கட்டுரை மிகவும் வரவேற்கக் கூடியது. எனது வாழ்த்துக்கள்.

க.சிவானன். மட்டக்களப்பு

## சூப்பரோ சூப்பர்

ஒவ்வொரு வியாழன் தோறும் உன் வரவுக்காக காத்திருப்பவர்களில் நானும் ஒருவன். பல சுவாரசியங்களுடன், சிந்திக்கத் தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது. அவலம் சுமந்த அகதிகள் எனும் தொடர் வன்னி மக்கள் பட்ட துன்பத்தை அப்பட்டமாக எடுத்துக் கூறப்படுகிறது.




பூலான்தேவி, கண்ணதாசன் தொடர்கள் சிறப்பாகவுள்ளது. சிறு கதைகள், தீண்டும் இன்பம், பாப்பா முரசு, அரசியல் கட்டுரைகள் மற்றும் எக்ஸ்ரே ரிப்போர்ட், சிந்தியா கேள்வி, பதில்கள் என்பவை சூப்பரிலும் சூப்பர்.

ஜே.கிருபாகரன்,
திருகோணமலை.

# கவிதைப் போட்டி இல.917



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.07.2011

கவிதைப் போட்டி இல. 917
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### நல்ல நட்பு

கூடப்பிறந்தவர்களே
குழிதோண்டுமிக்
காலமதில்
நாயொடு நட்புறவு
நல்லதுதான் மனிதா!

சி.துவாரகேஷிகன்,
வவுனியா.

### பயப்படாதே!

நட்டநடு வீதியிலும்...
நடுச்சாமத்திலாயினும்
வெட்டவெளிகளினூடாகவும்
நான்
விரும்பியபடி வருவேன்
பயப்படாதே எஜமான்
யாருமிருக்கப் பயமேன்?

எஸ்.ஜமுனா,
திருகோணமலை.

### ஞாபகங்கள்

நாய்க்கு வரிகட்டி
வன்னியில்
நாறிப்போன
நம் வாழ்வின் ஞாபகங்களைத்
தோற்றுவித்துள்ளது
இத்தூரதேசத்துப்படம்.

கே.பிருந்தா,
வவுனியா.

### கடமையுணர்வு

சாலைவழிப் பயணத்தில்
களைத்தவன் குந்திவிட்டான்
காப்பவன் நிற்கிறான்
தன்
கடமையுணர்ந்து!

கே.ராகவன்,
மட்டக்களப்பு.

### அந்தரிப்பு

ஆட்களற்ற பாதையூடாய்
ஆதவனின்
வெயில் தகிப்பில்
குந்திவிட்டனரோ இருவரும்?
தொங்கும் நாக்கும்
துயரேகை முகமும்
துல்லியமாய்
படம்பிடித்துக்காட்டுகின்றன
இவர்களுக்குள்ளான
பரிதவிப்பை.

ப.ரேகா,
நல்லூர்.

### நீ 'நாய்' அல்ல!

எங்கு சென்றாலும்
என்னுடனே நீ!
'நாய்'என்ற
சொற்பதத்துக்கு அப்பால்
இருக்கிறாய் நம்மோடு
நம்மில் ஒருவனாய்
நன்றியுணர்வாய்!

எஸ்.சோபிதா, யாழ்ப்பாணம்.

கவிதைப் போட்டி இல.915

## பாராட்டுக்குரியது




### தக்க மரியாதை

எனைக்காக்கும்
உன் கடமை
உணர்வுக்கு முன்னால்
நான் உயர்ந்தவன்
அல்ல!
என் காவலனே!
கடமை வீரனே
நான்
உட்கார்ந்திருக்கிறேன்
நீ
உயர்ந்து நில்!

கோமேதகன்,
புதுக்குடியிருப்பு

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com

# உங்கள் பக்கம்



## கழிவுகள் கொட்டுவதை நிறுத்தவேண்டும்

அநுராதபுரத்தின் புதிய நகரம் உட்பட அதனை அண்டிய பிரதேசங்களுக்கும் பழைய நகரப்பகுதிகளுக்கும் குடிநீரை வழங்கும் நுவரவாவி மற்றும் திஸ்ஸ வாவி ஆகிய குளங்களின் நீர் மாசடைந்து வருகிறது.

நுவரவாவிக்கு அருகில் உள்ள சுற்றுலா விடுதி மற்றும் இராணுவ முகாம் உட்பட்ட குடியிருப்புக்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் மிருகங்களின் கழிவுகள் போன்றவை இந்தக்குளத்தில் கலப்பதாலேயே அவற்றின் நீர் மாசடைந்து வருகிறது. இதேபோன்று திஸ்ஸ வாவியைச் சுற்றி சுற்றுலாப் பயணிகள் அதிக நேரங்களைச் செலவிடுவதினால் அவ்வேளையில் சுற்றுலாப் பயணிகளினால் வீசப்படுகின்ற கழிவுகளினால் நீர் மாசடைந்து வருவது அதிகரிக்கின்றது.

இதனால் அநுராதபுர நகர்ப்பகுதியில் பல்வேறு விதமான தொற்றுநோய்கள் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றியிருப்பதாகச் சுகாதாரப்பிரிவினரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குப் பிரதேச செயலாளர்கள், இராணுவ உயர் அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி கள் உள்ளிட்ட குழுவொன்றை தயார் செய்து குறித்த பகுதிகள் கண்காணிப்பதுடன் தடுத்து நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் உறுதியளித்திருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இதுவரையில் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாதது வேதனை அளிக்கின்றது. எனவே குறித்த விடயத்தில் உரிய அதிகாரிகள் அக்கறைசெலுத்தி துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.முஹமட் மஜீத். அநுராதபுரம்.

# அம்பாறையில் படை முகாம்களுக்கு மூடுவிழா

## படிப்படியாக தனியார் கட்டடங்களிலிருந்து இராணுவம் வெளியேறுகிறது

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, காரைதீவு ஆகிய இடங்களில் கடந்த 21 வருடங்களாக நிலை கொண்டிருந்த விசேட அதிரடிப்படை முகாம்கள் மூடப்படுகின்றன. கட்டட உரிமையாளர்களை அழைத்து கட்டடங்களை ஒப்படைக்கும் பணி இடம்பெற்றது.

கடந்த ஒருவார காலமாக படைத் தளபாடங்கள் அகற்றப்பட்டு லொறிகளில் அனுப்பப்பட்டு வந்தன. 1990 வன்செயலின் பின்னர் அமைதியை நிலைநாட்டுவதற்காக விசேட அதிரடிப்படையினர் முதன் முதல் இங்கு கொண்டுவரப்பட்டனர். காரைதீவு முகாமிலிருந்து வெளியேறும் படையினர் மல்வத்தை வவுனியா போன்ற பிரதேசங்களுக்குச் செல்கின்றனர்.

இதேவேளை, கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட விசேட அதிரடிப் படை முகாமும் முற்றாக மூடப் படவுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், அறுகம்பை, கோமாரி, அக்கரைப்பற்று, கஞ்சிக்குடிச்சாறு, காஞ்சிரம்குடா, சாகாமம், வம்மியடி, திருக்கோவில் போன்ற விசேட அதிரடிப்படை முகாம்களிலிருந்து ஏற்கனவே படையினர் வெளியேறி முகாம்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தனியார் கட்டிடங்களில் இருக்கும் இராணுவத்தினர் படிப்படியாக வெளியேறி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அதே வேளை மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் நிலைகொள்ள வேண்டும் என்பதே வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாக இருப்பதாக புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

# மலையக இளைஞர்களுக்கு பொருத்தமான களம் அமைக்கப்படுகிறது

## மாகாணசபை உறுப்பினர் கணபதி கனகராஜ்



மலையக இளைஞர்களின் திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பெரும்பங்காற்றுகின்ற தலைவராக செயற்படுவதாக மத்திய மாகாணசபை உறுப்பினர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் அண்மையில் இடம்பெற்ற தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக இளைஞர்களின் பல்துறை அபிவிருத்திக்காக பிரஜாசக்தி அமைப்பை உருவாக்கி அதன்மூலம் கட்சி பாகுபாடின்றி அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், சிலர் மலையகத்தில் இளைஞர்கள் மத்தியில் விளையாட்டு உபகரணங்களை வழங்கிவைப்புடன் தமது பணி நிறைவடைந்து விட்டதாக கருதுவதாகவும் மத்திய மாகாணசபை உறுப்பினர் கணபதி கனகராஜ் குற்றம் சுமத்தியுள்ளார். எனினும், மலையக இளைஞர்களின் கல்வி, தொழில், சமூக மேம்பாடு, விளையாட்டு போன்ற சகல பிரச்சினைகளையும் கையாள வேண்டிய பொறுப்பை இலங்கை தொழிலாளர் காங்கிரசே கையாள வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய கலாச்சார மண்டபத்தில் ஜனாதிபதி

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கொழும்பு பழைய விளையாட்டு மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேசிய கலை, கலாசார மண்டபத்தின் நடவடிக்கைகளை ஜனாதிபதி பார்வையிட்டுள்ளார்.

இலங்கை சீன நட்புறவின் மற்றுமொரு அடையாளமாக இந்த கலைக்கூடத்தை நிர்மாணிக்கும் பணிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ள குறித்த கட்டடத்திற்காக 3 ஆயிரத்து 80 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதி சீன குடியரசினால் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதன் 40 சதவீதம் நன்கொடை அடிப்படையிலும், மிகுதி 60 சதவீதம் வட்டியற்ற கடன் அடிப்படையிலும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச மட்டத்திலான குறித்த கலைக்கூடம், பொலநறுவை தாமரை மலர் தடாகத்தை ஒத்த வடிவத்தை கொண்டுள்ளது. 5 தளங்களைக் கொண்ட குறித்த கட்டடம், மொத்தமாக 14 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பை உடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டடத்தின் கீழ் தளத்தில் 246 வாகனங்களை தரிக்கக் கூடிய வசதி காணப்படுகின்றது.

அலங்கார மின்விளக்குகளை கொண்டதும், நவீன உபகரணங்களைக் கொண்டதும், 1288 ஆசனங்களையும் கொண்டதுமான அசையும் மேடையும் இந்த கட்டடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நவீன தொழிநுட்பத்துடனான ஒலி மற்றும் மின்விளக்கு கட்டுப்பாடுகள் குறித்து சீன பொறியியலாளர் ஒருவர் ஜனாதிபதிக்கு இதன்போது விளக்கமளித்துள்ளார். இதுதவிர, கட்டடத்தின் மேல் தளத்தில் திறந்த கலைக்கூடம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடருகிறது பாதயாத்திரை

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது வேதன கோரிக்கையை முன்வைத்து மீண்டும் ஒரு பாதயாத்திரையொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர். எதிர்வரும் முதலாம் திகதி அநுராதபுரத்தில் தமது பாதயாத்திரையை அவர்கள் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து அனைத்து விரிவுரையாளர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார். அதே வேளை, பாதயாத்திரையின் நிறைவில் பொதுக்கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# நடுக்கடலில் தத்தளித்த மீனவர்கள் காப்பாற்றப்பட்டனர்

இலங்கை கடற்படையினரால் வடக்கு ஆழ்கடலில் அநாதரவான நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் சிலர் மீட்கப்பட்டுள்ளனர்.

இழுவைப் படகொன்றுடன் 4 மீனவர்கள் இவ்வாறு மீட்கப்பட்டதாக கடற்படை இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. நெடுந்தீவிற்கு அப்பால் வடதிசையில் பாரிய அலைகளால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில், இவர்கள் வழிதவறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் இவர்களை மீட்டு இலங்கை - இந்திய கடல் எல்லையில் வைத்து இந்திய கடலோரக் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர். குறித்த இந்திய மீனவப் படகு பாம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த எம்.செனிலியா குரூஸ் என்பவருக்குச் சொந்தமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.


# மன்னாரில் மின்சாரத்தடைக்கு தீர்வு மக்கள் கோரிக்கைக்கு பலன்

மன்னாரில் தொடர்ந்து ஏற்படும் மின்சார விநியோகத் தடைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக 9 மணித்தியாலங்கள் மின்சார தடையேற்படுத்தப்பட்டு திருத்த பணிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளின் மின்சார விநியோகத்தடைகள் ஏற்பட்ட நிலையில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியதாக தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மன்னார் மாவட்டத்துக்குப் பொறுப்பான கிளிநொச்சி மாவட்ட மின்பொறியியலாளர் எஸ். பிரபாகரனை வினவியபோது, மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் உள்ள அதியுயர் மின்மார்க்க மின்கம்பிகளில் உப்புக்காற்றுப் படிவதனால் தொடர் மின்தடைகள் ஏற்படுவதாக தெரிவித்துள்ளார்.

# புலிகளின் பணத்தை அமுக்கியது யார்? அடையாளம் காட்டுகிறார் கே.பி?



புலிகள் அமைப்பின் பணம் வெளிநாடுகளில் இருக்குமிடம் எதுவென்று அடையாளம் காட்டியுள்ளார் குமரன் பத்மநாதன். கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன், புலிகள் இயக்கத்தின் முன்னாள் பிரதம ஆயுத ஏற்பாட்டாளராக இருந்தவர்.

வெளிநாடுகளில் புலிகளின் பணம் குறிப்பிட்ட சிலரது கைகளில் இருக்கின்றது எனத் தெரிவித்துள்ள பத்மநாதன், அந்தப் பணத்தை வைத்திருப்பவர்களைத் தனக்கு நன்கு தெரியும் எனவும் கூறியுள்ளார். அவர்களது குணாதிசயங்களை தான் அறிந்துள்ள விதத்தில், பணத்தை அவர்களின் கைகளில் இருந்து வெளியே கொண்டுவருவது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்கிறார் அவர்.

இது கடினமான காரியமாக இருந்தபோதிலும், அந்தப் பணத்தை எடுத்து மக்களின் புனர்வாழ்வுக்காகச் செலவுசெய்ய முயற்சிகளை தான் மேற்கொண்டு வருவதாகவும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளதாக இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# சிறுகைத்தொழில் கண்காட்சி

கிழக்கு மாகாணத்திலுள்ள சிறுகைத்தொழில் மற்றும் குகைக் கைத்தொழிலாளர்களின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியொன்று ஜுலை மாதம் 07,08,09 ஆம் திகதிகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை கிழக்குமாகாண சிறுகைத்தொழில் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள சிறுகைத்தொழில் கைத்தொழிலாளர்கள், மற்றும் சிறுகைத் தொழிலாளர்களிடையே மேலும் ஊக்கத்தினை ஏற்படுத்தவும் உற்பத்திப் பொருட்களுக்குச் சிறந்த சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார வசதியினை மேம்படுத்துவதே இக்கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## தெரிவுக்குழு இன்னொரு வாய்ப்பு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் இறுதித் தீர்வொன்றை நோக்கிப் போகாது என்று அரசாங்கம் கருதுகின்றது.

அரசாங்கம் பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கின்றது என்று இதுநாள் வரை கூறிவந்தது. இப்போது நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. அரசின் நிலைப்பாடு எதுவென்று தெரிந்த பின்பும் கூட்டமைப்பினரோ பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை இழுத்துச்செல்லவும், தொடர் நாடகமாக அரங்கேற்றவும் விரும்புகின்றனர். அதனூடாக அரசு மீது குற்றம் சுமத்தவும் வாக்குறுதிகளை அரசு உதாசீனம் செய்வதாகவும் கூறிக்கொண்டிருக்க முற்படுகின்றனர் என்ற உண்மையை அரசு புரிந்துகொண்டுள்ளது.

ஆகையால் அரசும் கூட்டமைப்பும் எதிர்காலத்தில் நம்பிக்கையோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார்கள் என்று நம்புவதற்கு இல்லை. இருதரப்பினரும் தத்தமது அரசியல் தேவைக்காக கட்டம் கட்டமாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம்.

அதனால் ஆகப்போவது எதுவும் இல்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழுவே அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பில் இறுதி இலக்கை எட்டும் என்று அரசு திட்டவட்டாகத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அந்த முயற்சி இலங்கை அரசியல் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத்தரும் என்றும் கூறியிருந்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது என்ற நடவடிக்கை அரசின் இழுத்தடிப்பு முயற்சி என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

கடந்தகாலத்தில் பல்வேறு குழுக்கள் வட்டமேசை, நீள மேசை, அனைத்துக்கட்சிக் கூட்டம் என்று பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டதையும் அவை தோல்வியில் முடிந்ததையும் மனதிற் கொண்டு இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது புரிந்துகொள்ள வேண்டியவைதான்.

இருந்தபோதும் கடந்த காலத்தில் மேற்சொன்ன குற்றச்சாட்டுக்கள் ஒருபுறமும் புலிகளின் ஆயுதச் செயற்பாடுகள் ஏற்படுத்தியிருந்த தாக்கங்களும் முயற்சிகளைச் செயலிழக்கச் செய்தன என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் புலிகளின் பயங்கரவாதத் தலையீடு முற்றாக இல்லாத நிலையிலும் பொறுப்புமிக்க பிரதிநிதிகள் சுதந்திரமாக முடிவெடுப்பதில் வெளிப்படைத் தன்மைக்கு வாய்ப்பு இருப்பதையும் பிரயோகிக்க முடியும். இன்னொரு நிலைமையானது தற்போதைய சூழலில் அரசியல் பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வொன்றைக் காணும் முயற்சிக்கு ஏற்புடையதான வழிமுறையாக இந்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழுச் செயற்பாடுகளே சிறந்ததாக இருக்கின்றன. இதை நம்பிக்கையோடு முயற்சிசெய்வது தவறல்லவே.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பான் கீ மூன் மீண்டும் பதவியில் சாதித்தது சாதிக்கப்போவது என்ன?

சிவன்

1945 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சன்பிரன்ஸ்கோ நகரில் கையொப்பம் இடப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்ட ஐக்கிய நாடுகள் சபையினுடைய, 8 ஆவது செயலாளர் நாயகமாக கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பதவியேற்றுக் கொண்ட பான் கீ முன் இரண்டாவது முறையாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கின்ற 192 நாடுகளும் பான் கீ முனை ஏகமனதாக தெரிவு செய்திருக்கின்றன.

1944 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி பிறந்த பான் கீ மூன் சுமார் 37 வருடங்களாக தென்கொரிய அரசியலில் பல்வேறு மட்டங்களிலும் செல்வாக்கு செலுத்தியிருக் கின்றார். இந்தியா, அமெரிக்கா, வியட்நாம் போன்ற நாடுகளில் கடமையாற்றியதுடன் தென்கொரியாவின் ஜனாதிபதிக்கு சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குபவரா கவும் பான் கீ முன் இருந்துள்ளார்.

இவ்வாறான நீண்ட அரசியல் பின்னணியின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஆசிய நாட்டவர் என்ற பெருமைக்குரிய பான் கீ மூன் தன்னுடைய பதவிக் காலத்தில் காலநிலை மாற்றம், பொருளாதாரம், அதிகரித்து வருகின்ற உணவுத் தட்டுப்பாடு, பெண்கள் விவகாரம் போன்ற சவால்களிற்கு முகங்கொடுப்பதற்கு உலகத் தலைவர்களை ஒன்றுதிரட்டுவதில் ஆர்வம் காட்டியிருந்தார். இதற்காக பல கலந்துரை யாடல்களையும், மாநாடு களையும் ஒழுங்கு செய்திருந்தார். இந்த மாநாடுகளில் சர்வதேச பிரதிநிதிகளின் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்திருந்தனர். இக்கருத்துக்களில் எவ்வளவு தூரம் வெளிப்படைத் தன்மை இருந்தது என்பதும் கலந்து கொண்டோர் எந்தளவிற்கு பான் கீ மூனின் இலக்கினை நோக்காகக் கொண்டு கலந்து கொண்டனர் என்பதுடன் இதுவரை காலப்பகுதியில் பான் கீ மூனின் நோக்கம் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதும் ஆராயப்பட வேண்டிய விடயங்களே.

அதைவிட ஐக்கிய நாடுகள் சபையில் செயலாளர் நாயகமாக பான் கீ மூன் அவர்கள் பதவிக்கு வந்ததன் பின்னர் சர்வதேச ரீதியில் நடைபெற்ற போர்கள், உள்நாட்டு கலவரங்கள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும், மக்களுக்கான மருத்துவ வசதியை வழங்குவதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இந்தவகையில் காஸா, பாகிஸ்தான், லெபனான், கம்போடியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் மீது பான் கீ மூனின் கவனம் திரும்பியிருந்தது.

2009 இலங்கையில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் சர்வதேச விதிமுறைகளை மீறி யுத்தம் புரிந்துள்ளதாகவும், யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் அவ்விடயத்தில் பான் கீ மூன் தனது கவனத்தை திருப்பியிருந்தார்.

எப்பொழுதுமே மேற்குலகின் தீர்மானங்களுக்கு இசைவாகவே ஐக்கிய நாடுகள் சபை இயங்குகிறது என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இந்நிலையில் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையிலும் மேற்குலகின் விருப்பங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன என்ற விமர்சனங்களும் இருக்கின்றன.

உலக வல்லாதிக்கப் போட்டியில் தென்னாசிய வலயத்தில் தங்களுடைய கரங்களை வலுப்படுத்துவதற்கு முயன்று கொண்டிருக்கின்ற அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கும் அதை தடுத்து நிறுத்தி ஆதிக்கத்தை கையகப் படுத்த முயன்று கொண்டிருக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இராஜதந்திர இழுபறியில் இலங்கை சிக்கிப் போயிருக்கின்றது. இலங்கை அரசை தமது கைப்பொம்மைகளாக மாற்றி தென்னாசியப் பிராந்தியத்தில் தமது பிடியை வலுப்படுத்த முனைகிறது மேற்குலகு. அதற்கான அஸ்திரமாக கிடைத்திருப்பது இந்தப் போர்க்குற்ற விசாரணை. நேரடியாக தலையிட்டால் இந்தியாவினுடைய நேரடி எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதால் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற

> இரண்டாவது பதவிக் காலத்திலும் உலகம் முகங்கொடுக்கின்ற இயற்கை, செயற்கை சவால்களிற்கு எதிராக உலகைத் தயார்ப்படுத்து கின்றேன் என்று பல்வேறு மாநாடுகளையும் சந்திப்புக்களையும் நடாத்த பான் கீ மூன் முயற்சிப்பார். அதேபோன்று யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளிலும் தலையிட்டு கடமைக்காக ஒருசில அறிக்கைகளை வெளியிடுவார். எனினும் மேற்குலகின் கிடுகுப்பிடி இருக்கும் வரை பான் கீ மூனினால் சுதந்திரமாக எதனையும் சாதிக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக காரியங்களை நகர்த்த முயன்று இருக்கின்றது மேற்குலகு. அவர்களின் திட்டத்திற்கு ஆமாசாமி போட வேண்டிய நிலையில் ஐ.நா செயலர் தள்ளப்பட்டுள்ளார்.

அதன்விளைவாக உருவாக்கப்பட்டது தருஸ்மனின் ஆலோசனைக் குழு. குறிப்பாக ஆலோசனைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு அதில் இலங்கை அரசின் மீது பெருமளவான குற்றச்சாட்டுகள் முன்மொழியப்பட்டுள்ளன. அதற்கு பதிலளிக்க முடியாது என இலங்கை அரசு பிடிவாதமாக இருக்கின்றது.

இலங்கையின் விளக்கமின்றி அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி எதுவும் செய்ய முடியாது என்கிறார் ஐ.நா செயலாளர்.

உண்மையிலேயே சர்வதேச போர்க்குற்ற விசாரணை இலங்கை மீது நடாத்தப்பட வேண்டுமாயின் அதற்கு உத்தரவு இடுவதற்கான அதிகாரம் ஐ.நா செயலாளருக்கு கிடையாது. இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டுமாயின் அதற்கு ஐ.நா பாதுகாப்பு சபை அல்லது மனித உரிமைகள் பேரவை அங்கீகாரம் வழங்க வேண்டும். குறித்த அமைப்புகளின் அங்கீகாரம் கிடைத்தாலும் அதனை வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகளால் இல்லாது செய்ய முடியும்.



அந்தவகையில் இலங்கையுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி வருகின்ற ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் வீட்டோ அதிகாரங்களை கைவசம் வைத்திருக்கின்றன. இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அவை தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தத் தயங்காது என்பது அவற்றினுடைய செயற்பாடுகளில் இருந்து தெளிவாகின்றது. அதேபோன்று மேற்குலகு ஆதிக்கம் செலுத்துகின்ற எந்தவொரு நடவடிக்கைகளும் இலங்கையில் நடைபெறுவதை இந்தியா அனுமதிக்காது. இந்நிலையிலேயே இலங்கை விவகாரத்தில் காலை வைத்துவிட்டு பான் கீ முன் அவர்கள் அடுத்த கட்டம் குறித்து தடுமாறிக் கொண்டிருக்கிறார். அண்மையில் சனல் -4 வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படமானது இணையங்கள் ஊடாக பட்டிதொட்டியெல்லாம் சென்றடைந்துவிட்டது. உலகெங்கும் வாழுகின்ற பாமரர் முதல் படித்தவர் வரை கோடிக்கணக்கான மக்கள் பார்த்துவிட்டனர். ஆனால் தனக்கு பார்க்க கிடைக்கவில்லை என கதை விட்டுக் கொண்டிருக்கிறார் ஐ.நா செயலர். இந்தளவிற்கு இலங்கை விவகாரத்தில் அவரின் தடுமாற்றம் தொடர்கிறது.

இந்நிலையில் அவரின் இரண்டாவது பதவிக் காலம் தொடர்பான விவகாரம் அரங்கிற்கு வந்திருந்தது. ஐ.நா.வில் அங்கம் வகிக்கின்ற 192 நாடுகளும் ஏகமனதாக அவரை ஆதரித்து தேர்வு செய்துள்ளது. இங்கு இலங்கை தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

இலங்கை மீது போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ள நிலையில் பான் கீ மூனுக்கு ஆதரவு தெரிவித்தமை தொடர்பாக இலங்கை எதிர்க்கட்சிகள் தமது அதிருப்தியை தெரிவித்திருக்கின்றன. எனினும் இலங்கை அரசின் தீர்மானத்தில் இரண்டு விடயங்களை அவதானிக்கலாம்.

முதலாவது, அங்கம் வகிக்கின்ற அனைத்து நாடுகளும் பான் கீ மூனுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற நிலையில் தாம் எதிர்ப்பை தெரிவித்தாலும் அவர் பதவிக்கு வருவதை தடுத்துவிட முடியாது. பதிலாக அவருடனான மனக்கசப்புகளை அடுத்த 5 வருடங்களுக்கு நீடிப்பதற்கே வழிவகுக்கும்.

இரண்டாவது, யாரினால் தமக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதோ அவரை ஆதரிப்பதன் மூலம் குறித்த குற்றச்சாட்டு கள் பற்றி நாம் அலட்டிக் கொள்ளவில்லை. அவற்றை முகங்கொடுக்கத் தயாராக இருப்பது போன்ற தோற்றப்பாட்டை சர்வதேசத்திற்கு கூறுவது.

ஏற்கனவே கூறியது போன்று வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகளின் ஆதரவு, இந்தியாவிற்ன வெளியுறவுக் கொள்கை என்பன இருக்கும் வரை சர்வதேச விசாரணைகள் எட்டியும் பார்க்க முடியாது என்ற நம்பிக்கையும் இலங்கைக்கு இவ்வாறான தீர்மானத்திற்கு வழிவகுத்திருக்கலாம். என்பதை மறுப்பதற்கில்லை. எவ்வாறோ ஐ.நா.வின் 2016 வரை ஐ.நாவின் பொதுச் செயலராக அங்கம் வகிப்பதற்கான அங்கீகாரம் பான் கீ மூனுக்கு கிடைத்திருக்கின்றது. இந்த இரண்டாவது பதவிக் காலத்திலும் உலகம் முகங்கொடுக்கின்ற இயற்கை, செயற்கை சவால்களிற்கு எதிராக உலகைத் தயார்ப்படுத்து கின்றேன் என்று பல்வேறு மாநாடுகளையும் சந்திப்புக்களையும் நடாத்த பான் கீ மூன் முயற்சிப்பார். அதேபோன்று யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளிலும் தலையிட்டு கடமைக்காக ஒருசில அறிக்கைகளை வெளியிடுவார். எனினும் மேற்குலகின் கிடுகுப்பிடி இருக்கும் வரை பான் கீ மூனினால் சுதந்திரமாக எதனையும் சாதிக்க முடியாது என்பதுதான் யதார்த்தம்.

# காட்டின் முக்கியத்துவம் அறியாதவர்களா எம் தலைமை



**நன்றி : இணையம்**

*அன்பார்ந்த மக்களே !*

நான் உங்களிடம் சில துரோகிகளால் மறைக்கப்பட்டுவரும் சில முக்கியமான விடயங்களை பற்றி சொல்லுவதற்காக இந்த இரத்தம் தோய்ந்த வரலாற்றின் சிதறிய மனதை உங்களுக்கு தருகின்றேன். இதனை நான் உங்களுக்கு சொல்லுவதால் எனக்கு எந்தவித தனிப்பட்ட இலாபங்களும் இல்லை. நீங்கள் இன்னும் ஏமாளி களாக இருக்கக்கூடாது என்ற நோக்கத்திற்காகவே சொல்கின்றேன்.

அதற்கு முன் நான் யார் என்பதை பதுகாப்பு காரணமாக சுருக்கமாக சொல்லுகிறேன்!!! நான் புலிகள் அமைப்பில் அதிமுக்கிய விசேட படைப்பிரிவில் முக்கிய பொறுப்பாளராக கடைசிக் கட்ட யுத்தம் வரை போராடி அண்ணனின் உத்தரவுக்கமைய மக்களோடு மக்களாக வந்து இன்று பாதுகாப்புக்காக, ஒரு நாட்டில் வாழ்ந்து வருகின்றேன்.

தற்போது அடுத்தகட்ட நகர்வுகளை செய்வதாகக் கூறுவோர், மக்களை ஏமாற்றுபவர் களாக இருப்பதனாலும் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு நல்ல ஒரு புலம்பெயர் தேச தலைமையை உருவாக்கவும், எமது நிலை இப்படி வருவதற்கு காரணம் என்ன என்று தற்போதைய நமது தலைமையாளர்கள் என்று கூறும் சிலர் உங்களிடம் மறைக்கும் சில உண்மைகளை நான் உங்களுக்கு சொல்லி மக்களாகிய உங்களை விழிப்படைய செய்வதற்காகவும் தான் இந்த தகவல்களை உங்கள் முன் வைக்கிறேன்.

இதில் நான் யாரையும் குறைகூற வரவில்லை. ஆனால் யாரால் நமது போராட்டம் இப்படி ஒரு நிலைக்கு வந்தது என்ற செய்தியை வெளிப்படுத்த வேண்டிய நிலைப்பாடு தற்போது உள்ளதாலும் நமது இந்த தலைவர்களை நம்பி அண்ணன் கட்டளைகுட்பட்டு சரணடைந்த போராளிகள் மற்றும் இன்னும் தப்பி வெளிநாடுகளில் படும் கஷ்டநிலை களை இவர்கள் கண்டு கொள்ளாது தமது சுயநலன்களுக்காக செயற்படுவதையும் வெளிக்கொணரும் முகமாகவும் தான் இதை சொல்லுகிறேன்.

இதை நான் சொல்லுவதனால் நீங்கள் நினைக்கலாம் இவருக்கு எப்படி இந்த தகவல்கள் தெரியும் என்று. ஆம் நான் 1990 ஆண்டு முதல் புலிகள் அமைப்பில் உறுப்பினராக தலைமையுடன் பல முக்கிய பொறுப்புகளில் இருந்ததன் காரண-மாகவும் கடைசி நேரத்தில் தொடர்பாடல் பரிவர்த்தனைகளிலும் ஈடுபட்டவன் என்ற அடிப்படையில் இத்தகவல்களை எதுவித மறைவும் இன்றி சொல்லுகிறேன்.

வணக்கம்.

## புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்

கிளிநொச்சி வீழ்ச்சியின் பின் புலிகள் ஒட்டுமொத்தமாக ஒரு கடற்கரைக்கு சென்று அங்கு மூன்று தசாப்தமாக நடந்த போராட்டம் உறைநிலை கண்டதற்கு பலர் பல கதைகள் சொல்லுகின்றனர். ஆனால் இது ஏன் நடந்தது? எதற்காக நடந்தது? என்பது இப்பொழுது புலிகளின் தலைமை தாங்கள் எனக் கூறுபவர்களுக்கு நன்கு தெரியும், அவர்களுடன் இந்திய மற்றும் ஐரோப்பியா உட்பட்ட சில நாடுகளுக்கும் நன்கு தெரியும். ஏன் நாம் தோற்றோம்? எதனால் நாம் தோற்றோம்? யார் நம்மை தோற்கச் செய்தது? யார் நம்மை அந்த கடற்கரைக்கு போகச்சொன்னது இவை எல்லாம் கூட அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் இப்ப நல்லவர்கள் போல் நடிக்கின்றார்கள். அந்த மர்மமான விடயங்கள் பலவற்றை நமது மக்களின் விழிப்புணர்வுக்காக சொல்லலாம் என நினைக்கின்றேன்.உங்கள் சம்மதத்தோடு.

முள்ளிவாய்க்கால் சாட்சியமற்ற களமாக மாற்றப்படுகின்றது என்பது உலகிற்கு மட்டுமல்ல நம் புலம்பெயர் தேச இப்போதைய தலைமை எனக்கூறும் பலருக்கும் நன்கு தெரிந்தே நடந்தது. புலிகள் எதற்காக இராணுவ ரீதியில் பலவீனமான ஒரு கடற்கரைக்குள் மக்களையும் போராளிகளையும் கொண்டு சென்றார்கள் என்பது பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது எனவும் கூறிவரும் இந்த தலைமைகள் சிலர் புலம்பெயர் தேச மக்களை இப்போது முட்டாள்கள் ஆக்குகின்றனர். முள்ளிவாய்க்கால் மற்றும் புதுக்குடியிருப்பை தக்க வைத்தபடி இருந்த போராளிகளுக்கு காடு சார்ந்த பல பிரதேசங்களை தக்க வைத்துக் கொள்ள தெரியாதா என்ன? கடற்கரை பக்கம் சென்றால் என்னவாகும் என அறியாதவர்களா நம் தலைமை? காட்டின் முக்கியத் துவம் அறியாதவர்களாகவா புலிகள் தலைமை இருந்தது?

ஆம். கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய பின் நாம் மிகப்பெரும் பின்னடைவை சந்தித்தது மட்டுமல்லாது போராளிகளுக்கும் தலைமைப்பீடத்துக்கும் இடையில் பெரிய விரிசலையும் அது ஏற்படுத்திவிட்டது என்று சொன்னால் தப்பில்லை. புலனாய்வு தகவல்களை துல்லியமாக சேகரித்து அத்துணை விபரமாக தலைமைக்கு எடுத்து கூறியும் அவர்கள் புலனாய்வு போராளிகளின் தகவல்களை நம்பாது புலம்பெயர் தேசக்குழி பறிப்பவர்களின் செய்திகளை நம்பியது இதற்கு முக்கிய காரணம்.

(தொடரும்...)

# கலைஞருக்குப் பதிலடி களத்தில் இளங்கோவன்

**தமிழக அரசியல்**

**ரிஷி**

**தி.மு.க.** தலைவரே, காங்கிரஸ் கட்சியை மறை முகமாகக் குத்திக் காட்டிப் பேசலாம் என்றால், நாங்கள் பேச முடியாதா? பேசக் கூடாதா? இந்தக் கேள்வியுடன் கொந்தளித்துக் கொண்டிருந்த சில தமிழக காங்கிரஸ் புள்ளிகளுக்கு, டில்லியிலிருந்து சிக்னல் வந்தேவிட்டது!



"நீங்களும் பேசலாம். ஆனால் ஆளாளுக்குப் பேசி, சிக்கலை உருவாக்க வேண்டாம். நாங்கள் சொல்லும் ஒரு நபர் மாத்திரம் தி.மு.க.வுக்கு எதிராகப் பேசட்டும் என்று டில்லி, ஒருவரை நோக்கி கையைக் காட்டிவிட்டது. அந்த ஒருவர், இளங்கோவன்!

மகள் கனிமொழியை திகார் ஜெயிலில் பார்த்துவிட்டுத் திரும்பியபின், பத்திரிகை யாளர்களிடம் கருணாநிதி, காங்கிரஸ் தி.மு.க. உறவில் விரிசல் ஏதுமில்லை என்று கூறியிருந்தார். அது, வெறும் வார்த்தைகள்தான் என்பது அவருக்கே நன்றாகத் தெரியும். உறவு, ஏதோ போனால் போகிறது என்று இன்னமும் முறியாமல் இருக்கிறது. எந்த நிமிடத்திலும் முறியலாம். இளங்கோவனையும் அதற்காகவே தயார் பண்ணிவிட்டது. இளங்கோவனுக்கு இது ஒன்றும் புதிய அனுபவம் கிடையாது. ஏற்கனவே இதில் அனுபவசாலி அவர்.

2006-11இல் தி.மு.க. ஆட்சி செய்தபோது, அவர்களுக்கு தகுதிப் பெரும்பாண்மை கிடையாது. இது காங்கிரஸைப் பொறுத்தவரை கூட்டணி ஆட்சிக்கு சாதகமான அம்சம். ஆனால் தி.மு.க., மசியவில்லை.

அதுகூடப் பரவாயில்லை. காங்கிரஸ் கட்சியினரை ஆளுங்கட்சியினர் மதிக்கக்கூட இல்லை. இதனால், தி.மு.க., வினர் மீது காங்கிரசார் கடும் அதிருப்தியில் இருந்தனர். அந்த நிலையில், தி.மு.க.,வை யும், முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் அவரது குடும்பத்தினரையும் கடுமையாக விமர்சிப்பதில், முன்னாள் மத்தியமைச்சர் இளங்கோவன்தான் முன்னணியில் இருந்தார். சில சமயங்களில், முன்னாள் முதல்வர் கருணாநிதி பற்றிய அவரது விமர்சனம் அ.தி.மு.க.வினரைவிட உக்கிரமாகவும் இருந்திருக்கிறது. ஆனால், சட்டசபை தேர்தல் வந்தது. அதிலும் தி.மு.க.வுட னான கூட்டணிதான் தொடர்ந்தது. டில்லித் தலைமையின் அறிவுறுத்தல்படி தேர்தல் நேரத்தில், தி.மு.க. மீதான விமர்சனத்தை நிறுத்தினார் இளங்கோவன். இப்போது காட்சிகள் தலைகீழாக மாறிவிட்டன.

காங்கிரஸ் கட்சியுடனான உறவை, 'கூடா நட்பு' என, கருணாநிதியும் விமர்சனம் செய்தார். இந்த விமர்சனம் டில்லியை கோபப்படச் செய்தது. ஆனால், கருணாநிதியின் விமர்சனத் துக்கு டில்லியிலிருந்து பதில் வரவில்லை.

இந்த விளையாட்டை சாதுர்யமாக விளையாட விரும்பியது டில்லி. மாநில அளவில் கருணாநிதி முன்வைத்த விமர்சனங்களுக்கு, மாநில அளவிலேயே பதில் கொடுப்பதென முடிவானது. அதற்குத்தான் இருக்கவே இருக்கிறாரே, இளங்கோவன். ஈரோட்டில் நடைபெற்ற தென்னக ரயில்வே ஊழியர் சங்க மாநாட்டில் இளங்கோவன் பேசும்போது, "ஆயிரக்கணக் கான கோடிகளை குவித்தவர், கூடா நட்பு பற்றி பேசுகிறார். மகளுக்கு சொல்ல வேண்டிய அறிவுரைகளை மற்றவர்களுக்கு கூறுகிறார். இந்த கூடா நட்புதான், அவரது மகளை சிறையில் தள்ளியது" என்று அதிரடியாகப் பேசினார். அன்றுடன் நிறுத்தவில்லை அவர்.

கருணாநிதி காங்கிரஸ் கட்சியை ஒருபுறமாக விமர்சித்துக் கொண்டு, மறுபுற மாக அதே காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியை உடைக்காமல் இருப்பதையும் கிண்டலடிக்கத் தொடங்கியுள்ளார்.

கருணாநிதிக்கு காங்கிரசுடன் கூட்டணி இல்லையெனில் என்ன நடக்கும்? கூண்டோடு சிறைக்குள் செல்ல வேண்டியிருக்கும். அதனால்தான், காங்கிரஸ் கூட்டணி தொடருமென பேசி வருகிறார் என நேரடி அடியாகவே அடித்திருக்கிறார்.

கடந்த சட்டசபை தேர்தல் பிரசாரத்தின்போது ஈரோட்டில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் கருணாநிதியும், இளங்கோவனும் ஒரே மேடையில் காட்சியளித்தனர். அந்தக் கூட்டத்தில் கருணாநிதி பேசும்போது, இளங்கோவன் என் மடியில் தவழ்ந்து வளர்ந்த பிள்ளை என்று பேசினார். அருகிலிருந்த இளங்கோவன் உணர்ச்சிவசப் பட்டு, கருணாநிதியின் மடியைத் தொட்டு வணங்கினார். இப்போது? கருணாநிதியின் மடியில் தவழ்ந்து வளர்ந்த மகள் திகார் ஜெயிலில். மகளை ஜெயிலுக்கு அனுப்பாமல் காப்பாற்றிக் கொடுக்கவில்லையே என்ற கோபம் காங்கிரஸ்மீது. 'கூடா நட்பு' என்கிறார்.

இதற்குப் பதிலடி கொடுக்க காங்கிரஸ், கருணாநிதியின் 'மடியில் தவழ்ந்து வளர்ந்த பிள்ளை' இளங்கோவனை தேர்ந்தெடுத்திருப்பதுதான் உச்சம். டில்லியின் கண்ணசைவு இல்லாமல் இளங்கோவன் இப்படிப் பேசத் தொடங்க மாட்டார் என்பது, கருணாநிதிக் கும் நன்றாகவே தெரியும். ஆனால், என்ன செய்வது? இளங்கோவனையோ, காங்கிரஸ் கட்சியையோ எதிர்த்துக் கொள்ளும் நிலையிலா அவர் இப்போது இருக்கிறார்? திகார் ஜெயில் காவலாளியைக்கூட முறைத்துக் கொள்ள முடியாத நிலையில் அல்லவா இருக்கிறார், முன்னாள் முதல்வர்!

# காசநோயினை ஆய்வு கூடங்களில் கண்டறிதல்

### 04. நுணுக்குக்காட்டிக் கவனிப்பு

01.அவதானத்துடன் பாவிக்கவும்.

02.அதிர்வுகள் அற்ற, தூசி அற்ற, உலர்ந்த இடத்தில் வைக்கவும்.

03.நேரடியாகச் சூரிய வெளிச்சம் நுணுக்குக்காட்டியில் படுவதைத் தவிர்க்கவும்.

04.நுணுக்குக்காட்டியில் ஈரலிப்புப் பிடிப்பதைத் தவிர்க்கவும்.

05.நுணுக்குக்காட்டி வில்லைகளை அதற்குரிய கடதாசியினால் பாவிக்க முன்பும், பின்பும் சுத்தப்படுத்தவும்.

06.அமிழ்த்தும் வில்லையில் இருந்து தினமும் பாவித்தபின் எண்ணெயைத் துடைக்கவும்.

07.கீழ்வில்லைச் சளிப்படலத்தைத் தொடவிடாதீர்கள்.

08.அமிழ்த்தும் வில்லையினை உபயோகிக்கும்போது நுண்சீராக்கியை மட்டும் பிரயோகிக்கவும்.

09.வில்லைகளை அதற்குரிய சுத்தப்படுத்தும் கடதாசியில் சுத்தப்படுத்தவும்.

07.இலகுவில் எரியக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**ஆ.** சளியைச் சேரிக்கும் முறை

01.நோயாளியின் ஆய்வுகூடப் பத்திரத்தைப் பெறல்.

02.ஆய்வுகூடப் பத்திரம் சரியானதா என்பது ஆய்வுகூடம் பரிசீலித்தல்.

03.ஆய்வுகூடப் பத்திரத்திலும், சளி சேகரித்த பாத்திரத்திலும் ஆய்வுகூடத் தொடர் இலக்கத்தைக் குறிப்பிடல். (பாத்திரத்தின் ஓரத்தில் தொடர் இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.)

**இ.**(ஆய்வுகூடத் தொடர் இலக்கம்.)

நோயாளி நோய்க்கிருமித் தொற்றல் உடையவரா என அறிய வரும்போது, முதல் 3 சளிச் சோதனைகளுக்கும் ஒரே இலக்கம் உபயோகிக்கப்படும். 2 ஆம் மாதத்தில் மீளவும் இருதடவை செய்யும்போது புதிய இலக்கம் வழங்கப்படும். சளி சேகரித்த பாத்திரத்தில் எழுத வேண்டும். மூடியில் ஒட்டக் கூடாது அல்லது எழுதக்கூடாது.

**ஈ.** சளியைச் சேகரிப்பதற்கான முறை

### 05. நுணுக்குக்காட்டியில் ஏற்படும் பிரச்சினைகள்

| | பிரச்சினை | காரணம் | தீர்வு |
|---|---|---|---|
| 01. | பார்வைப்புலம் மங்கலாக இருத்தல். | கொண்டென்சர் கீழே காணப்படலாம். கொண்டென்சர் மூடியிருக்கலாம். | கொண்டென்சரை உயர்த்தவும். திறக்கவும். |
| 02. | பார்வைப்புலத்தில் கடுமையான நிழல் கண் துண்டினை அசைக்கும் போது. | கண்துண்டு அசுத்தமாக இருக்கலாம். கண்துண்டில் பங்கஸ் தொற்றல். கண்துண்டில் கீறல். | சுத்தம் செய்யவும். திருத்தல். கண்துண்டு, |
| 03. | விம்பம் தெளிவில்லை. | சளிப்படலம் தலைகீழாக உள்ளமை. எண்ணெயில் காற்றுக்குமிழ். எண்ணெய்த் தடிப்பு அதிகம். | சளிப்படலம் திரும்பவும். X 100 வில்லை ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு அசைக்கவும். நல்ல தரமான எண்ணெயை உபயோகிக்கவும். |
| 04. | தாழ்வலுவில் விம்பம் தெளிவில்லை. | வில்லையில் எண்ணெய் காணப்படலாம். வில்லை மேற் பகுதியில் தூசு காணப்படலாம். வில்லை உடைந்து காணப்படலாம். | சுத்தப்படுத்தவும். சுத்தப்படுத்தவும். புதிய வில்லை தேவை. |

Dr. சி. ஜமுனானந்தா

### 06. சாயங்கள் தயாரித்தல்

1% காபோல் பியூசன், (பேசிக் பியூசன் 1 கிராம், தூய அற்ககோல் 100 மில்லிலீற்றர், பினோல் 50 கிராம், கொதித்து வடிகட்டிய நீர் 900 மில்லி லீற்றர்).

பேசிக் பியூசனைத் தூய அற்ககோலில் கரைத்து, உருகிய பீனோலை அதனுள் சேர்த்தபின் வடிகட்டிய நீரை விடவும். வடிகட்டி போத்தலில் சேமிக்கவும். தயாரித்த திகதி உட்பட விபரத்தை போத்தலில் எழுதி ஒட்டவும்.

#### 25% சல்பூரிக்கமிலம்

சல்பூரிக்கமிலம்-1 மில்லிலீற்றர், கொதித்து வடிகட்டிய நீர்-300 மில்லி லீற்றர்.

கொதித்து வடிகட்டிய நீருக்குள் மெதுவாக சல்பூரிக் அமிலத்தை விடவும். ஒரு போதும் சல்பூரிக் அமிலத்தினுள் நீரை விடக்கூடாது.

#### 01% மெதிலின் நீலம்

(மெதிலின் நீலம் 0.5% கொதித்து வடிகட்டிய நீர்- 500 மில்லிலீற்றர்)

மெதிலீன் நீலத்தைக் கொதித்து வடிகட்டிய நீரில் கரைத்து வடிகட்டவும், கண்ணாடிப் போத்தலில் சேகரிக்கவும். விபரத்தையும், தயாரித்த திகதியையும் ஒட்டவும், கரைசல் மீது சூரியஒளி படக்கூடாது. நுண்துணிக்கைகள் தோன்ற ஆரம்பிப்பின் அதனைப் பாவிக்கக் கூடாது.

### 07. சளியினைச் சேகரித்தல்.

இடம், நோயாளி இருமும்போது கிருமித்தொற்றல் அதிகம். ஆதலால் சளி எடுக்கும்போது திறந்த வெளியிலும், ஏனையவர்களில் இருந்து விலகியும் எடுக்கவேண்டும். அல்லது காற்றோட்டமான அறையில் சளி எடுத்தல் வேண்டும்.

**அ.**சளி எடுக்கும் பாத்திரம்.

01.அழிக்கக் கூடியவையாக இருத்தல் வேண்டும்.

02.தூயதாக இருத்தல் வேண்டும்.

03.அகன்ற வாயுடையதாக இருத்தல் வேண்டும்.

04.உடையக் கூடாது.

05.வடிந்து ஓடக்கூடாது.

06.சரியாகப் பொருந்தக் கூடிய மூடி இருத்தல் வேண்டும்.

01.நோயாளிகளுக்குச் சளியைப் பரிசோதிப்பதற்கான காரணத்தைக் கூறவும்.

02.எத்தனை மாதிரி தேவை எனக் கூறவும்.

03.சளியை எவ்வாறு எடுப்பது எனக் கூறவும்.

04.அடையாளமிட்ட சளி சேகரிப்புப் பாத்திரத்தை நோயாளிக்குக் கொடுத்து எவ்வாறு திறந்து மூடுவது எனச் செய்துகாட்டவும்.

05.எழுதிய பகுதியை அகற்றாமல் இருக்க விளக்கவும்.

06.எச்சிலுக்கும், சளிக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறவும். நுரையீரலில் இருந்து வரவேண்டும்.

7.சளி எடுக்கச் சிரமப்படுபவர்களுக்கு 2 மில்லிலீற்றர் சேலைன் ஆவியில் சுவாசிக்க வைப்பதால் சளியை இலகுவாக எடுக்கலாம்.

#### உடனடி மாதிரி

அடையாளமிடப்பட்ட சளிப்பாத்திரத்தினை நோயாளியிடம் கொடுக்கவும்.

* ஆழமான உட்சுவாசத்தினை 2-3 தடவை செய்யவும்.

* அடி நெஞ்சில் இருந்து இருமவும்.

* பாத்திரத்தினை வயிற்றுக்கு அருகில் கொண்டு வந்து, சளியினை அதனுள் துப்பவும்.

* பாத்திரத்திற்கு வெளிப்புறத்தில் சளி படக்கூடாது.

* எச்சில் அல்லது மூக்கு நீரினைக் கொடுக்கக்கூடாது.

* சளி போதுமானளவு வராவிடின் மீளவும் இருமி, சளியினைக் கொடுக்கவும்.

* சளிப்பாத்திரத்தினை இறுக்கமாக மூடவும்.

#### அதிகாலை மாதிரி

01.அடையாளமிட்ட பாத்திரத்தினை நோயாளியிடம் கொடுத்து விடவும்.

02.காலையில் வாயினை நீரினால் கொப்பளித்தபின் சளியினை எடுக்கவும்.

03.சூடான நீரைப் பருகுவதால் சளி வருவது சுலபம்.

#### சரியான சளி மாதிரி

01.தடித்த சளியாக இருக்கும்.

02.மஞ்சள் நிறமாக இருக்கும்.


03.போதிய அளவு இருக்கும் (2 மில்லிலீற்றர்) எச்சில், மூக்கு நீர் இராது.

(தொடரும்...)

# கண்ணதாசனின்
## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - ௦௯

174



**இப் பல்வகைக்** கருத்துக்களும் நோயினால் விரைவுற்ற கற்பனையில் எழுந்தவையல்ல. மனிதனும், எருமையும், மீனும் யாவும் அத்தனை வேறு வேறான கலங்களைக் குறிப்பாகக் கருதலாம். இத்தனைக் கலங்களும் தத்தம் சுயவடிவிற்கும், கொள்ளும் அளவிற்கும் ஏற்ப நீரை நிரப்பிக் கொள்ளும் பொருட்டு இறைவன் என்னும் கடலுக்குச் செல்கின்றன. மனித கலத்தில் நீர் மனித வடிவையும், எருமைக் கலத்தில் எருமை வடிவையும், மீன் கலத்தில் மீன் வடிவையும் பெறுகிறது. இக்கலங்கள் ஒவ்வொன்றிலும் இறைவன் என்னும் கடலிலுள்ள இதே நீர் உள்ளது. மனிதர் இறைவனைக் காணும் போது, அவனை மனிதனாகக் காண்கின்றனர். விலங்குகளிடம் இறைவனைப் பற்றிய கருத்து இம்மியேனும் உண்டாயின் ஒவ்வொன்றும் அதன் தன் சொந்த இலட்சியத்திற்கு ஏற்ப அந்தந்த விலங்காகத்தான் அவரைக் கண்டு தீர வேண்டும். ஆதலால் இறைவனை மனிதனாகக் காணுதல் நமக்குத் தடுக்க வொண்ணாதது. ஆதலால் அவரை மனிதனாக வழிபடும் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கிறோம்.

கடவுளை மனிதனாக வழிபடாதவர் இருவகையினர். அவருள் மனம் என்பதில்லாத காட்டுமிராண்டிகள் ஒரு வகையினர். மானிட எளிமைகளெல்லாம் தாண்டி அப்பாற்சென்றவர்களும், தங்களுக்கு இயல்பான மானிட சுபாவத்தின் எல்லையைக் கடந்தவர்களுமான பரமஹம்சர்கள் மற்றொரு வகையினர். அவர்களுக்கு 'பிரகிருதி' எல்லாம் தாமே ஆகிவிடுகின்றன. அவர்களே கடவுளை அவருடைய உண்மை நிலையில் வைத்துப் பூஜிக்கக் கூடும். பிற விடயங்களில் போல இரண்டு ஓரங்களும்-மடமையின் எல்லையும் ஞானத்தின் எல்லையும் ஒன்று கூடுகின்றன.

இவ்விருவரும் பூஜை புரிய வேண்டியதில்லை. காட்டு மிராண்டி தன் அஞ்ஞானத்தால் பூஜை செய்வதில்லை. ஜீவன் முக்தர்கள் (TPL பெற்றவர்கள்) கடவுளைத் தம்மிடத்தில் காண்பதால் பூஜை செய்வதில்லை. இவ்விரு நிலைகளுக்கும் இடையிலே நிற்கும் எவனேனும் கடவுளைத் தான் பூஜை செய்யப் போவதில்லை என்று கூறுவானானால் அவனிடம் விழிப்பாயிரு. மரியாதையாகச் சொல்லுவோமானால், அவன் பொறுப்பற்றுப் பேசுகிறவன் அவன் மதம் நேர்மையற்றது. அறிவற்றவர்களுக்கே ஏற்றது எனலாம்.

மானிடர்க்குரிய குறைகளைக் கடவுள் அறிகிறார். மானிட இனத்திற்கு நன்மை புரியும் பொருட்டு அவர் ஒரு மனிதராகிறார். 'தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் நான் அவதரிக்கிறேன். யுகந்தோறும் அறத்தை நிலைநிறுத்தவும், மறத்தை அழிக்கவும், நல்லோர்களைக் காக்கவும் நான் வருகிறேன்."

"முரடர்கள் மானிட உருவெடுத்து என்னை, நான் சர்வலோகங்களுக்கும் பிரபு என்பதை உணராமல் இகழ்கிறார்கள்." இதுவரை அவதாரங்களைப் பற்றி கீதையில் சொல்லப்பட்டவை. "பெரும் புயல் வரும் போதே சிறிய வாய்க்கால்களும், சாக்கடைகளும் தாம் அறியாமலே வெள்ளத்தால் நிரம்பி விடுகின்றன. அப்படியே அவதாரம் என்று உலகில் ஏற்படும் போது, பெரியதோர் ஆன்மீக வெள்ளம் உலகத்தில் பரவ, மக்கள் யாவரும் வானமெல்லாம் ஆன்மீகம் நிறைந்துள்ளதை உணர்கிறார்கள்!" என்று பகவான் இராமகிருஷ்ணர் கூறுகிறார்."

மேலே நான் குறிப்பிட்டிருப்பது சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவில் ஒரு பகுதியாகும்.

கீதையை உபதேசித்த கண்ணன் யார்? அவன் மனிதனா, கடவுளா? கடவுளை மனிதனாகக் காண்பது சாத்தியமா?

இந்தக் கேள்விகளுக்குத்தான் சுவாமி விவேகானந்தர் மேலே கண்டபடி பதில் அளிக்கிறார்.

மற்ற மதங்கள் கடவுளை மனிதரின் தூதுவராகக் காண்கின்றன.

இந்துக்கள் கடவுளையே மனிதராகக் காண்கிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் சொல்வது போல், எருமையின் கண்ணுக்குக் கடவுள் ஒரு பெரிய எருமை என்றால், மனிதனின் கண்ணுக்குக் கடவுள் ஒருமனிதர் தான். அவதார புருஷர்களை நாம் வழிபடுகிறோம்.

இராமவதாரத்தையும், கிருஷ்ணவதாரத்தையும் மனிதர்கள் என்றே வைத்துக்கொண்டாலும் கூட, அந்த இருவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அவதாரங்கள்.

அவர்களிலே கிருஷ்ணன் ஒரு ஞானாசிரியன்: இராமன் ஒழுக்கத்துக்கு இலக்கணமான பேராசிரியன்.

கடவுளை மனிதனாகப் பார்ப்பதால் தான் அவனைக் காதலியாக, காதலனாகப் பாவிக்கிறோம்.

இந்தப்பாவனையில் தெய்வத்தின் ஸ்பரூபமல்லாது விஸ்பரூபம் வெளியாகிறது.

தாயைப் பார்க்கும் மகனைப் போல ஆண்டவனை நாம் பார்க்கிறோம்.

மனிதர்கள் அணியும் ஆடைகளையே அவனுக்கும் அணிவிக்கிறோம்.

மனிதர்கள் சூடிக்கொள்ளும் மலர்களையே இறைவனுக்கும் சூட்டுகிறோம்.

அந்த மனித பாவத்தில், நம்முடைய அறிவு லயித்து விடுகிறது.

தெய்வம் என்பது எல்லாவற்றையும் கடந்தது என்ற நிலைபோய், அது நம்மோடிருக்கும் ஒன்று என்ற நிலை வந்துவிடுகிறது.

மனிதனுடைய பகுத்தறிவு தெய்வத்தைப் பக்கத்தில் காணவே விரும்பி இருக்கிறது. அந்த விருப்பத்தின் உருவங்களே அவதாரங்கள்.

அத்தகைய அவதார புருஷர்கள் பிற்காலத்தில் பிறக்கவே இல்லையா என்றால், இன்றும் பிறந்திருக்கிறார்கள் என்பதே பதிலாகும்.

ஆடி, ஓடிஅலுத்துக் களைத்து, நோய்வாய்ப்பட்டுச் சாகும் மனிதனுக்குக் காட்டுக்கு நடுவே இருக்கும் றோட்டைக் காட்டுவது போல். ஞானத்தை ஊட்டும் நல்லாசிரியர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

அவர்களில் பலர்.தங்களைக் கடவுளின் அவதாரங்கள் என்று அழைத்துக்கொள்வதில்லை. ஆனால் அவதாரங்களாகவே வாழ்கிறார்கள்.

உயர்தர மருத்துவர்களே, 'என் விதி முடிந்துவிட்டது' என்று சொல்லும் போது, உள்ளூர் மருத்துவர்கள் ஏன் கையைப் பிடித்துப் பார்க்க வேண்டும் என்பது போல, ரமண மகரிஷி இறைவன் திருவடிகளை அடைந்தார்.

தொடரும்...

# தோல்விகளையே எதிர்பார்க்கும் கூட்டமைப்பு

**அரசுக்கும்** தமிழ்க் கூட்டமைப் புக்கும் கடந்த 23 ஆம் திகதி ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

எதிர்பார்த்ததைப் போலவே பேச்சுவார்த்தை பெயரளவிலேயே நடந்து முடிந்துள்ளது. இருதரப்பு கூட்டறிக்கை ஒன்றை அரசு விரைவில் வெளியிடுமென்று கூட்டமைப்பு கூறியது. ஒருவாரமாகிய நிலையிலும் இன்னும் அரசு எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை.


பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் அரச தரப்பின் முக்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் கூறிய கருத்து கவனத்தை ஈர்க்கின்றது. அதாவது வடக்குக் கிழக்கு நிலைமைகளில் இராணுவத்தினரின் தலையீடுகள் தவிர்க்கப்பட முடியாது என்று கூறியிருந்ததாகச் செய்திகள் கூறின.

அவர் இப்படிச் சொன்னது ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்று கேட்டால் 23 ஆம் திகதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட கூட்டமைப்பினர், பெரும்பாலும் இராணுவத்தினர் மீதான குற்றச் சாட்டுக்களையே சரமாரியாகப் பொழிந்ததாகவும் தமது பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென்பதையுமே பெரிதும் வலியுறுத்தியதாகவும் தகவல்கள் கூறின.

கூட்டமைப்பின் படைத்தரப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கே அமைச்சர் பதில் வழங்கியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

இராணுவம் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு அடிப்படை ஆதாரமாக அளவெட்டிப் பகுதியில், கூட்டமைப்பினரின் கூட்டத்தில் படையினர் தாக்குதல் நடத்தியதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டையே கூட்டமைப்பினர் முன்வைத்துள்ளனர்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்குக் கூறும்போது, பேச்சுவார்த்தையில் மதிய அரசுக்கும் மாநில அரசுக்குமான அதிகாரங்கள் வரையறை செய்யப்பட வேண்டுமென்பதையும், இணைப்புச் சபை ஒன்று தேவையில்லை என்பதையும் கூட்டமைப்பு வலியுறுத் தியதாகவும் அதற்கு அரசு சரியான பதிலளிக்கவில்லை என்றும் கூறிய தோடு, அரசிடம் தமிழ் மக்களுக்கு எதைத் தீர்வாக வழங்கப்போகின்றோம்





> **கூட்டமைப்புப் படையின ருடன் நெருக்கமாவதற்கும்- அளவெட்டிச் சம்பவத்துக்கும் உள்ள தொடர்புகளும் பின்னணிகளும் மக்களுக்கு கண்மூடி வித்தையாகவே இருக்கின்றது. அதீதமான அரசு எதிர்ப்பு நிலைப்பாடு என்பது தற்போதைய இலங்கை அரசிய லில் பல்வேறு நெருக்கடிகளையும், தடைகளையும் தரக் கூடியது என்று கூட்டமைப்பு நியாயம் கூறினாலும், மக்களை அரச எதிர்ப்பாளர்களாக, அல்லது பகையாளிகளாக நிறுத்தி வைப்பதில் அரசியல் தேவை ஒன்று உண்டு என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென்பது கூட்டமைப்பின் நிலைப்பாடாக உள்ளது.**

என்ற திட்டமெதுவும் இல்லை என்றும் கூறியிருந்தார். இதற்கிடையே இன்னொரு செய்தி கூட்டமைப்பின் கபடத்தனத்தை வெளிக்காட்டி தமிழ் மக்களை ஆச்சரியத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது.

அது. இந்திய தூதரக ஏற்பாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இரகசிய சந்திப்பொன்றை நடத்தியதாகவும், அதில், கூட்டமைப்பு படைகளுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுமென சம்மந்தர் கூறியதாகவும், இச்சந்திப்பு இலங்கை அரசில் சக்திவாய்ந்த தலைமைகளுடன் கூட்டமைப்பு பேச்சுக்களை நடத்த முன்முயற்சியாக உதவுமென்றும் நியாயங்கள் கூட்டமைப்பினரால் கூறப்படுகின்றது.

இந்தக் கூற்று உண்மையென்றால் கூட்டமைப்பு தமிழ்மக்களிடம் நாடகமாடி, அரசுடன் தத்தமது காரியங்களை நகர்த்தத் தொடங்கி விட்டது என்பது புலனாகின்றது.

கூட்டமைப்புப் படையின ருடன் நெருக்கமாவதற்கும்- அளவெட்டிச் சம்பவத்துக்கும் உள்ள தொடர்புகளும் பின்னணிகளும் மக்க ளுக்கு கண்மூடி வித்தையாகவே இருக்கின்றது.

அதீதமான அரசு எதிர்ப்பு நிலைப்பாடு என்பது தற்போதைய இலங்கை அரசியலில் பல்வேறு நெருக்கடிகளையும், தடைகளையும் தரக் கூடியது என்று கூட்டமைப்பு நியாயம் கூறினாலும், மக்களை அரச எதிர்ப்பாளர்களாக, அல்லது பகையா ளிகளாக நிறுத்தி வைப்பதில் அரசி யல் தேவை ஒன்று உண்டு என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென்பது கூட்டமைப்பின் நிலைப்பாடாக உள்ளது.

கூட்டமைப்பைப் பொறுத்த வரை வெளிப்படையாக, அரச எதிர்ப்புக் கோஷங்களையும், தமக்கு அச்சுறுத்தல் உண்டு என்ற சூழலையும் தக்க வைப்பதே தமது தமிழ் தேசியத்தின் அரசி யல் என்று கூறிவருகின்றனர்.

வடக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் கூட்டமைப்பு தமக்குச் சாதகமாக நிலைமையை மாற்றியமைக்கக் கூடிய ஏது நிலை களை எதிர்பார்க்கின்றது.

அவையாவன, பேச்சுவார்த்தையில் அரசு ஏமாற்றுகின்றது. எதையும் தமிழ் மக்களுக்குத் தரத் தயாரில்லை என்ற நிலையையும், பாதுகாப்பு ஆக்கிரமிப்பு அடாவடித்தனம் செய் கின்றது என்ற சூழலையும் தக்க வைப்பதாகும்.

இவற்றைக் கைவிட்டு யதார்த் தத்தைப் பேசுவதும், நடைமுறைப் படுத்துவதும் தமிழ் தேசியத்தின் எதிர்ப்பு உணர்ச்சியை மழுங்க டித்துவிடும். தம்மையும் தூக்கி எறிந்துவிடும் என்று கூட்டமைப்பினர் அஞ்சுகின்றனர்.

ஆகவே பேச்சுவார்த்தைகள் தோல்வியடைவதும், பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுகுவதும், கூட்டமைப்பின் விருப்பத்திற் குரிய வையாகும். ஆகையால் பேச்சுக்களில், யதார்த்தத்திற்கு மாறாக கோரிக்கைகளை முன்வைப் பதும், மக்களை உசுப்பேத்தி மீண்டு மொரு நெருக்கடிச்சூழலை ஏற்படுத்த எத்தனிப்பதும் கூட்டமைப்புக்கு முக்கியமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடக் கூடாது என்ற எண்ணம் உள்ளவர்களில் முக்கியமானவர்கள் தமிழ்க்கூட்டமைப்பினர்தான். இதை ஒவ்வொரு தேர்தல் முடிவுகளும் காட்டுகின்றது. ■

# அதிரடி அய்யாத்துரை



**நாடுதழுவிய** ஒரு புதுக் கலாச்சாரம் பரவிக் கொண்டு வருகுதுங்கோ.

சட்டதிட்டங்கள் தன்ர பாட்டுக்கு சிவனே எண்டு இருந்தாலும், விரோதங்களையும், முரண்பாடுகளையும் தாங்களே கையில் எடுத்துக்கொண்டு வன்முறைத் தீர்வுக்குப் போவதுதானுங்கோ.

வெட்டிறதும், குத்திறதும், தூக்கில் தொங்கவிடுறதுமாக நாளுக்கு நாள் நாட்டில சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டு போகுதுங்கோ. உந்த நிலைமையை நீடிக்க விடுறது நல்லதில்லையுங்கோ.

நாகரிகமடைஞ்ச வரும் உலகத்தில நாம இன்னும் காட்டுவாசிகள் போல் கையில் ஆயுதங்களுடன் திரி யிறம் என்ற கூச்சம் சமூகத்தில் இல்லாமலே போகுதுங்கோ.

பிரச்சினைகளைக் கண்டு உணர்ச்சிவசப்பட எவருக்கும் உரிமை உண்டுங்கோ. அதுக்காக சட்டத்தையும் தண்டிக்கும் உரிமையை யும் எல்லோரும் கைகளில எடுக்க முடியாதுங்கோ. புரியிறவைக்கு புரியுமெண்டு நினைக்கிறேனுங்கோ. தொப்பி அளவெண்டாப் போட்டுக்கொள்ளுங்கோவன்.

**கூத்தமைப்பை** பொலி ரிக்ஸ் கட்சியாகப் பதிவு செய்ய வேணுமெண்டு குரல்கள் ஒலித்தாலும் பழைய தமிழரசுத் தூண்கள் அதைத் தடுத்துக்கொண்டே இருக்கினமெல்லோ.

அதாலை அங்கம் வகிக்கிற கட்சிகள் தங்கட தங்கட தனித்துவங்களைப் பாதுகாக்க வேணுமெண்டும், அதுக்காக ஒதுங்கியும், புலம் பெயர்ந்தும் இருக்கிற முன்னாள் உறுப்பினர்கள் தங்களுடைய தாய்க் கட்சிகள், இயக்கங்களை மீள் கட்டமைப்புச் செய்ய வேணுமெண்டும் முயற்சிக்கினமாமுங்கோ.

அண்மையில ரெலோ அமைப்பும் உதைத்தான் செய்ததாமுங்கோ. உதைப்போல் சுரேசானவரும், ஈ.பி.ஆர். எல்.எவ்வையும் ரீ பில்ட் பண்ணாமல், கூட்டமைப்புக் கூடாரத்திலேயே ஒளியிறாராமுங்கோ.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வை ரீ பில்ட் பண்ணினால், போராட்டத்தின்ர பழைய தலைகள் பலபேர் தனக்குப் போட்டியாக வந்திடுவினம் எண்டு சுரேசார் அஞ்சுகிறாராமுங்கோ. அதுக்காக நாபா தலைமையை நம்பி வந்தவையை உவருக்காக நடுத்தெருவில விடலாமோ எண்டு பழைய ஈ.பி.ஆர்.எல்.எப் தூண்கள் கொதிக்கினமாமுங்கோ.

**"தம்பி உனக்குப் பின்னால்** உலகத் தமிழினம்" எண்டொரு வாசகத்தோடை கடந்த சூன் 26 ஆம் திகதி இந்தியா மெரினா கடற்கரையில ஒரு கண்ணீர் அஞ்சலி நடந்ததுங்கோ.

வழமைபோல நெடுமாறன், சீமான், காசி ஆனந்தன் எண்டு இழவு அனு தாபிகள் வருகை தந்திருச்சினமா முங்கோ.

சும்மாவே மெரினா கடற்கரை ஜே ஜே... எண்டுதான் சனம் முண்டியடிக்கும் அதிலையும் அது ஞாயிற்றுக்கிழமை எண்டாலை சனத்துக்கு பஞ்சமாகவோ இருக்கும்.

வந்த சனம் விடுப்புக்கு வந்தவை எல்லோருக்கும் மெழுகுதிரி குடுத்து வேடிக்கை காட்டி ஈழத்தமிழர்களுக்காக எண்டதும் அது உணர்ச்சிமயமாகிட்டுதுங்கோ.

அட கடற்கரையில மெழுகுதிரி பிடிச்சுக்கொண்டு நிக்கிறதும் ஒரு இன உணர்வா எண்டு கேட்டவர்களும், தம்பிக்குப் பிறகு தமிழர்கள் நிம்மதி மூச்சு விடுகினம் எண்டதுதானா அந்த சுலோகத்தின்ர தோன்றா எழுவாய் எண்டு கேட்டவையும் சேர்ந்துதானுங்கோ அந்தக் கூட்டமாம். உதில, வை- கோ, திருமா, மருத்துவர் இவையள் மிஸ்ஸிங்குங்கோ.

# சர்வதேசம் நிகழ்த்திய ருவாண்டா துயரங்கள்

[சென்றவாரத் தொடர்ச்சி...]

**“துட்சி** கிளர்ச்சியாளர்கள் எமது அதிபரை படுகொலை செய்துவிட்டார்கள்“ என்ற அடிப்படையில் செய்தி ஹூட்டு இன மக்கள் மத்தியில் காட்டுத்தீ போலப் பரவியது.

அதுவே முழு துட்சி இனத்தவருக்கும் எதிரான கொலைவெறியாக உருவெடுத்தது. நாடு முழுவதும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன. ஹூட்டு இனவெறியர்கள் நடத்திய சோதனையின் போது மறிக்கப்பட்ட வாகனங்களில் இருந்து துட்சி இனத்தைச் சேர்ந்தவர்களைத் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டனர். அடையாள அட்டையில், இனம்: துட்சி என்று குறிப்பிட்டிருப்பதே அவர்களைக் காட்டிக் கொடுக்க போதுமானதாக இருந்தது. (அடையாள அட்டையில் இனத்தைக் குறிப்பிடும் வழக்கம் பெல்ஜிய கொலனி ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது) பெண்கள், குழந்தைகள் என்று வேறுபடுத்தாது துட்சி என்ற காரணத்திற்காகவே கொலை செய்யப்பட்டனர். சாதாரண ஹூட்டு இன மக்களும் கொலை வெறியாட்டத்தில் பங்குபெறுமாறு ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்கு சன்மானங்கள் வழங்கப்பட்டன. ஒரு கொலையைச் செய்தவனுக்கு, இன்னும், இன்னும் கொலை செய்ய வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது. இன நல்லிணக்கத்தை விரும்பிய, மிதவாத ஹூட்டுகளும் கொல்லப்பட்டனர்.

கோவை.நந்தன்

இன்று விசாரணை நடாத்தித் தண்டனை வழங்கிய ஐ.நா அமைப்பு சுமார் 10 இலட்சம் பேர் வரையான துட்சி இன மக்கள் படுகொலை செய்யப்படுவதை அன்று கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தது. ஹூட்டு இன வெறி இராணுவத்துக்கு பிரான்சும், துட்சி கிளர்ச்சிப் படைக்கு அமெரிக்காவும் ஆதரவாக நின்றன. பெரும் போராட்டம், பெரும் அழிவுகளுக்கு பின்னர் துட்சி இனக் கிளர்ச்சிப் படை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற, பெரும்பான்மை ஹூட்டு இன மக்களில் கூடுதலானவர்கள் அருகாமை நாடான கொங்கோவிற்கு அகதிகளாகச் சென்றனர். அங்கு இன்றும் இருக்கும் முகாம்களில் இன்றும் அவர்களில் பலர் அவதியுடன் வாழ்கிறார்கள். அமெரிக்காவின் ஆசியுடனான ருவாண்டாவின் துட்சி இன அரசு இன்று ஆபிரிக்காவின் இஸ்ரேலாக மாறி, கொங்கோ முதலான அண்டைநாடுகளை மிரட்டும் அமெரிக்காவின் கூலிப் படையாகவும் வளர்ந்து வருகிறது.

அன்றைய கிளர்ச்சியின் போது மூன்றே மாதங்களுக்குள் எட்டு இலட்சம் முதல் ஒரு மில்லியன் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டாம் உலகப்போரில் நடந்த யூத இன அழிப்பிற்குப் பின்னர், இன்று உலகம் ஆபிரிக்காவின் மாபெரும் இனப்படுகொலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது” என்று நெஞ்சை நெகிழ வைக்கும் உருக்கமான காட்சிகளை நேரடியாக சர்வதேச தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியும், உலகின் மழுங்கிப்போன மனச்சாட்சிகள் அன்று மௌனமே காத்தன.

ஆபிரிக்க நாடுகளில் பலதை ஆக்கிரமித்து தனது கொலனியாக்கியிருந்த பிரான்சின், ஆபிரிக்க ஆதிக்கத்தைத் துடைத்தெறியும் ஒருமறைமுகப் போராகவே அன்றைய ருவண்டாவின் துட்சி கிளர்ச்சிப் படைக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவு கருதப்படுகிறது. இன்றும் தொடரும் இந்த ஐரோப்பிய, அமெரிக்க பனிப்போர்தான் அன்றைய ருவாண்டா அழிவுக்குக் காரணம் என்பதை எந்த விசாரணையும் வெளிக்கொணராது என்பதுதான் கவலை

**“அம்புகள் மட்டுமல்ல எய்தவர்களும் தண்டனைக் குரியவர்களே என்பது எங்கும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பது வேதனை. எய்தவர்களிடமே அம்புகளுக்கு தண்டனை வழங்கக் கோருவது வேடிக்கை. நதிக்கரையில் பிறந்ததாகக் கூறப்படும் மனித நாகரிகத்தில். இனியாவது இனப்படுகொலை போன்ற காட்டுமிராண்டித்தனமான அழுக்குகள் நீட்சியடையாமல் இருக்கட்டும்.”**



கலவரத்தின்போது காவல்துறை தலைவராக இருந்த அகஸ்டின் டின்டிலியிமனா என்பவரும் குற்றவாளி என்று நடுவர் மன்றம் அறிவித்து, அவர் ஏற்கனவே சிறையில் நீண்ட காலம் இருந்ததால் அவரை விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 100 நாட்களுக்கு மேல் நடந்த இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அசோக டிசில்வா மற்றும் தக்ரிட் ஹிக்மதசியோன் கி பார்க் ஆகியோர் அடங்கிய நடுவர் மன்றம் கிட்டத்தட்ட 250 சாட்சியங்களை விசாரித்திருந்தது. 2002ம் ஆண்டு அங்கோலாவில் கைது செய்யப்பட்ட பிஸிமுங்கு இனப்படு கொலையை நேரில் நின்று நடத்தியவர் எனவும், ஒரு கல்வி நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான துட்சி இனத்தவரை நிற்க வைத்து அத்தனை பேரையும் கொன்று குவித்தவர் எனவும் சொல்லப்பட்டது. மேலும் ருவாண்டா பிரதமர் அகாதே விலிங்கியிமானாவையும் கொல்ல பிஸிமுங்கு உத்தரவிட்டார். அப்போது பிரதமரைப் பாதுகாக்க ஐ.நா. அனுப்பியிருந்த படையில் இடம் பெற்றிருந்த ஏழு பெல்ஜியம் வீரர்கள் படுகொலை செய்யப்பட்டதும் இதையடுத்து ருவாண்டாவிலிருந்து ஐ.நா. அமைதி காக்கும் படை வெளியேறியது என்பதும் குறிப்பிடத்தக்கது. தீர்ப்பு வழங்கி உள்ள நீதிபதிகள் குழுவின் தலைவர் அசோக டிசில்வா இலங்கையில் பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளானவர் என்பதும் இலங்கையில் இடம்பெற்றதும் இனப் படுகொலையே எனவும் அதுவும் சர்வதேச தீர்ப்பாயத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று எழுப்பப்படும் கோரிக்கைகளும் கவனிக்கத்தக்கது. அம்புகள் மட்டுமல்ல எய்தவர்களும் தண்டனைக் குரியவர்களே என்பது எங்கும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பது வேதனை. எய்தவர்களிடமே அம்புகளுக்கு தண்டனை வழங்கக் கோருவது வேடிக்கை.

இனக்கொலைகளை செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதால் இழப்புக்கு உள்ளான பல லட்சம் உயிர்கள் மீண்டும் வரப்போவதில்லை. உடல் உறுப்புகளையும், உடைமைகளையும், உறவுகளையும் இழந்து தவிப்போருக்கு இத்தண்டனை நிவாரணம் அளித்துவிடப் போவதில்லை. இனி வரும் காலங்களில் உலகத்தின் பிற பாகங்களில் இதுபோன்ற மிக-மோசமான கொடுமைகள் நடைபெறாமல் இருப்பதற்கும் இப்படியான அழிவுகளை மேற்குலக நாடுகள் அரங்கேற்றாமல் இருப்பதற்கும் இது ஓர் எச்சரிக்கை மணி என நம்புவோமாக.

நதிக்கரையில் பிறந்ததாக கூறப்படும் மனித நாகரிகத்தில், இனியாவது இனப்படுகொலை போன்ற காட்டுமிராண்டித்தனமான அழுக்குகள் நீட்சியடையாமல் இருக்கட்டும். ■



கலந்த யதார்த்தம்.

ருவாண்டா இனப் படுகொலைக்கு காரணம் உண்மையிலேயே இனப் பிரச்சினை தானா.....? ருவாண்டா மக்கள், காலங்காலமாக ஹூட்டு, துட்சி என்ற இன அடிப்படையில் பிரிந்து வாழ்ந்து வந்தனரா......?இது ஆயிரம் வருடகால இனப்பகையா....? ஊடகங்கள் வழி சொல்லப்படுவதை நம்பினால், மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு ஆம் என்றுதான் பதில் வரும். இந்தக் கருத்தியல் எவ்வளவு தூரம் சரி என்று, எந்த சமூக விஞ்ஞானியும் ஆராயவில்லை. இனம்(Ethnicity/ Race) என்ற சொல்லே ஒரு ஐரோப்பியக் கண்டுபிடிப்பாகும் என்பதும் முன்னிலைப் படுத்தப்படுவதில்லை.

இந்நிலையில்தான் ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலை தொடர்பாக விசாரணை நடாத்திய இலங்கை உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி அசோக டி.சில்வாவை தலைவராகக் கொண்ட ஐ.நா. சர்வதேச போர்க் குற்ற நடுவர் மன்றக்குழு, ருவாண்டாவின் முன்னாள் ஹூட்டு இராணுவத் தளபதி அகஸ்டின் பிஸி முங்குவுக்கு 30 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது. மேலும் பிரான்காய்ஸ் சேவியர் சுவானமயி மற்றும் இன் னொசன்ட் சகாஹுடு ஆகியோருக்கு தலா 20 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இராணுவத் தளபதி அகஸ்டின் பிசிமுங்



# அவலம் சுமந்த அகதிகள்

**“இனி** ஒரு நிமிஷம் கூட இஞ்சை இருக்கப்படாது. வெளிக்கிட்டு இப்பவே போயிடவேணும்.”

சகலனிடமிருந்து இப்படியான பதில் நெற்றியடியாக அக்கணத்தில் நிமிர்ந்து வரும்... என அவன் எதிர்பார்க்கவில்லை. புதுக்குடியிருப்பு தெற்குப் பகுதியை அண்டி இராணுவம் வந்திருப்பதால், இனி முன்னேறும் முயற்சி தொடங்குகையில், பரவலான ஷெல் தாக்குதல்களும், கிபிர்த்தாக்கு தல்களும் நிகழ வாய்ப்புண்டு என்ற காரணத்தினால் அவன் தன் குடும்பத்தோடு மாத்தளனுக்குப் போகவென நினைத்ததும், அதைச் சொன்னதும், அதற்கு சகலன் “போறவையெல்லாம் போங்கோ...” என்று கூறியதும் நினைவுக்கு வர, அவன் மீண்டும் சகலனை நிமிர்ந்து பார்த்தான்.

“மச்சாள்! நான் கோபமாய் சொல்லேல்லை. இனி எந்த இடத்திலும் ஷெல் வந்துவிழலாம். நீங்கள் போங்கோ. நிலைமை கொஞ்சம் இறுகிச்சுதெண்டால் நாங்கள் பிறகு வாறம்...” அவனது மனைவியைப் பார்த்து சகலன் கூறியபோது சகலனின் மனைவி பேசத் தொடங்கினாள்.

“நிலைமை இறுகும் வரைக்கும் என்ன பார்த்துக்கொண்டிருக்கிறது. அத்தான் அக்காவோடு சேர்ந்து நாங்களும் போவம். என்னால இஞ்சை இருக்கேலாது. எனக்குப் பயமாக்கிடக்குது.”

“எடி... நீயாவது பயப்படுகிறதாவது... உனக்கு உன்ர கொக்காவை விட்டிட்டு இருக்கேலாது எண்டு சொல்லு. அண்ணரும்-மச்சாளும் ஒரு ரவலிங் பாய்க்கோடை தான் வந்து நிற்கினம். அவையள் வெளிக்கிடுறது இலேசான காரியம். எங்களுக்கு அப்படியில்லை. இவ்வளவு சாமான்களையும் விட்டிட்டு வர ஏலாது. அவையள் முதல் போகட்டும். பிறகு நாங்கள் போவம்...”

சகலனின் மனைவி எதுவும் கூறவில்லை. மௌனமாக இருந்தாள்.

அவன் பங்கரை விட்டு வெளியே வந்தான். ஷெல்கள் விழுந்த இடத்தை நோக்கிப் பார்த்தபோது, இருவர் நிலத்தில் குழிவெட்டுவது தெரிந்தது. இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காக எஞ்சியவர்கள் இயங்கிக்கொண்டிருப் பதையும், இந்த எஞ்சியவர்களும் இறந்துபோக இவர்களுக்காக யார் இருக்கிறார்கள் என்பதையும் நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது.

காரணமில்லாமல் காரியமில்லை... என்ற ஆன்மீக தத்துவம் நினைவில் வந்ததும் அவன் சிந்தனை வசப்பட்டான். பெரியப்புவோடு கைவேலிக்குப் போகும்போது மனதில் எழுந்த அந்த எண்ணங்கள் மீண்டும் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தன.

ஏதோ ஒரு சக்தி ஏதோ ஒரு காரணத்துக்காக ஒருவனை இயக்க ஆரம்பிக்கும் என்பதையும், அது கைவேலியில் கண்ணாரக் கண்டு அனுபவித்து வந்ததையும் அவன் நினைத்துப் பார்க்கிறான். அவனுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. தானும், பெரியப்புவும் உயிரோடு மீளுவம் என்று அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. மீண்டு உயருடன் தப்பி வந்திருப்பதும் அந்தச் சக்தியின் செயற்பாடே எனவும், அந்தச் சக்தி மூலம் இனி நிகழப்போகும் சம்பவங்கள் யாதாக இருக்கும்...? எனச் சிந்தித்தவண்ணம் இருக்கையில், திடீரென அழுகுரல்கள் பலமாக ஒலிக்கத் தொடங்க, அவன் அத்திசை நோக்கிப் பாரத்தான்.

இறந்துபோன கர்ப்பிணிப் பெண்ணையும் வேறு இருவரையும் வெட்டிய குழியில் இறக்குவதையும், அதைக்கண்ட உறவினர்கள் ஓலமிடு வதையும் கண்டான். அவனது உணர்வுகள் அந்த நிமிடத்தில் மரத்துப்போய் இருந்தன. ஆசார அனுட்டானங்கள் எதுவுமின்றி கொள்ளியுமில்லாமல், குடமுமில்லாமல் குழிக்குள் போகும் நிகழ்வுகள்... அங்கேறும் அளவுக்கு ஒவ்வொரு வாழ்வும் அலங்கோலமாகி அவலப்பட்டுப் போயிருப்பதை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

நாளைக்கு எனக்கும், எனது குடும்பத்திற்கும் இந்த நிலை வரலாம்...? எனச் சிந்தித்தவாறே அந்தப் பகுதி மீது பார்வையைச் சுழலவிட்டான். இடம்பெயர்ந்து வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது தரப்பாள் வீடுகளைப் பிடுங்கிக்கொண்டிருந்தார்கள். கர்ப்பிணிப் பெண் வயிறு நசுங்கிய நிலையில் கிடந்த கோலம் அவர்களைக் கலக்கத்திற்குள்ளாக்கிவிட்டது போலும். அச்சம் நிறைந்த முகங்களுடன், அருகில் சாவோலம் நிகழ்வதைப் பொருட்படுத்தாது, அவர்கள் அவசரம் அவசரமாக தங்கள் சாமான்சக்கட்டுக் களைக் கட்டுவதில் மும்முரமாக இருந்தார்கள். பழந்துணியொன்றினால் போர்த்து மூடப்பட்டிருந்த புலிச்சீருடைப் பொடியனின் உடல் மீது இலையான்கள் மொய்த்துக்கொள்ளத் தொடங்கின. அருகில் ஒரு வயோதிபர் காய்ந்து போன தென்னம்பாளையொன்றினால் இலையான்களை விரட்டும் முயற்சியில் செயற்பட்டுக்கொண்டிருந்தார்.



வானம் வெளிர் நீலமாக இருந்தது. அதனிடை மேகக் கூட்டங்கள் இல்லாததினால் பகலவனின் வெப்பநிலை பூமியெங்கும் பரவியிருந்த போதும், இடைக்கிடை வடதிசை நோக்கி வீசும் காற்றால் சுவாத்தியம் கொஞ்சம் சுகமாக இருந்தது. தென்னந்தோப்பின் மேற்குப்புறத்தில் மேய்ச்சல் மாடுகள் பாதைமாறிவந்து குழுமியிருந்தன. அதனிடையே தாயைத் தவறவிட்ட இளங்கன்று ஒன்று பெருங்குரலாய் கத்தியபடியிருந்தது.

அவன் திரும்பி கன்று கத்தும் பக்கம் பார்த்தான். கன்றைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ‘எந்த இடத்தில மனிசரைப் போல ஷெல் பட்டு தாய்ப்பசு செத்து நாறுதோ...’ என நினைத்தவன் கிணற்றடிக்குச் சென்று வாளி நிறையத் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வந்து அந்தக் கன்றின் முன்வைத்தான். கன்றும் தண்ணீர்த்தாகத்தில் கத்தியது போன்று வாளிக்குள் இருந்த தண்ணீரின் முக்காப்பங்கினை குடித்துவிட்டு, அவனை நிமிர்ந்து பார்த்த நிலையில் தனது நாக்கினால் தன் அலகினை வலது-இடதுபுறமாக நக்கிக்கொண்டிருந்தது. அவனுக்கும் அதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. வாஞ்சையோடு அதன் நெற்றிப் பொட்டினைத் தடவ, அக்கன்று அவனது கைகளையும் நக்கிவிட்டு தனது கூட்டத்தோடு போய்ச்சேர்ந்துகொண்டது.

அவன் வாளியை எடுத்துக்கொண்டு வந்து மீண்டும் கிணற்றடியில் வைத்து விட்டு முற்றத்துக்கு வந்தபோது, ஒரு இளம் வயதுடையவன் தோளில் துப்பாக்கியுடன் மிரட்சியும் சோகமும் குடிகொண்ட முகத்தோடு நிற்பதைக் கண்டான். அவனுக்குத் துவக்கைக் கண்டதும் கோபம் வந்துவிட்டது. நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். நல்லவேளை! வானத்தில் ‘வண்டு’ தென்படவில்லை.

“ஏன் தம்பி துவக்கோடை வந்தனி? உனக்கிப்ப என்ன வேணும்? அவனது வார்த்தையில் சினம் கொப்பளித்தது.

“பொறுப்பாளர்மாரில பெரும்பாலான ஆட்கள் குடும்பத்தோட ஒதுங்கி நிற்க, தனிக்கட்டையள் நாங்கள்தான் தலைகுடுக்க வேண்டிக்கிடக்குது. எவ்வளவோ விசுவாசமாக இயக்கத்துக்கு வேலை செய்த எனக்கு, இப்ப எல்லாம் வெறுத்துப்போச்சு. வீடுவீடாகப் பிள்ளையளைப் பிடிக்க வெளிக்கிட்டதால துவக்கு கொளுவியிருக்கிற பொடிபொட்டையளை சனங்கள் எரிச்சலாப் பார்க்கிற நிலை வந்திருக்குது. என்னால அந்தப் பார்வையைத் தாங்கேலாதாம். ஏனெண்டால் நான் இயக்கத்துக்கும், அண்ணைக்கும் விசுவாசமாக வேலை செய்தவன். இப்ப நடக்கிற ஊத்தைத்தனமான வேலையளுக்கு நான் உடந்தையாயிருக்க விரும்பேல்லை.”

துவக்கோடு வந்தவன், சகலனின் பெயரைக் கூறி “அவர் நிற்கிறாரா?” எனக் கேட்டபோது, அவன் பங்கர் வாசலை நோக்கி நடந்தான். வாசலில் நின்றபடி சகலனிடம் விடயத்தைக் கூறியபோது, சகலன் அந்த இளம் வயதுடையவனை பங்கருக்குள் வரும்படி பணித்தான்.

சகலனின் தூரத்து உறவுமுறையான அந்த இளம் பொடியன் துவக்கோடு பங்கருக்குள் நுழைந்தான். பொடியனுக்குப் பின்பாக அவனும் உள் நுழைந்து ஒரு ஒதுக்குப்புறமாக அமர்ந்துகொண்டான்.

துவக்கோடு வந்தவனை சகலனால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால் அந்தப் பொடியனோ சகலனையும் சகலனின் மனைவியையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, “சித்தப்பா... சித்தி...” என்று கூறியபடி... அழ ஆரம்பித்தான்.

அவனும்-அவளும் எதுவும் கூறாது மௌனமாக இருந்தார்கள். பங்கருக்குள் தாயம் விளையாடிக்கொண்டிருந்த சகலனின் பிள்ளைகளும் தங்கள் விளையாட்டை நிறுத்திவிட்டு, வந்தவனை வேடிக்கை பார்க்கத்தொடங்கினார்கள்.

வந்தவன் யார் என்பதை அறிய முடியாது திண்டாடிய சகலன், சில விநாடிகளின் பின்பு ஞாபகம் வரவே ஆச்சரியப்பட்டுப்போனான்.

“அட! நீ சீராளனல்லோ...” சகலன் கேட்டான்.

“ஓம்... சித்தப்பா...” வந்தவன் பதில் கூறினான்.

“உதென்னடா உன்ர கோலம்...?” சித்தியும் வியப்புத் தொனிக்க வினவினாள்.

“என்ன நடந்தது? இப்ப எங்கை அடிபாட்டில நிற்கிறாய்...?” சகலனின் கேள்விக்கு, வந்தவன் நிமிர்ந்து பார்த்துவிட்டுக் கூறிய பதில் அனைவரையும் திகைப்புக்குள்ளாக்கியது.

“நான் இப்ப அடிபாட்டில இல்ல. இயக்கத்தை விட்டிட்டு ஓடிவந்திட்டன். என்னால இனி ஏலாது.”

“ஏன்ராப்பா...?” சகலன் எரிச்சலும் அதிர்ச்சியுமாய்க் கேட்டான்.

“அங்கை என்ன நடக்குதெண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் கிடக்குது. சாப்பாடு ஒழுங்காக இல்லை. முக்கியமான ஆட்கள் எல்லாரும் ஒதுங்கி நிற்க நாங்கள்தான் அடிபட வேண்டிக் கிடக்குது. ஒரு கிழமை, ஒரு மாதப் பயிற்சிக்காரரைக் கொண்டு வந்துவிட்டால், அவங்கள் ஆமி அடிக்கிற ஒரு ஷெல் அடியோடை அலறிப்புடைச்சு ஓடுறாங்கள். நாங்கள் மூண்டுவருசம். ஆறுவருசம் பயிற்சி எடுத்தனாங்கள். அதாலதான் ஜயசிக்குறு, ஆனையிறவு, கிளிநொச்சி அடிபாட்டில தாக்குப்பிடிச்சு நிற்கக் கூடியதாயிருந்தது. இப்ப அப்படியே நடக்குது. பொறுப்பாளர்மாரில பெரும்பாலான ஆட்கள் குடும்பத்தோட ஒதுங்கி நிற்க, தனிக்கட்டையள் நாங்கள்தான் தலைகுடுக்க வேண்டிக்கிடக்குது. எவ்வளவோ விசுவாசமாக இயக்கத்துக்கு வேலை செய்த எனக்கு, இப்ப எல்லாம் வெறுத்துப்போச்சு. வீடுவீடாகப் பிள்ளையளைப் பிடிக்க வெளிக்கிட்டதால துவக்கு கொளுவி யிருக்கிற பொடிபொட்டையளை சனங்கள் எரிச்சலாப் பார்க்கிற நிலை வந்திருக்குது. என்னால அந்தப் பார்வையைத் தாங்கேலாதாம். ஏனெண்டால் நான் இயக்கத்துக்கும், அண்ணைக்கும் விசுவாசமாக வேலை செய்தவன். இப்ப நடக்கிற ஊத்தைத்தனமான வேலையளுக்கு நான் உடந்தையாயிருக்க விரும்பேல்லை.”

வந்தவன் அழுதழுது கூறிக்கொண்டி ருக்க, அவனைச் சுற்றிவர இருந்தவர்கள் வாயடைத்துப் போயிருந்தார்கள்.

சகலனும் என்ன பதில் கூறுவதென்பது தெரியாமல் திகைத்துப்போன நிலையில், வந்தவனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

“கேப்பாப்புலவிலயிருந்து தருமபுரம் வரை ஆமிக்காரர் வில்லுத்தகடு வளைஞ்சு நிண்டமாதிரி நிற்கிறாங்கள். ஊடறுத்து அடிக்கிறது இனிக் கஷ்டம். பெரும்பாலான தளபதிகளுடைய பேச்சு மூச்சைக் காணேல்லை. உள்ளுக்கை என்ன நடக்குதெண்டது ஒருத்தருக்கும் தெரியாமல் கிடக்குது. ஆமிக்காரனிட்டை உயிரோடை பிடிபடுகிறதை நினைச்சுப் பார்க்கேலாமல் கிடக்குது. அதால நான் விட்டிட்டு ஓடிவந்திட்டன். இயக்கத்தை விட்டிட்டு ஓடின ஆட்களை தேடித்திரியிறாங்கள். எனக்கு எதுவும் நடக்கலாம். அதுக்காகத்தான் உண்மை நிலைவரத்தை நம்பிக்கை யான ஒருவரிட்டை சொல்லிப்போட்டுப் போவம்.... எண்டு உங்களிட்டை வந்தனான். சொல்லியாச்சு... நான் வெளிக்கிடுறன்...” என்று கூறிவிட்டு வந்தவன் புறப்பட ஆயத்தமாகியபோது சகலன் அவனைத் தடுத்தான்.

“நில்லடாப்பா. ஏதேனும் சாப்பிட்டிட்டுப் போவன்...”

போனவன் திரும்பிவந்து சகலனை ஒரு பார்வை பார்த்தான். பார்த்துவிட்டு சகலனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான்.

அந்தக் கேள்வி....?

(அவலம் தொடரும்...)






# சிந்தித்து செயற்படு!

காடுமேடெல்லாம் அலைந்து, திரிந்தும் யானைக்கு அருந்த ஒரு சொட்டு நீர் கூட கிடைக்கவில்லை.

கோடைகாலமாக இருந்ததால் எல்லா நீர்நிலைகளும் வறண்டு போய் கிடந்தன.

அப்போது ஒரு கிணறு தென்பட்டது. அதன் அருகே வந்து எட்டிப் பார்த்தது, யானை. சிறிதளவு நீர் இருப்பதைக் கண்டது. அதை எப்படி குடிப்பது என்று தெரியாமல் தவித்தது.

யானையின் நடவடிக்கையை அங்கிருந்த காகம் ஒன்று பார்த்துக் கொண்டிருந்தது. அது யானையைப் பார்த்து, “யானை யாரே, எங்கள் முன்னோர் ஒருவர் ஒரு ஜாடியில் சிறிதளவு நீர் இருப்பதைக் கண்டார். அது மேலே வர ஜாடியினுள் சிறுசிறு கற்களைப் போட்டு வரவழைத்துக் குடித்தார். அவர் ஜாடியில் இருந்த நீரைக் கற்களைப் போட்டு மேலே வரவழைத்ததைப் போல, நீங்களும் கிணற்றில் உள்ள நீரை பெரிய பெரிய கற்களைப் போட்டு மேலே வரவழைக்கலாமே?” என்று திட்டம் கொடுத்தது.

இதைக் கேட்டவுடன், யானையும் பெரிய பெரிய கற்களைக் கொண்டு வந்தது. அவற்றை எல்லாம் கிணற்றில் போட்டது. நீர் மேலே வந்துவிட்டதா என்று அவ்வப்போது எட்டிப் பார்த்தது. ஆனால், பாவம், யானை. சிறிதளவு தெரிந்த நீர் கூட இப்போது தெரியவில்லை. நீரெல்லாம், கற்களால் சூழப்பட்டு மூடிக்கிடந்தன.

அப்போது அங்கே வந்து சேர்ந்தது குட்டியானை. அது தாய் யானையின் செயலை அறிந்து கோபம் கொண்டது. “ஜாடியில் இருந்த தண்ணீருக்கும், கிணற்றில் இருந்த தண்ணீருக்கும் உங்களுக்கு வேறுபாடு தெரியவில்லையா? கற்களைப் போட்டால் கிணற்றுத் தண்ணீர் எப்படி மேலே வரும்? கயிற்றையும், வாளியையும் தயார் செய்து அல்லவா நீரை மேலே கொண்டு வந்து குடித்து இருக்க வேண்டும்! கேவலம், ஒரு காகம்... உங்களை முட்டாளாக்கிவிட்டதே?” என்று தன் ஆதங்கத்தை, தாய் யானையிடம் கொட்டித் தீர்த்தது, குட்டி யானை.

“செல்லமே, நீ சொன்னதும் தான் எனக்கு உண்மை புரிந்தது. நான் தான் அவசரப்பட்டு இப்படி முட்டாள்தனமான காரி யம் பண்ணிவிட்டேன். யார் எதைச் சொன்னாலும் அப்படியே நம்பக்கூடாது என்ற பாடத்தை, இப்போது புரிந்து கொண்டேன். காகம் சொன்ன வழி சரியா, தவறா என்று சிந்தித்து இருந்தால், எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது” என்ற யானை, மரத்தின் மேல் காகம் இருக்கிறதா என்று பார்த்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட காகம் யானைக்கு அஞ்சி பறக்கத் துவங்கியது.

கதை சொல்லும் நீதி: யார் எதை சொன்னாலும், அதை அப்படியே நம்பி விடக்கூடாது. அதுசரியா, தவறா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் காரியங்களை சிறப்பாக செய்ய முடியும்

**வெற்றியைவிட தோல்விதான் அதிக பாடங்களை கற்றுத் தருகிறது.**

கார்ல் மெனிக்கர்

## வாரம் ஒரு திருக்குறள்




**கூடா ஒழுக்கம்**

**“நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.”**

மனதில் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தவரைப்போல் வஞ்சனை செய்து வாழ்கின்றவரைப்போல் இரக்கமற்றவர் வேறு எவரும் இல்லை.

**குறள்:276**

## அலைகள் ஓய்வதில்லை ஏன்?



கடல் நீர் செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் அசைந்து கொண்டே இருக்கிறது. இதற்கு புவிச்சுழற்சி, புவிச்சுற்றுகை, சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசைகள் என்று பல காரணங்களைச் சொல்லலாம். புவி தனது அச்சில் மேற்கு, கிழக்காக தன்னைத்தானே சுற்றுவதற்கு ‘புவிச்சுழற்சி’ என்று பெயர். அப்போது மேற்பரப்பில் உள்ள கடல்கள் அசைவுக்கு உட்படுகின்றன. புவிச்சுற்றுகை என்பது சூரியனைச் சுற்றி வருகின்ற நிலை. அப்படிச் சுற்றி வரும்போது, மத்திய அகலக்கோட்டில் இரண்டு தடவைகளும், மகர, கடக கோடுகளில் ஒவ்வொரு தடவையும் சூரியன் உச்சம் கொடுக்கிறது. சூரியக் கதிர்வீசலின் சாய்வு வேறுபாட்டால், பூமிக்குக் கிடைக்கும் வெப்பத்தின் அளவிலும் மாற்றங்கள் உண்டாகின்றன. இதனால் ஏற்படும் அமுக்க வேறுபாடுகள் காற்றின் வேகத்திலும், திசையிலும் மாற்றங்களை உண்டாக்குகின்றன. இதனால், காற்றில் உந்துதல் ஏற்பட்டு நீர் அசைகின்றது.

சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசைகளால் புவியில் வற்றுப் பெருக்குகள் ஏற்படுகின்றன. வற்றுப் பெருக்கு என்பது நீர்மட்டம் உயர்ந்து, தாழ்வதைக் குறிக்கிறது. பூமி சந்திரனையும், சந்திரன் பூமியையும், சூரியன் இந்த இரண்டையும் ஈர்க்கின்றன.

பூமி, சந்திரன், சூரியன் ஆகிய மூன்று கோள்களும் அமாவாசை, பௌர்ணமி தினங்களில் ஒரே நேர்கோட்டில் வருகின்றன. அதனால், இக்காலங்களில் வற்றுப் பெருக்கு உயர்வாக இருக்கிறது. எரிமலை சீற்றங்கள், புவி நடுக்கம், பனி உருகுதல் போன்றவற்றாலும் கடல் நீரில் அலைகள் உண்டாகின்றன.

## பள்ளிக்கூடம் திறந்தாச்சு...



பள்ளிக்கூடம் திறந்தாச்சு
பாலகர் பள்ளியில் சேர்ந்தாச்சு!
ஆசிரியர் கூட வந்தாச்சு
அமைதியாய் வகுப்பும் நடந்தாச்சு!

பாடம் நடத்தத் தொடங்கியாச்சு
பாலகன் நானும் படிச்சாச்சு!
வீட்டுப்பாடம் தந்தாச்சு
விரும்பி அதையும் முடிச்சாச்சு!

அன்பும், பண்பும் கற்றாச்சு
அறிவால் ஆற்றல் வளர்ந்தாச்சு!
ஆசிரியர் சொல்லே வழியாச்சு
அகிலம் ஆள தெரிஞ்சாச்சு!

மாணவர் நண்பா நீயாச்சு
நானும் உனக்குத் துணையாச்சு!
பெற்றோர் பேணப் பொறுப்பாச்சு
பேணும் உலகம் உயர்வாச்சு!

## பிலடெலி என்றால் என்ன?

தபால் தலை சேகரிப்பு கலையைத் தான் ‘பிலடெலி’ என்கின்றனர். இதை சேகரிப்போர் ‘பிலடெலிஸ்ட்’ என்று அழைக்கப்படுகின்றனர். ‘பிலாஸ்’ என்றால் விருப்பம். ‘அட்டேலியா’ என்றால் வரி ரசீது என்று அர்த்தம்.






14ஆம் நூற்றாண்டிலேயே தபால் நடைமுறை பழைய பாபிலோனியப் பேரரசில் இருந்தது. பின்பு ஸ்டாம்ப் நடைமுறைக்கு வந்தது. 19ஆம் நூற்றாண்டில் பிலடெலி கலை தொடங்கியது. இங்கிலாந்து தபால் தலையில், நாட்டின் பெயர் அச்சிடப்பட்டிருக்காது. பூடான், தாய்லாந்து நாடுகள் 3டி தபால் தலைகளை வெளியிட்டு அந்நிய செலாவாணியைப் பெருக்குகின்றன. சில நாடுகளில் பாதியாக வெட்டி உபயோகப்படுத்தும் வகையில் தபால்தலைகள் வெளியிடப்படுகின்றன. இதற்கு ‘பைசெக்ட் ஸ்டாம்ப்’ என்று பெயர்.

முதன்முதலில் ஸ்டாம்ப் வெளியிட்ட நாடு இங்கிலாந்து. 1840இல் அரசி விக்டோரியாவின் படத்துடன் வெளியிடப்பட்டது. 7 ஆண்டுகளுக்குப் பின்புதான் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் வண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்..

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.07.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.896
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 894

**பரிசுக்குரியவர்:** ச.தாட்சாயினி, யாழ்/சுழிபுரம் வடக்கு, ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம்.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. ச.தபிஷன், வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்.
02. ஜதுஷா,செட்டிகுளம். வவுனியா.
03. எம்.கீதவாணி, தம்பலகாமம், திருகோணமலை.
04. கோ.பிரதீபன், தாழ்வுபாடு, மன்னார்.
05. ஜே.குலோத்துங்கன், ஜெயந்திநகர், கிளிநொச்சி.
06. கே.சுகுணா, வாழைச்சேனை, மட்டக்களப்பு.
07. ஆர்.பிருந்தா, பிரதானவீதி, நுவரெலியா.
08. எம்.தனுஷிகன், மாலுசந்தி, பருத்தித்துறை.

## தகவல் களஞ்சியம்

*சீமெந்தைக் கண்டுபிடித்தவர் - ஜோஸப் ஆஸ்ப்டின் (பிரிட்டன்)

*பன்னாட்டுக் கூட்டுறவு ஆண்டு - 2012

*விலங்குகளின் நடத்தைப் பற்றிய ஆய்வைப் படிக்கும் பிரிவு - எதோலொஜி

*பக்ரீரியாவைக் கண்டறிந்தவர் - ஆன்டன் வான் லீவன்ஹுக்

*திறந்த விதையுடைய பூக்கும் தாவரங்களின் வகை - ஜிம்னோஸ்பெர்ம்கள்

*மேதைகளின் மேதை என்று அழைக்கப்படுபவர் - லியானார்டோ டாவின்சி

*ஒளிமிகுந்த கோள் - வெள்ளி.

*வானத்தில் இருந்து பார்க்கும்போது வானவில் முழு வட்டமாகத் தெரியும்.


* நவீன ஓவியக்கலையின் தந்தை என்று அழைக்கப்படுபவர், பிகாசோ.

*மோனாலிசா ஓவியத்தில் உள்ள பெண்ணுக்கு கண் புருவங்கள் கிடையாது.

* கழுதைப்புலி, நாய் இனத்தைச் சேர்ந்தது.

* ஈசலின் வாழ்வு ஒருநாள் மட்டுமே.

## கண்டுபிடியுங்கள்




**எங்கள் உள்ள கட்டங்களில் வரவேண்டிய பகுதிகள் தனித்தனியாக சிதறிக் கிடக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து சரியாகப் பொருத்துங்கள்.**

# காலை உணவை தவிர்க்காதீர்கள்!




ஒவ்வொரு வேளை உணவும் உடலுக்கு அவசியமானதாகும். அதிலும் காலை உணவு முக்கியமானது.

அதாவது காலை உணவு உடலுக்கும், மூளைக்கும் சிறந்த ஊட்டச்சத்தாகும். காலை உணவு சாப்பிடா விட்டால் மூளை சுறுசுறுப்பை இழப்பதால் நீங்களும் சோர்வடைந்து விடுவீர்கள். மேலும் இடைவேளை நேரத்தில் தேவையில்லாமல் எதையாவது சாப்பிடத் தூண்டும். பிறகு மதியச் சாப்பாடு சாப்பிட வேண்டிய நேரத்தில் பசியின்மையும், சலிப்பும் ஏற்படும். இதனால் மதிய சாப்பாடும் தடைப்படலாம்.


சிலர் காலை சாப்பாட்டை குறைப்பதன் மூலம் உடல் எடையை கட்டுப்படுத்தலாம் என்று நினைப்பதுண்டு. தவறாமல் காலை உணவை சாப்பிட்டாலே உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும் என்பதுதான் உண்மை.

காலையில் பணிகள் செய்யத் தொடங்குவதால் உடலுக்கு புரதம் மற்றும் நார்ச்சத்து அவசியம். எனவே கொழுப்பு குறைந்த மற்றும் புரதம் நிறைந்த உணவுகளை உண்ணலாம். முட்டை, பீன்ஸ், பால் பொருட்களை சாப்பிடலாம். முளைகட்டிய தானியம், கொட்டை வகைகள், காய்கறி மற்றும் பழங்களும் காலையில் சாப்பிட ஏற்றது.

**உடலின்** வளர்ச்சியில் நாளமில்லாச் சுரப்பிகளில் சுரக்கும் ஹோர்மோன்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றில் தைரொக்சின் என்னும் ஹோர்மோன், உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி போன்றவற்றிற்கு பயன்படுகிறது. தைரொக்சின் சுரப்பதற்கு அயோடின் தேவைப்படுகின்றது. உடலில் அயடீன் குறையும்போது தைரொய்ட் சுரப்பும் குறையும். எனவே, சுரப்பினை அதிகப்படுத்த சுரப்பிகள் பெரிதாகும். இதனால், முன் கழுத்து கழலை ஏற்படுகின்றது. இதனுடன் உடல் பருமனாகும். மலச்சிக்கல், காலில் வீக்கம் போன்றவை ஏற்படும். நினைவாற்றல் குறைதல், பெண்கள் பூப்பெய்ய தாமதமாகுதல், மூட்டு வலி உண்டாகுதல் போன்றவை




# தைரொய்ட் பிரச்சினைகள்




நமது தாடையின் கீழ்ப்புறமாக அமைந்த தைரொய்ட் சுரப்பிகளிலிருந்து சுரக்கின்றது. தைரொய்ட் சுரப்பியில் பாதிப்பு ஏற்பட்டால் பல வகையான நோய்கள் வரக் கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

பலரும் கழுத்து வீங்குவதை தைரொய்ட் சுரப்பியின் பாதிப்பாகக் கருதுகின்றனர். சில நேரங்களில் தாடையின் கீழ்ப்பகுதியில் உள்ள நிண நீர் முடிச்சுகள் நோய் தாக்குதலின்போது வீக்கமடைந்து மிகுந்த வலியை ஏற்படுத்தும். கழுத்து வீங்கக்கூடிய தைரொய்ட் பிரச்சனையானது குறை தைரொய்ட் என அழைக்கப்படுகிறது. இது தவிர மிகை தைரொய்ட், லிங்குவல் தைரொய்ட், மீடியா தைரொய்ட் போன்ற பிற தைரொய்ட் குறைபாடுகளும் உள்ளன.


நாக்கின் பின்பகுதியில் கட்டி போன்று ஏற்படுவதை லிங்குவல் தைரொய்ட் என்பர். சிலருக்கு மார்புக் கூண்டுக்குள் மீடியா ஸ்டெர்னல் தைரொய்ட் இருக்கும். இதனால், மூச்சுத்திணறல் ஏற்படும். குழந்தைப் பிறப்பைத் தடுக்கும் மாத்திரைகள் தைரொய்ட் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

தைரொய்ட் சரிவர

ஏற்படும். இதனை வராமல் தடுக்கவே அயடீன் கலந்த உப்பினைப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தப்படுகின்றது.

மேலும், அவர்களின் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. தைரொய்ட் நோய்களில் மிக ஆபத்தான ஒன்று கிரேவ்ஸ் அல்லது அஷிமோட்டா தைரொய்ட் நோயாகும். இந்நோயால் பாதிக்கப்படுபவர்களின் தைரொய்ட் சுரப்பி அவர்களது உடலில் எதிரியாகவே செயற்படுகிறது. இதனால், உடல் உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும் தைரொய்ட் நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

தைரொய்ட் கட்டிகளை தொடக்க நிலையில் கண்டறிந்துவிட்டால் எளிதாக கட்டுப்படுத்திவிடலாம். தைரொய்ட் பிரச்சினையை தைரொய்ட் அப்டேக் பரிசோதனை, ஸ்கேன் போன்றவை மூலம் கண்டறிந்து கொள்ள முடியும்.



# 60 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**மல்லா** என் கேள்விக்குப் பதில் சொன்னான்.

"எம்மைவிட எம் எதிரிகள் பலசாலிகள். ஆனாலும் கோழைகள். பலசாலிகளாக இருப்பது அதிகாரம் கையில் இருக்கிறதல்லவா அதனால்தான். ஆட்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறார்கள்."

மல்லா சொன்னதும் எனக்குள் இருந்த நம்பிக்கையானது ஆட்டம் கண்டது மாதிரியாகிவிட்டது.

"அப்படியானால் நம்மால் அவர்களுடன் சண்டையிட முடியாதா?" என்று கேட்டேன். என்குரல் தொய்ந்து விட்டது.

"சேச்சே பயந்துவிட்டாயா என்ன? எறும்பு மிகவும் சின்னதுதான். யானை மிகவும்பெரியது. யானையின் காதுக்குள் எறும்பு புகுந்துவிட்டால் போதும், யானையின் கதை முடிந்துவிடும். அது போலத்தான் நாங்களும்! எப்படித் தாக்கிறோம் என்பது தான் முக்கியம். நல்ல தந்திரம் இருக்கிறது என்றுவை, நாம்தான் ராஜாக்கள். புரிகிறதா? நாம்தான் ஜெயித்துக்கொண்டிருப்போம். பயம் கூடாது. புரிகிறதா? பயம் கூடவே கூடாது. அதுதான் நம் முதல் எதிரி. ஆம்! முதல் எதிரி! வா! போகலாம்."

முகாமை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் பின்னால் சென்ற எனக்கு, ஒரு மல்லா நூறு யானைகளுக்குச் சமம் என்று தோன்றியது. மல்லா இருக்கும் போது யாரையென்டாலும் வீழ்த்திக் காட்ட முடியும். இனித்தான் எனக்கும் சுடத் தெரியுமே! பின்னர் என்ன பயம்? என்ற நினைப்பே தெம்பாக இருந்தது.

"மாலையில் பயிற்சி இல்லையா?" என்று கேட்டேன்.

முன்னால் சென்று கொண்டிருந்த மல்லா அப்படியே நின்று கழுத்தைத் திருப்பி என்னை நோக்கினான்.

"உனக்கு களைப்பாக இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லை. குறி... குறி பார்த்துச் சுட்டுப்பழக வேண்டும் என்று ஆ... ஆசையாக... ஆசையாக இருக்கிறது." என்றேன்.

மல்லாவின் உதட்டில் மெல்லிய கோடுபோல ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

"சாப்பிட்டுவிட்டு வரலாம்" என்றான்.

பக்கத்துக் கிராமத்தில் இருந்துதான் அன்று சாப்பாடு எடுத்து வந்திருந்தார்கள். பணம் கொடுத்து அனுப்பினால் சமைத்து அனுப்பிவைப்பார்களாம்.

சாப்பாடு நல்ல ருசியாக இருந்தது. மனம் நிறைவாக இருந்தால் சாப்பாடும் நிறைவாக இருந்ததோ என்னவோ!

"நிறைய வந்திருக்கிறதே, இரவுக்கும் கூட மிஞ்சி மிஞ்சிப் போதும்" என்றேன்.

"இங்கே இருப்பவர் களைவிட இரு மடங்கு ஆட்களுக்குத்தான் கணக்குச் சொல்லி சமைக்கச் சொல்லுவோம். அதுதான் அதிகமாக இருக்கிறது," என்றான் மல்லா.

"ஏன் அப்படி?" என்றேன் புரிந்து கொள்ளும் ஆவலில்.

"எத்தனைபேர் இருக்கிறோம் என்று சரியான கணக்கு தெரிந்துவிடக் கூடாது. பொலிசாருக்குத் தெரிந்தால் துணிந்து நம்மைப் பிடிக்க வந்துவிடுவார்கள்." என்றான் மல்லா.

நானும் மல்லாவும் அருகருகே அமர்ந்துதான் சாப்பிட்டோம். அதுவே எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

மாலையில் மறுபடி பயிற்சி.

ஆறு, ஏழு தோட்டாக்களை வீணடித்தேன். மரத்தில் பட்டாலும் குறிமட்டும் சரியாக அமையவில்லை.

மல்லா சுட்டுக் காட்டினான். குறிபிசகவில்லை! எட்டாவது தடவை மனதை ஒன்று குவித்து, மூச்சை இழுத்துப்பிடித்துக்கொண்டு யாரோ ஒரு நாயை சுடுவதாக நினைத்துக்கொண்டு சுட்டேன்.

டுமீல்.

மல்லா தன்னை மறந்து கைதட்டினான். எனக்கு வெட்கமாகியது.

மல்லா சொன்னான். உணர்ச்சிகரமான குரலில் சொன்னான்.

"பூலான் நீ ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் தலைவியாகிவிடுவாய்!"

மல்லாவின் பாராட்டு வார்த்தைகளால் நான் மெய்மறந்து போக வாய்ப்பே இல்லாமல் சிலர் ஓடி வரும் சத்தம் கேட்டது.

மாதுசிங்கும் இன்னும் சிலரும் முகத்தில் திகிலோடு ஓடி வந்துகொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்டதும் மல்லா அவர்களை நோக்கிச் சென்றான்.

நானும் மல்லாவின் பின்னால் ஓட்டமும் நடையுமாகச் சென்றேன்.

மாதுசிங்கின் வாயிலிருந்து வந்த செய்தி என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

"மல்லாஜி பொலிஸ் வருகிறது. யாரோ ஒரு வேசிமகன் தகவல் கொடுத்துவிட்டான். நாம் உடனே இந்த இடத்தைக் காலி செய்தாக வேண்டும்..."



"எம்மைவிட எம் எதிரிகள் பலசாலிகள். ஆனாலும் கோழைகள். பலசாலிகளாக இருப்பது, அதிகாரம் கையில் இருக்கிறதல்லவா அதனால்தான். ஆட்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறார்கள்." மல்லா சொன்னதும் எனக்குள் இருந்த நம்பிக்கையானது ஆட்டம் கண்டது மாதிரியாகிவிட்டது. "அப்படியானால் நம்மால் அவர்களுடன் சண்டையிட முடியாதா?" என்று கேட்டேன். என்குரல் தொய்ந்து விட்டது. "சேச்சே பயந்துவிட்டாயா என்ன? எறும்பு மிகவும் சின்னதுதான். யானை மிகவும்பெரியது. யானையின் காதுக்குள் எறும்பு புகுந்துவிட்டால் போதும், யானையின் கதை முடிந்துவிடும். அது போலத்தான் நாங்களும்!

என்றான் மாதுசிங்.

மாதுசிங்கின் குரலில் தெரிந்தது பயமா அல்லது பதட்டமா? என்று தெரியவில்லை. விக்ரம் மல்லாவிடம் அந்தப் பரபரப்புத் தொற்றிக்கொண்டது.

"உடனே நம் ஆட்களை உஷார்ப்படுத்து. முக்கியமான பொருட்களை மட்டும் மூட்டை கட்டச் சொல்... ஓடு..." என்று கட்டளை பிறப்பித்தபடியே மல்லாவும் முகாமை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

நானும் மல்லாவின் பின்னால் ஓடினேன். நாங்கள் முகாமைச் சென்றடைவதற்கிடையில், முகாமிலிருந்த ஆட்களுக்குச் செய்தி தெரிந்துவிட்டது. மாதுசிங் அவர்களிடமும் சொல்லிவிட்டுத் தான் மல்லாவைத் தேடி ஓடிவந்திருக்கிறான்.

நாம் தங்கியிருந்த பகுதி மலைக்குன்றுகள் சூழ்ந்த பகுதியாகும். மலைக் குன்றுகளின் உச்சியில் நின்று பார்த்தால் நீண்ட தூரம்வரை அவதானிக்க முடியும்.

(திருப்பங்கள் தொடரும்...)

# அதிர்ஷ்டமில்லாத மனிதர்


வின்னர் படத் தயாரிப்பாளர் ராமச்சந்திரன், இப்போது ஒரு ஓட்டலில் வேலை பார்த்துதான் குடும்பமே கஞ்சி குடிக்கிறது என்று குமுதம் இதழுக்கு ஒரு பேட்டியளித்திருந்தார். அந்த பேட்டியில், தனது பரம்பரை வீட்டை விற்க நேர்ந்ததில் துவங்கி, ஓட்டலில் டேபிள் துடைத்தது வரை அவர் விளக்கியிருந்த விதத்தை படித்த பாலா அதிர்ச்சியடைந்தார். உடனடியாக ராமச்சந்திரனின் போன் நம்பரை வாங்கி தன்னை வந்து பார்க்கச் சொன்னார். ‘அவன் - இவன்’ படத்தில் நடிக்க வாய்ப்பும் கொடுத்தார். ஆனால், படம் வந்தபோது ஆவலோடு வின்னர் தயாரிப்பாளரை தேடினால் எந்த காட்சியிலும் ஆளே இல்லை.என்னாச்சு? விசாரித்தோம். வேறொன்றுமில்லை, மனசெல்லாம் விண் விண் என்று தெறிக்கிற அளவுக்கு கவலையில் இருந்த ராமச்சந்திரனுக்கு காமெடி பாத்திரம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவரால் முடியவில்லை. இருந்தாலும் நம்பிக்கையோடு ஒரு வாரம் நடிக்க வைத்தாராம் பாலா. தேறவேயில்லை. சரிப்பா... உனக்கு பொருத்தமா அடுத்த படத்தில் கேரக்டர் வச்சுருக்கேன். அப்போ கூப்பிடுறேன் என்று அனுப்பிவிட்டாராம்.

# ஜீவாவின் அடுத்த பயண

தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்கள் பலரும் ஜீவாவிடம் கதை சொல்லி கால்ஷீட் பெறுவதில் அக்கறை செலுத்தி வருகிறார்கள். அதற்கு காரணம் ‘கோ’வும் அதன் வெற்றியும்தான்.
கௌதம் மேனன், ஜனநாதன், இருவரையும் ஜீவா சந்தித்தார். ‘கோ’ படத்தை தயாரித்த அதே நிறுவனம் இப்போது கௌதம் மேனன்-ஜீவா காம்பினேஷனில் புதுப்படம் ஒன்றை தயாரிக்கவிருக்கிறது. ‘கோ’ வெளிவருவதற்கு முன்பே, எங்கள் நிறுவனத்திற்கு இன்னொரு படம் நடித்து தர வேண்டும் என்று கேட்டிருந்தார்களாம். சொன்னமா ஓகஸ்ட்டிலிருந்து கால்ஷீட் கொ வந்திருக்கிறார் ஜீவா. இந்த பட ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்கவி விண்ணை தாண்டி வருவாயா ப மிக சிறிய கேரக்டரில் நடித்திரு சமந்தா. இதற்கிடையில் மிஷ்கின் இயக்கத்தில் ஜீவா நடிப்பதாகவும்







நடிகர், நடன இயக்குநர், இயக்குநர் என்று பன்முகமாக இருந்து வரும் ராகவா லோரன்ஸ் இப்போது புதிதாக பாடல் ஆசிரிய ராகவும் மாறியிருக்கிறார். தமிழில் ‘முனி’ படத்திற்கு பிறகு லோரன்ஸ் இயக்கி நடிக்கும் படம் காஞ்சனா. கற்பனை கலந்து கதாபாத்திரங்களை வைத்து உண்மையான கதை சொல்லும் படமாக வருகிறது காஞ்சனா படம்.

# லோரன்ஸின் புதிய அவதாரம்

படத்தில் லோரன்ஸ் ஜோடியாக லக்ஷ்மிராய் நடிக்கிறார். சென்னை, ஐதராபாத், பொள்ளாச்சி உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பை நடத்தி முடித்திருக்கும் லோரன்ஸ் நடிப்போடு படத்தின் இயக்கப் பொறுப்பையும் சேர்த்து பார்த்துள்ளார். கூடவே ‘காஞ்சனா’ படத்தின் முதல் பாடலான ‘நில்லு நில்லு உன் சொந்த காலில் ‘நில்லு’ என்று தன்னம்பிக்கை ஊட்டும் பாடல் ஒன்றையும் எழுதியுள்ளார்.
காஞ்சனா படம் முனி படத்தின் பார்ட் 2-ஆக கூட இருக்கலாம் என்றும் கூறும் லோரன்ஸ் இதற்கு அடுத்து பிரபாஸ், அனுஷ்காவை வைத்து தெலுங்கில் ரெபேல் என்ற படத்தை இயக்க உள்ளார்.

பெரிய புக்களெல்லாம் வந்து கதவைத் தட்ட, ந அமலா பாலோ தாய்மொழியான யாளப் படவுலகுக்கு முக்கியத்துவம் கொடு பிருத்விராஜ் படத்தில் நடிக்கிறார் என்றெல்லாம் செய் அலறியடித்துக் கொண்டு மறுப்பு வெளியிட்டுள்ளார் அமலா. தமிழில் விக்ரம், ஆர்யா, மாதவன் என பெரிய நட்சத்திரங்களின் பட நடித்து வருகிறார் அமலா. இந்த நேரத்தில் இப்படி ஒரு செய்தி வந்

# அலறுகிறார் அமலா பா

தமிழ் சினிமாவில் தனது எதிர்காலம் பாதிக்கும் என்பதால் இந்த மறு அவசரமாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், மலையாளத்தில் வாய்ப்புகள் வந்தது உண்மைதான். ஆனால் அவற் நான் ஒப்புக் கொள்ளவில்லை. மலையாளத்தை வெறுக்கவில்லை. ஆ இப்போதைக்கு தமிழுக்கு தான் முக்கியத்துவம் என்று கூறியுள்ளார். தெலுங்கிலும் நிறைய வாய்ப்புகள் வந்துள்ளனவாம். அவற்றில் இரண படங்களில் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளாராம். முடிந்தவரை சம்பாதி தமிழ் - தெலுங்கு, ஓய்வு நெருங்கும் போது மலையாளம் என்பது அமலா பால் பொலிசி போலிருக்கிறது.

# தூள் கிளப்புமாம் வேட்ை

மாதவன் பொலிஸ் கதாபாத்திரத்தில் நடிக்கும் படம் ‘வேட்டை’ முற்றிலும் மாறுபட்ட பொலிஸ் வேடத்தை வடிவமைத்து அதில் மாதவனை இயக்குனர் லிங்குசாமி நடிக்க வைத்துள்ளாராம். நான் கொஞ்சமும் எதிர்பார்க்காத பொலிஸ் கதாபாத்திரத்தில் என்னை லிங்குசாமி நடிக்க வைத்துள்ளார். வேடிக்கையான பொலிசாக படத்தில் வருகிறேன். கலகலப்பாக பண்ணியிருக்கேன் என்று மேடி கூறியுள்ளாராம். படத்தில் மேடியின் உடன்பிறப்பாக ஆர்யா நடித்துள்ளாராம். மேடியை விட படத்தில் ஆர்யாவுக்கு தான் முக்கியத்துவம் என்கிறார்கள். அவ்வளவாக ஆர்ப்பாட்டமில்லாத கதாபாத்திரத்தில் மேடி வந்து போகிறாராம். கடமை தவறாத பொலிசாக மேடி செய்ய வேண்டிய வேலைகளை ஆர்யாவே அதிரடி பண்ணி குறைத்துவிடுவாராம். இயக்குனர் லிங்குசாமியின் ‘வேட்டை’ படத்தில் ஆக்ஷன் காட்சிகள் தூள் கிளப்புமாம்.



‘ராணா’ படத்தில் நடிக்க மீண்டும் வடிவேலுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ‘ராணா’வில் வடிவேலுவுக்கு கொடுப்பதாக இருந்த பாத்திரத்தை அரசியல் காரணங்களால் கஞ்சா கருப்புக்கு கொடுத்தார்க கருத்துக்களுக்கு வருத்தம் தெரிவித்த வடிவேலு, ரஜினியை சந்திக்க முயன்றார். ஆனால்

# வடிவேலுக்கு வா

உடல்நிலையால் பாதிக்கப்பட்ட சூப்பர் ஸ்டா வடிவேலு பார்க்க முடியாமல் போனது. தற் சீரடைந்து, மீண்டும் ‘ராணா’ பட வேலைக ஆரம்பித்துள்ள ரஜினிக்கு, வடிவேலுவின் நி இதைத் தொடர்ந்து, ‘ராணா’வில் மீண்டு முடிவு செய்து, அதை இயக்குனர் ரவிக் கூறியதாகத் தகவல்கள் வெளியாகியுள்

ளம்

ரியே
க்க முன்
தில்
ருப்பவர்
ட்த்தில்
ந

செய்திகள் வந்தன. 35 கோடி செலவில் எடுக்கப் போவதாக திட்டமிட்டிருந்த முகமூடி கதையைத்தான் ஜீவாவுக்காக கூறியிருந்தார் மிஷ்கின். இப்போதுள்ள நிலையில் ஜீவாவின் மார்கெட் வேல்யூ இத்தனை கோடிக்கு தாங்குமா என்ற கேள்வியும் கூடவே எழுந்துள்ளது. எனவே மிஷ்கினின் கருப்பு கூலிங்கிளாசுக்குள் கவலைப்பூச்சிகள் பறக்க ஆரம்பித்திருக்கிறதாம்.



நடனப்பள்ளியில் குறைவில்லாத ஆட்டம். இந்தியத் திரையுலகில் பல மொழிகளில் நடித்து வரும் பிரகாஷ்ராஜ், தன் தற்போதைய மனைவி போனி வர்மாவின் விருப்பத்தை நிறைவேற்றி வருகிறார். போனி வர்மா, நடன - நாட்டிய திறமையால் நட்சத்திரங்களை சினிமா உலகில் ஆட்டி வைக்கிறார்.

மும்பையில் நடனப்பள்ளியை சமீபத்தில் துவக்கியுள்ளார் போனி வர்மா. சென்னை போன்ற பெரு நகரங்களிலும் நடனப்பள்ளியை தொடங்கத் திட்டமிட்டுள்ளாராம். துவக்க விழாவில், சஞ்சய் லீலா பன்சாலி, கோவிந்தா, நீது சந்திரா, விவேக் ஓபராய் என பொலிவுட் நட்சத்திரப் பட்டாளம் திரளாக குவிந்ததாம். உற்சாகம் கரை புரள, களைப்பு தெரியாமல் ஆடித் தீர்த்தார்களாம்.

## நடனப்பள்ளியில் குறைவில்லாத ஆட்டம்

இதில் பொலிவுட்டின் மூத்த நடிகரான கோவிந்தாவும் ஆடி அலப்பறை பண்ணியதை குறிப்பிட்டுள்ளார்கள். பிரகாஷ்ராஜ், தன் காதல் மனைவி எடுக்கும் முடிவுக்கு எதிராக எந்த கருத்தையும் முன் வைக்காமல், அவருக்கு ஆதரவாக தோள் கொடுத்துள்ளாராம். சினிமாவில் நடன இயக்குனராக ஆர்வத்துடிப்போடு போனி வர்மா சாதிக்க, பிரகாஷ்ராஜ் ஊக்கம் அளித்து வருகிறார்.

பொது நிகழ்ச்சிக்கு அரைகுறை ஆடையுடன் தான் வருவேன். ஆனால் அதை புகைப்படம் எடுக்கக் கூடாது என்று நடிகை ஸ்ரேயா கூறியுள்ளார். சமீபத்தில் 'மார்கண்டேயன்' என்ற படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் நடிகர்கள் சல்மான்கான், விஜய், ஸ்ரேயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஸ்ரேயா லூஸ் ஸ்கேர்ட் உடை அணிந்து வந்திருந்தார்.

## கலங்கடிக்கிறார் ஸ்ரேயா

குட்டைப் பாவாடையை விட குட்டையாக இருந்த அந்த உடையில் ஸ்ரேயாவின் அழகு விழாவில் பங்கேற்றவர்களை கலங்கடித்தது. விடுவார்களா புகைப்படக்காரர்கள், ஸ்ரேயாவை சுற்றிச் சுற்றி புகைப்படம் எடுத்தனர். இதனால் வெட்கத்தால் நெழிந்த ஸ்ரேயா, ஒரு புகைப்படக்காரரை அழைத்து, அவர் எடுத்திருந்த படங்களைக் காண்பிக்குமாறு கேட்டார். வேறு வழியின்றி அவரும் காட்ட, அவற்றில் தனது இடுப்பின் கீழ்ப்பகுதி வரை அப்பட்டமாகத் தெரிந்த படங்களையெல்லாம் அழிக்கச் சொன்னார். அதோடு, இனி மேலே மட்டும் எடுங்க, இடுப்புக்கு கீழே எல்லாம் எடுக்கக் கூடாது என கடுமையாகக் கூறினார். இதுகுறித்து ஸ்ரேயாவிடம் கேட்டபோது, எனக்கு புகைப்பட வெளிச்சம் அலர்ஜி இருக்கிறது. அதனால் தான் கூப்பிட்டுச் சொன்னேன் என்று கூறி மழுப்பினார்.

தமிழில்
வாய்ப்
தேடி
கை
லை
கிறாராம்.
கள் வர,
களில்
ால்,

ல்

பை

ால்



பபு

ர,
து உடல் நலம்
கவனம் செலுத்த
ல சொல்லப்பட்டதாம்,
வடிவேலுவை சேர்க்க
ாரிடமும் ரஜினி
.

# தேன் கிண்ணம்

## எப்படி முடியும்...?

என் நெஞ்சில்
உனைச் சுமந்தபடியே
இப்போதும் வாழ்கின்றேன்
எனை மறந்ததாய் - நீ
மடல் வரைந்த பின்பும்...
ஏனென்றால்....
எனை மறந்த உன்னால்
எப்படி முடிந்தது
என் முகவரிக்கு மடல் அனுப்ப....

பா.பொன்நிலவன்,
நீசாலை

## காலங் கடத்தும் காரியங்கள்

செயற்பாடு இல்லாத வீண் பேச்சுகளும்
தீர்வே அல்லாத திட்ட மிடல்களும்
காலங் கடத்தும் காரியங்களே!

தீர்ப்பே இல்லாத விசாரணைகளும்
கட்டியெழுப்பாத கட்டமைப்பும்
சும்மா நேரத்தை விரயமாக்கும் காரியங்களே!

விடியலே இல்லாத உதயமும்
வீசாத வசந்தத்தின் வளர்ச்சியும்
அழியும் முடியும் காணாத தீர்வும்
கடிவாளம் இட்ட காரியங்களே!

கவிக்குயிலன்,
சேனையூர் -06



## எப்படி அறிவது?

தத்துவ மேதை பிளேட்டோ மாணவனாயிருந்த போது அவரது ஆசிரியரிடம் கேட்டாராம். "காதல் என்றால் என்ன? அதை எப்படி அறிவது?"

ஆசிரியர் எதிரே வளமாய் இருந்த கோதுமை வயலைக்காட்டி "அதில் மிக அற்புதமான, நேர்த்தியான தண்டு ஒன்றை நீ கொண்டு வா. காதலை அறிந்து கொள்ளலாம். ஆனால் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது. ஒன்றே ஒன்றுதான் கொண்டு வரவேண்டும்" என்றாராம். பிளேட்டோ கோதுமை வயல் முழுவதும் அலைந்து நீண்ட நேரம் கழித்து வெறுங்கையோடு வந்தாராம்.

ஆசிரியர் கேட்டாராம். "ஏன் ஒன்றும் பிடுங்கி வரவில்லை?" அதற்கு பிளேட்டோ சொல்லியிருக்கிறார். "அற்புதமான தண்டுகளை பார்த்தேன். அதைவிடவும் பிரமாதமானது முன்னால் இருக்கும் எனத் தோன்றியது. முன்னால் செல்ல செல்ல அவ்வளவு நல்ல தண்டுகளை காண முடியவில்லை. பின்னாலும் திரும்பி வர முடியாது. இப்படியே கழிந்துவிட்டது"

"இதுதான் காதல்" என்றாராம் ஆசிரியர்.

சிறிதுநாள் கழித்து பிளேட்டோ ஆசிரியரிடம் "திருமணம் என்றால் என்ன?" என்றாராம்.

ஆசிரியர் "அதோ அடர்ந்த கானகம் இருக்கிறது. அதில் ஒரே ஒரு மரத்தை வெட்ட வேண்டும். பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது. நீ வெட்டியதுதான் மிக உயரமான மரம் என்றால் திருமணத்தை புரிந்து கொள்வாய்" என்றாராம்.

பிளேட்டோ கொஞ்ச நேரத்தில் ஒரு சாதாரண மரத்தை வெட்டிக்கொண்டு வந்தாராம். "ஏன் இத்தனை சாதாரண மரத்தை வெட்டினாய்" என்று ஆசிரியர் கேட்டிருக்கிறார். "என்னுடைய முந்தைய அனுபவத்தால் இந்த முடிவுக்கு வந்தேன். முதலில் இது நல்ல மரமாகவே தோன்றியது. இதை கடந்து போய் இதைவிடவும் மோசமான மரமே எதிர்ப்பட்டால், இதையும் இழக்க வேண்டியிருக்குமே என்று வெட்டிவிட்டேன்" என்று பிளேட்டோ சொல்லியிருக்கிறார்.

"இதுதான் திருமணம் என்பது என் மகனே. காதல் என்பது மனிதனுக்கு நேர்கிற அற்புதமான அனுபவம். கையில் கிடைப்பதை விட கோதுமை வயலில் தவறி விடும்போதுதான் அதன் மகத்துவம் தெரிய வருகிறது. திருமணம் என்பது வெட்டிய மரம் போன்றது. சமரசம் செய்து கொள்கிறாய்" என்று ஆசிரியர் விளக்கினாராம். பெரும்பாலானோருக்கு காதல் என்பது கை-களில் கிடைக்காத கற்பனைப் பறவையாகவே இருக்கிறது. திருமணம் என்பது நிஜ வாழ்வின் ஏமாற்றத்தை புரியவைக்கிறது. வானமெல்லாம் பறந்தவர்கள் தங்கள் சிறகுகளை உதிர்த்துக் கொண்டு கோழிகளாகி அங்கே குப்பையைக் கிளற ஆரம்பிக்கிறார்கள்.

காதலர்கள் நிஜவாழ்வின் கணவன் மனைவி யாக மாறுகிறபோது முதலில் அந்த வசீகரமான புன்னகையைக் களைந்து விடுகிறார்கள். திருமணம் அவரவர் சுயரூபங்களை அடுத்தவர்களுக்கு தோலுரித்து காட்டி விடுகிறது. தான் காதலித்த ஆண் இவனல்ல என்பது அவளுக்கும், தான் காதலித்த பெண் இவளல்ல என்பது அவனுக்கும் வெகு சீக்கிரத்தில் தெரிய வருகிறது. சிலருக்கு ஏதாவது ஒரு கணத்தில் முகத்தில் அறைகிற மாதிரி உறைக்கிறது. ஏமாந்து விட்டோம் என்பதைக் காட்டிலும் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதே வாழ்வு முழுவதும் உள்ளுக்குள் ஓடிக்கொண்டு இருக்கிறது. உடைந்துபோகிறார்கள். விதியே என ஏற்றுக் கொண்டு வாழ ஆரம்பிக்கிறார்கள். வாழ முடியாதவர்கள் பிரிந்துவிட தீர்மானிக்கிறார்கள். காதலித்த காலங்களும், இரகசியமாய் பரிமாறிய பார்வைகளும் மட்டுமே நிலைத்திருக்கும் ஒரு உலகத்திற்குள் தனிமையில் சென்று வருகிறார்கள்.

## எனக்காய் நீ...

என்னிடம் வந்துவிடு!
நான் படும் துயரங்களைத் துடைத்துவிட
துன்பக்கடலில் மூழ்கிப் போயிருக்கும் என்னை
கர்த்தரைப் போல் ரட்சித்துவிடு.
சாபக் கிடங்குகளில் விழுந்துவிட்ட என்னை
உன் கரம் கொடுத்து ஏற்றிவிடு.
விமோசனம் பெறத் துடிக்கும் எனக்கு
பாவமன்னிப்பு தந்துவிடு.

ஓ! என் இறைவா,
என் உள்ளம் வெடித்துக் கொண்டிருக்கிறது
உன் இனிய பேச்சுக்களால் என்னை
அரவணைத்துக் கொள்
ஆசுவாசபடுத்திக் கொள்கிறேன் நான்.
என் மூச்சுக் காற்றில் வெளிவந்து உட்புகும்
உன்னை
உள்ளேயே அடைத்துவிட முயற்சிக்கிறேன்.
இருந்தும் நீ வெளிவந்து விடுகின்றாய்.
என்னைப் போன்ற பாவிகளின் மீட்சிக்காய்...

யோ.யாழினி,
வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

## என் தேவதை

என் உள்ளத்தின்
உணர்வுகளில் ஊற்றெடுத்து
உருவம் பெற்று உயிர் பெற்று பிறந்தவளோ...!
உள்ளம் உன்னிடம் மன்றாடியது
நின்றாடியது -என்
கனவு தேவதை - உன்னில்
உருவெடுத்ததாலா...?

இதயத்தில் -ஓர் இடமாற்றம்
பழக்க வழக்கங்களில்
பல நிலைமாற்றம்....?

கருநிற மீன்களான -உன்
இருவிழிகளின் ஒரு கணப் பார்வையில்
பனி மூட்டம் - துளிர்க்கிறது
என் விழிகளில்...!

உயிருள்ள தங்கச் சிலை
உனைக்காணத்தானா....?
அத்தனை வருசங்களும்
அலைந்து திரிந்தேனா...?

எழில் தவழும் எழுத்துக்களை
எந்நேரமும் எழுதவே!
அவள் பஞ்சு விரல்களை
கெஞ்சி கேட்கின்றன.....!
பேனாக்களும் காகிதங்களும்...!

என் மனப்போராட்டம் -அவள்
உணர்வில் கலக்குமா...?
என் மனப்பகிர்வு -அதை
மாது அவள் கனவிலேனும்
காண்பாளா...?

என் தேவதைக்காக -என்னுயிர்
கடைசிவரை காத்திருக்கும் -அவள்
அன்புக்காக என் மனம்
என்றென்றும் பூத்திருக்கும்...!

எஸ்.சிபானி முஹம்மட்
ஒலுவில்.

## பிரியக்கூடாது

பெண்ணே!
உன்னோடு நான் இருந்தபோது
என் தோளில் தலை சாய்ந்து
நீ அன்று கூறியதை நினைத்துப்
பார்க்கிறேன்.

சாவு நம்மை பிரிக்க நினைத்தாலும்
நாம் காதலைவிட்டு
பிரியக்கூடாது என்று கூறியதை.

கூறிய நீயே
கலைத்துவிட்டுப் பிரிந்ததேன்.
காதலைவிட்டு நான் பிரியவில்லை
பிரிந்தது நீ மட்டுமே.

நீ பிரிந்தாலும் நீ கூறிய வார்த்தை
என் காதலோடு கலந்துவிட்டதடி.
சாவு என்னை பிரிக்கும்வரை
காதலைவிட்டு நான் பிரிவதும் இல்லை...

எஸ்.சபேசன்,
யாழ்ப்பாணம்.



## முதல் தீண்டல்...

மின்சாரக் கம்பியில்
சிக்கிய வௌவாலின்
இறப்பில் எனக்கு உடன்பாடு இல்லை
நேற்றைய நிகழ்வில்
அவளின் முதல் தீண்டலுக்குப் பின்
என்னுள் ஆயிரம் மெகாபைட்
மின்சாரம் பாய்ந்திருக்க
காயங்களோ ரணமோ
ஏற்பட்டிருக்க வில்லையெனக்கு...!

கிண்ணியா-ஜே.பிரோஸ்கான்




# அடக்கப்படும் பெண்கள்



வளர்ந்து கொண்டிருக்கும் நவீன யுகத்திலும் தமக்குள்ளே ஊறிப் போயிருக்கும் பழைமைகளைக் களைந்தெறியத் தைரியமின்றி, தமக்கு முன்னே கட்டியெழுப்பியிருக்கும் கலாச்சார வேலிகளைத் தாண்டும் துணிவின்றி, மரபுத் தூண்களுக்குள் மறைந்து நின்று, பழமை என்ற கோட்பாட்டால் தமக்குத் தாமே விலங்கிட்டு எம்மில் சில பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பெண்ணுக்கு விடுதலை கிடைத்து விட்டது என்றும், பெண் சுதந்திரமாகத்தானே வாழ்கிறாள் என்றும், தற்போதைய நாகரிகம் என்றும் பிதற்றும் ஆண் சமூகத்துக்கு, அந்த ஆண்சமூகம் தம்மைத்தான் மிதிக்கிறது என்று தெரியாமல், புரியாமல் குடைபிடித்துப் பலம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் இன்னும் சில பெண்கள்.

இவர்களின் இந்த அறியாமை நிறைந்த செயற்பாடுகளினால் பெண்விடுதலை என்பது இன்னும் எட்டாத உயரத்திலேயேதான் இருக்கிறது. ஆங்காங்கு ஓரிரு பெண்களுக்கு சந்திரமண்டலத்தில் காலடி வைக்கவும், ஜனாதிபதியாவும், விமானமோட்டவும் எனப் பல துறைகளில் முன்னேற்றம் கண்டவுடன் நம் பெண்களே முன்னேறிவிட்டார்கள் என எண்ண முடியாதல்லவா?

பெண்களால் முடியாதென்று சொல்லி வைத்த வேலைகளிலெல்லாம் தடம் பதிக்கவும் அனுமதி கிடைத்தாலும், அவை சாதனைகளாகவே அமைந்தாலும், மிகுதி ஒட்டு மொத்தப் பெண்களுக்கும் இவைகளையே சுட்டிக் காட்டி வெறுமனே கண்துடைப்புத்தான் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் இன்னும் எத்தனையோ பெண்கள் அடக்கப்பட்டுக் கொண்டும் ஒடுக்கப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

அதாவது பெண்கள் மீதான அநீதியும் அடக்குமுறையும் உலகெலாம் பரந்து இருக்கும் அதேவேளையில், ஆங்காங்கு பலபெண்கள் தம்பலம் உணர்ந்து, தாழ்வு மனப்பான்மை துறந்து வாழ்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

எதைச் செய்ய நினைத்தாலும் கருவிலேயே ஆரம்பிக்கப்பட்ட, "நீ பெண்! அதனால்...! என்ற திணிப்புக்கள் பதியப்பட்ட மூளையிடமிருந்து மீளமுடியாத ஒரு குற்ற உணர்வினாலும், கணவன், சமூகம் சார்ந்தவர்களிடமும் பல்வேறுவிதமான அழுத்தங்களை எதிர்நோக்க முடியாத ஆனால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையினாலும், துரோகங்களினால் ஏற்படும் ஏமாற்றங்களினாலும் இவர்கள் துவண்டு நட்டாற்றில் விடப்பட்ட வள்ளங்கள் போலத் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள்.

# குழந்தைக்கு குடிக்கக் கொடுப்பது என்ன?




இனிப்புச் சோடாக்கள், இனிப்புப்பட்ட பழச்சாறுகள் போன்றவை எந்தக் குழந்தைக்குத்தான் பிடிக்காது. 'சாப்பாடு போகுதில்லை, இதையாவது குடிக்கட்டும்' என்றோ, 'பாவம் சின்னஞ் சிறிசு ஆசைப்படுகிறதைக் கொடுக்கத்தானே வேணும்' என்றோ கட்டுப்பாடில்லமல் இவற்றைத் தாராளமாகக் கொடுத்தால் ஆரோக்கியம் தான் கெடும்.

அதீத எடை வைப்பதற்கும், பற்கள் சொத்தை ஆவதற்கும் இத்தகைய இனிப்புப் பானங்கள்தான் முக்கிய காரணம் என்பது சொல்லியா தெரிய வேண்டும்.

இன்னொரு குழந்தை குடிப்பது மிகவும் ஆரோக்கியமான பானம். இவனுக்கும் சாப்பாடு உட்செல்லாதுதான். நிறையப் பால் குடிப்பான். இரண்டரை வயதாகியும் இன்னமும் போத்தலில்தான். இனி போத்தலில் பால் கொடுக்காதீர்கள். கோப்பையில் குடிக்கக் வையுங்கள். தினமும் இரண்டு கப் பால் கொடுங்கள். காரணம் போத்தலில் குடிப்பது இலகுவானது. விரைவாக வயிறு நிறைந்து விடும். எனவே சாப்பிடத் தோன்றாது.

பால் போஷாக்குள்ள பானம்தான். அதிலுள்ள புரதம், கல்சியம், விற்றமின் A&D ஆகியவை குழந்தையின் உடல் வளர்ச்சி, பொதுவான ஆரோக்கியம், திடமான பற்கள், உறுதியான எலும்பு ஆகியவற்றிற்கு உதவும். ஆயினும் ஆறு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு திட உணவும் அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது. பாலைத் தவிர யோஹட், சீஸ் ஆகியவற்றிலும் பாலிலுள்ள போஷாக்குகள் இருக்கின்றன. குழந்தைகளுக்கு என்ன கொடுக்கலாம்? மூன்று வேளை உணவிற்கும் பின்னர் பால் கொடுப்பதில் தவறில்லை. இடையில் கொதித்து ஆறிய நீரைக் குடிப்பதற்கு குழந்தையைப் பழக்கப்படுத்துங்கள். பழச்சாறுகளும் நல்லது. போத்தலில் அடைக்கப்பட்ட இனிப்பூட்டிய பழச்சாறுகள் அல்ல. உடன் பிழிந்து கரைத்துக் கொடுங்கள். படிப்படியாக பழத்தைச் சாறாக்காமல் முழுமையாக உண்பதற்கும் பழக்கப்படுத்துங்கள்.

# பொடுகு வராமல் தடுக்க...



*வேப்பிலை - 2 கைப்பிடி, நல்ல மிளகு - 15-20 இரண்டையும் அரைத்துத் தலையில் பூசி ஒரு மணி நேரம் ஊறவைத்துத் தலையை கழுவி வந்தால் பொடுகுத் தொல்லையிலிருந்து விரைவில் விடுபடலாம்.

* வெள்ளை மிளகு அல்லது நல்ல மிளகை காய்ச்சாத பாலில் அரைத்துத் தலைக்குத் தேய்த்து 1 மணி நேரம் கழித்து குளித்து வந்தால் பொடுகு வராது.

* அறுகம்புல்லின் சாறு எடுத்து அதனுடன் தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்சி ஆறவைத்து தலையில் தேய்த்து வந்தால் தலையில் உண்டான அரிப்பு நீங்கி பொடுகு வராமல் காக்கும்.


* வெள்ளை மிளகு - 4 தேக்கரண்டி, வெந்தயம் - 2 தேக்கரண்டி, இரண்டையும் காய்ச்சாத பசும்பாலில் அரைத்துத் தலைக்கு பேக் போட்டு அரை மணி நேரம் ஊறவைத்து மிதமான வெந்நீரில் குளித்து வந்தால் பொடுகு நீங்கி தலைமுடி நீண்டு வளரும்.

*சின்ன வெங்காயத்தை தோல் நீக்கி அரைத்துத் தலையில் தடவி அரைமணி நேரம் கழித்து குளித்து வந்தால் பொடுகு நீங்கும்.

# பெண்களுக்கு ஏன் இருதயநோய்?

**சமீப** ஆண்டுகளாக இருதய நோய் தாக்குதலால் ஏற்படும் இறப்பு விகிதம் அதிகரித்து வருகின்றது. இது ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்படின் ஆண்களைவிட (46%) பெண்களுக்குத் தான் அதிகமாக (52%) ஏற்படுகின்றது என்று அமெரிக்க இருதய வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சாதாரணமாக ஆண்களுக்கு இருதய நோய்தாக்கம் அதிகமாக ஏற்படுகின்றது



என்றும், பெண்களுக்கு வயது முதிர்ந்த பருவத்தில் தான் ஏற்படுகின்றது என்ற கருத்து நிலவினாலும், பெண்களுக்கும் இந்நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்ற காரணத்தால் இந்நோய் தாக்கத்தைத்தடுத்து பெண்களின் இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த முனைந்துள்ளனர்.

சாதாரணமாக ஆண்களுக்கு அடர்வு குறை கொழுப்பு புரத அளவு அதிகரிப்பதால் இருதய நோய் ஏற்படுகிறது. ஆனால் பெண்களில் அடர்வு குறை கொழுப்பு புரத அளவிற்குப் பதிலாக அடர்வு மிகக் குறைந்த கொழுப்புப் புரத அளவில்தான் மாற்றம் ஏற்படுவதால், இருதய நோய் பாதிப்பு பெண்களுக்கு அதிகமாக இல்லை. மேலும் மரபு வழியாக, மரபுக்கூறு குறைவினால் ஏற்படுத்தப்படும் இருதய நோயின் தாக்கம் 2% தான். எனவே இதனால் ஏற்படும் பாதிப்பும் குறைவு.


பொதுவாக கொழுப்புச்சத்து உள்ள உணவுப் பொருட்கள் அதிகம் உண்பதால் இருதய நோய் ஏற்படுகிறது. ஆனால் பெண்களில் நாளமில்லா சுரப்பிகள் சுரக்கும் ஹோமோன்களினால் ஆக்க சிதைவு மாற்றம் ஏற்பட்டு, இரத்தத்தில் கொழுப்பு புரதங்களினால் ஏற்படும் நோய் அதிகரிப்பு நிலையை கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனை ஆய்வு மூலம் உறுதிப்படுத்தி உள்ளனர்.

உடற் பருமனினால் ஏற்படும் இருதய தாக்குதல் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஏற்படுகிறது. அதாவது அடர்வு குறை கொழுப்பு புரத கொலஸ்ட்ரோல் அளவு மிகுந்தும், அடர்வுமிகு கொழுப்புப் புரத கொலஸ்ட்ரோல் சிதைந்தும் காணப்படுகிறது. அதனால் உண்டாகும் பாதிப்பு அதிகரிக்கின்றது. தேகப் பயிற்சி செய்து இதனை நிவர்த்தி செய்ய இயலும். தேகம் பயிற்சியின்போது அடர்வுமிகு கொழுப்பு புரத அளவு அதிகரித்து நன்மையளிக்கிறது.

கொழுப்பு வகை உணவுப் பொருட்கள் மரபு வழிக் கூறுகள் அற்ககோல் மற்றும் சிகரெட் குடிக்கும் பழக்கங்களால், இரத்த கொலஸ்ட்ரோல் அளவு அதிகரிக்கும் நிலை ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரேவிதமாக ஏற்படுகிறது என்றாலும், பெண்களுக்கு இதைத் தவிர வேறு சில காரணிகளும் இந்நோயின் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

அவைகளில் மிகவும் முக்கிய காரணி ஹோமோன்களால் ஆன கருத்தடை மாத்திரைகள் பயன்படுத்துவது தான். அவை கொழுப்பு மற்றும் கொழுப்பு புரத அளவை அதிகப்படுத்துகின்றன. கருத்தடை மாத்திரைகள் சாப்பிடுவதால் அடர்வு குறை கொழுப்பு புரத கொலஸ்ட்ரோல் அளவுகளை அதிகமாக்கி இருதயத் தாக்குதலை ஏற்படுத்துவதுடன் நுரையீரல் இரத்த நாளங்களிலும் இரத்த உறைவு ஏற்படுத்தி பாதிப்பு உண்டாக்குகின்றன. மாதவிடாய் தடுப்பு முறைக்காக பயன்படுத்தப்படும் மாத்திரைகளும் மேற்கூறிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதாவது இயற்கையான எஸ்ட்ரோஜன் ஏற்படுத்தும் பயனுள்ள விளைவுகளைப் போல் அல்லது செயற்கை விளைவுகளை உண்டாக்குகின்றன. பெண்களே இவற்றைக் கருத்திற் கொண்டு உங்களைக் காத்து நல்வாழ்வு வாழுங்கள்.

# சமையல் குறிப்பு
## மாம்பழ பர்பி



**தேவையான பொருட்கள்**

மாம்பழச் சாறு - 1 கப்
பால் பவுடர் - 1/2 கப்
சீனி - 2 கப்
நெய் - 2 மேசைக்கரண்டி
தேங்காய் துருவல் - 1 கப்
ஏலக்காய்த் தூள் - 1 ஸ்பூன்

**செய்முறை:-**

அடிகனமான பாத்திரத்தில் நெய்விட்டு மாம்பழக் கூழைப் போட்டுக் கிளற வேண்டும். கூழ் கெட்டியானதும் இறக்கிவைத்து அதில் தேங்காய்த் துருவல், சீனி, பால் பவுடர் எல்லாம் சேர்த்துக் கிளறி மீண்டும் அடுப்பில் வைத்து மிதமான தீயில் நன்றாகக் கிளற வேண்டும். மீதியுள்ள நெய்யை விட வேண்டும். பாத்திரத்தில் ஒட்டாமல் பொங்கி வரும்போது ஏலக்காய்த் தூளைப் போட்டு ஏற்கனவே நெய் தடவிய தட்டில் கொட்ட வேண்டும். லேசாக ஆறியதும் துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 275**

கேள்வி : பாலில் உள்ள சத்துக்கள் எவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 275**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **13.07.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 273 இற்கான விடை:-** மஞ்சள்மா, கோதுமை மா, நல்லெண்ணெய் மூன்றையும் சம அளவு கலந்து முகத்தில் தடவினால் உரோமங்கள் உதிர்ந்துவிடும்.
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-** .B.செந்திரு, 'வேதவனம் ஷடல்' கொழகாமம்.

**275**

பெயர் : ........................
முகவரி : ........................
........................
........................
தே.அ. அட்டை இல : ........................
விடை : ........................
கையொப்பம் : ........................

## விளையாட்டு

# பிரளயமா சூறாவளியா?

ஜோசப் கிருஸ்ணா

ஒருபுறம் இலங்கை இங்கிலாந்து டெஸ்ட் தொடர் மற்றும் இந்திய மே.இந்தியத்தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் என்று நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பன்னீர் தெளித்தும் வாசம் போகாத மாதிரி IPL பற்றிய பேச்சுக்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தொடர்ந்து 37 நாட்கள் நடைபெற்றபோது உலகக் கிரிக்கெட் ரசிகர்கள் அப்படியே கட்டுண்டு போய்க்கிடந்தார்கள். அதுமுடிந்து சில நாட்களிலேயே IPL தொடங்கியபோது சிறிது அலுப்பாகத்தான் இருந்ததென்றும் ஆனால் தொடர்ந்து 51 நாட்கள் மீண்டும் ரசிகர்களை ஆர்வத்தின் உச்சிக்குக்கொண்டு சென்றுவிட்டது.

இந்த ஆர்வம் எந்தளவிற்கு இருந்ததென்பதையும், இதன் எதிர் மறை விளைவுகள் எப்படியிருந்ததென்பதையும் ஒரு பத்தி எழுத்தாளர் சுவையாக எடுத்துக் கூறுகிறார். IPL இறுதிப் போட்டி முடிவடைந்ததும் பல்வேறு தரப்பினரும் ஆறுதல் பெருமூச்சு விட்டார்கள் என்றுசெல்கிறது அவரது கட்டுரை. ஏன் ஆறுதல் பெருமூச்சு? அதாவது இந்தக்கால இடைவெளியில் பொலிவூட்டில் இருந்து எந்தப் புதிய திரைப்படமும் பம்பாய் மற்றும் இந்திய மாநிலங்களில் வெளியிடப்பட்டவில்லை. ஏனெனில் திரைப்படங்களையும் மீறி IPL மீதான ரசிகர்களின் வெறிபுதிய திரைப்படங்களைத் தோல்விக்குள் தள்ளிவிடும் என்பதே அந்தக் காரணம். திரையரங்குகள் வெறிச்சோடிப்போவதை எந்தத் தயாரிப்பாளர், மற்றும் நட்சத்திரங்கள் விரும்புவார்கள்? அதோடு பிரீதி ஜின்டா, சாருக்கான், ஷில்பா ஷெட்டி உள்ளிட்ட அநேக நட்சத்திரங்கள் IPL மைதானங்களில் தானே நின்றார்கள்.

இன்னொருபுறம் அரச, தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் வருகையும், குறைந்துவிட்டதாம். வந்தாலும் கூட IPL கலந்தாய்வுகளே அதிகம் நடைபெற்றதாம். இதுபோக நகர்ப்புற அங்காடிகள், சினிமாத்தியேட்டர்களும் குறிப்பிடத்தக்க அளவு வெறிச்சோடிப்போயினவாம்.


இன்னொரு கணிப்பீட்டின்படி வழக்கமாகப் பார்க்கும் T.V நிகழ்ச்சி கள் மீதான ஆர்வம் வெகுவிரைவாகக் குறைந்து ஒரே அலைவரிசை, அது IPL அலைவரிசை என்று ஆகிவிட்டதாம். மெகா சீரியல்களே கண்ணீர் சிந்தும் அளவிற்கு IPL மெகா சீரியால்களை முடக்கிவிட்டாதாம்.

இன்னொரு முக்கிய விடயம். சிறார்களின் படிப்பு. பெற்றோருக்குத் தம் பிள்ளைகளின் படிப்பை IPL பெரிதும் இடையூறு செய்கிறது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டதாம். அதுவும் பிள்ளைகள் பாடங்களைப் படிக்கும் மாலைவேளை முதல் இரவுவரை ஆட்டங்கள் நடைபெற்றால் எப்படி ஆட்டத்தைப் பார்க்காமல் படிப்பது?

இந்த விடயங்கள் எல்லாம் இந்தியா பொறுத்து எழுதப்பட்டவைதான். எம்மைப் பொறுத்தவரையும் இதில் பல்வேறு விடயங்கள் பொருத்தமானதாகத்தான் இருக்கின்றன. IPL ஆட்டங்கள் பார்த்த ரசிகர்களுக்குப் பணம் கிடைத்ததோ இல்லையோ, IPL சார்ந்த அனைவருக்கும் கிடைத்த வருமானம், ஊதியம், வெகுமதிகள், பரிசில்கள் என்பன, இந்த நிகழ்வை முதன்மை நிகழ்வாக மாற்றிவிட்டன. கிரிக்கெட் மட்டுமல்ல எல்லாவித ஏற்பாடுகளும் பிரமாண்டம்தான். எனவே BCCI இன் வழிகாட்டலில் இயங்கும் IPL எல்லோரையும் கட்டிப்போட்டதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்.

இறுதியாக இத்தனைப் பெரிய போட்டி நிகழ்வொன்றை BCCI நடாத்தி கிரிக்கெட் உலகையே திகைக்க வைக்கும்போது, ICC ஐக் கூட BCCI மேவப்பார்க்கிறது என்று ஆதங்கப்பட்டுக்கொள்வதில் என்ன நியாயம் இருக்க முடியும்?






## பேசில்* மட்டும்*தான்* சரி

கிரிக்கெட் என்றால் டெஸ்ட் போட்டி ஒன்றுதான். அதை விட வேறொன்று சிறந்ததாக இருக்க முடியாது என்று ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. இது ஒரு நாள் போட்டிகள் அறிமுகமான காலத்தில் முன்வைக்கப்பட்ட கருத்து. ஆனால் டெஸ்ட் போட்டிகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, மறுபுறத்தில் ஒரு நாள் போட்டிகளும் பலவித கவர்ச்சிகளுடன் மிகப் பிரபல்யம் அடைந்தது. அது இன்றுவரை தொடர்ந்தாலும் அதன்பின் ஒரு சில வருடங்களிலேயே மிகப் பிரபல்யமாகிப் போய்விட்ட ஒன்று இருபதுக்கு போட்டிகள். விரைவான சுவாரஷ்யம், நேமிச்சம், ஒரே நாளில் இரண்டு ஆட்டங்களைக் கூட ரசிக்கும் வாய்ப்பு என்று இந்தக்காலத்திற்கேற்ற வகையில் இவை அமைந்திருந்ததால் சர்வதேச அளவில் கூட மிகவும் வரவேற்பைப் பெற்றுவிட்டன. இப்போட்டிகள் பற்றிப் பேசுகின்ற தென்ஆபிரிக்க அணியின் பயிற்றுனர் கெரிகேர்ஸ்ரன், இருபதுக்கு இருபது போட்டிகள் சர்வதேசப் போட்டிகளாக நடாத்தப்பொருத்தமில்லாத ஒன்று என்றும், இவை உள்ளூர் மட்டத்தில் மட்டுமே நடத்தப்படத் தகுதியானவை என்றும் ஒரு கருத்தை முன்வைத்துள்ளனர்: இருபதுக்கு இருபது போட்டிகள் உள்ளூர் மட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை இனம்காணப் போதுமானதாக இருக்கும். அவ்வளவுதான் என்றும், இதனைச் சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்வதென்பது டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளை ஆபத்தில் தள்ளிவிடும் என்று மேலும் கூறுகிறார்.

இவரது கருத்து ரசிகர்கள் மட்டத்தில் எந்தளவு எடுபடும் என்பது ஒரு பெரிய வினாதான். டெஸ்ட் போட்டிகள் தான் உண்மையான கிரிக்கெட்டின் அம்சங்களைக் கொண்டிருக்கின்றன என்றாலும் கூட இன்றைய காலகட்டத்தில் ரசிகர்களை விட்டு டெஸ்ட் தொலைதூரத்திற்குச் சென்றுகொண்டிருப்பது ஒன்றும் இரகசியம் அல்ல. இதற்கு இன்றைய கிரிக்கெட் மைதானங்களே சாட்சி. இன்னொரு வகையில் ஒரு நாள் போட்டிகளே, முழு நாளையும் விழுங்கிவிடும் என்ற வேகமான உலகத்தின் சிந்தனையில், இருபதுக்கு இருபது உள்ளூரில் விளையாட மட்டும்தான் லாயக்கானது என்பது ஒன்றும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தெரியவில்லை.

மேலும் சர்வதேச அளவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு இருபது சுற்றுப் போட்டிகளையும், அது ரசிகர்கள் மட்டத்தில் பெற்றுள்ள வரவேற்பையும் அறியாதவர் மாதிரி கெரிகேர்ஸ்ரன் கூறுவதும் ஆச்சரியமாக உள்ளது. கிரிக்கெட் நிர்வாக உயர்பீடங்களும் இருபதுக்கு இருபது போட்டிகளையும் தத்தமது அணிச் சுற்றுப்போட்டிகளில் உள்வாங்க வேண்டிய நிலையில் உள்ளன. தவிர்க்க முடியாத இந்தச் சூழலில், டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளைக் கூட இருபதுக்கு இருபது போட்டிக்காக விட்டுக்கொடுக்க வீரர்கள் தயாராகிவிட்டதையும் தெளிவாகக் காண்கின்றோம்.

எனவே இருபதுக்கு இருபது போட்டிகளின் வளர்சியை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்பதும் உண்மை. அதேபோல டெஸ்ட் போட்டிகளை நிறுத்தக் கூடாதென்பதும் உண்மை. ஏதோ ஒருவகையில் டெஸ்ட போட்டிகளை கவர்ச்சிகரமாக்கி ரசிகர்களை பெரியளவில் சேர்க்க முயற்சிக்கலாமே ஒழிய வலுவாகப் பாதம் பதித்துவிட்ட இருபது இருபதுப் போட்டிகளைக் குறை சொல்லிக்கொண்டிருப்பதில் எவ்வித பலனும் இல்லை. இவற்றால் இருபதுக்கு இருபது போட்டிகள் ஓய்ந்துவிடப்போவதும் இல்லை.

# அமெரிக்க ஆதிக்கம்





**விம்பிள்டன்** ரெனிஸ் போட்டிகளின் 125 வருடக் கொண்டாட்டத்துடன் கூடிய போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் வைரமுடி விம்பிள்டன் என்றால் மிகையில்லை. பல்வேறு பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெற்றாலும், ஆடவர் ஒற்றையர் மற்றும் மகளிர் ஒற்றையர் போட்டிகளின் எதிர்பார்ப்பே ஒரு விஷேடம்தான். அதுவும் அண்மைய சில வருடங்களில் ஆடவர் ஒற்றையர் போட்டிகளைக் கூடப் பின்தள்ளி மகளிர் ஒற்றையர் முன்னிலை வகிக்க ஆரம்பித்துவிட்டதென்று கூறினால் அதனை யாரும் மறுக்கமாட்டார்கள். ஏனெனில் திறமையுடன் கூடவே படிப்படியாகக் கவர்ச்சியையும் மகளிர் தம்பாட்டில் இணைத்துக்கொண்டமை ஒரு காரணம். இந்தவகையில் இந்தத் தலைமுறை வீராங்கனைகள் முன்னோடிகளாக இருக்கிறார்கள்.

இதேவேளை இம்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போட்டிகளில் வில்லியம் சகோதரிகளின் மீள்வருகை பெரும் எதிர்பார்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஒரு தசாப்தமாக செரினாவும், வீனசும் விம்பிள்டனில் தமது ஆதிக்கத்தை நிறையவே செலுத்தியுள்ளனர். 2000 ஆண்டில் 21 வயதான வீனஸ் வில்லியம்ஸ் முதல் விம்பிள்டன் கிண்ணம் வென்றதில் இருந்து இன்றுவரை நடைபெற்ற பதினொரு விம்பிள்டன் போட்டிகளில் பத்துப் போட்டிகளில் இரு சகோதரிகளில் ஒருவர் மாறிமாறி இறுதிப்போட்டிக்கு வந்துள்ளதாக விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள். இதில் தற்போது 31 வயதாகும் வீனஸ் ஐந்து முறையும் செரினா நான்கு முறையும் கிராண்ட்ஸ்லாம் வென்றிருக்கிறார்கள். அதுவும் செரினா மொத்தம் பதின்மூன்று கிராண்ட்ஸ்லாம் வென்றவர். கடந்த விம்பிள்டன் போட்டிகளின் பின் கடுமையான உபாதைகளால் செரினா கடந்தவார ஈஸ்ட் போர்ண் கிண்ணப் போட்டிவரை குறிப்பிடத்தக்க போட்டிகள் எதிலும் விளையாடவில்லை.

ஆனால் இப்பொழுது ஈஸ்ட் போர்ணர் கிண்ணத்தையும் வென்று கொண்டு விம்பிள்டன் போட்டிகளுக்கு வந்திருக்கிறார். 31 வயதாகும் வீனசுக்கும் உபாதைகள் பெரும் பிரச்சினை, 2011 அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டிகளில் கூட மூன்றாவது சுற்றுடன் இடைநடுவில் வெளியேறினார். காரணம் உபாதைகள். இவரும் தொடர் உபாதைக்கு உள்ளாகும் ஒரு வீராங்கனை. ஆனால் இம்முறை இருவருமே மீண்டும் எழுச்சிகொண்டு விம்பிள்டன் புற்தரையில் கால் வைத்துள்ளார்கள்.

இதில் குறிப்பிடத்தக்க விஷேடம் என்னவென்றால் இரு சகோதரிகளைக் கண்டு ஏனைய முன்னணி வீராங்கனைகள் தடுமாறிப் போயுள்ளதுதான். சகோதரிகள் தம் தகுதி நிலை, எதிர்பார்க்கை குறித்து மிக அடக்கமாகப் பேசிக்கொண்டாலும் ஏனைய வீராங்கனைகள் அவர்களின் அனுபவம் சாதனைப்பட்டியல் என்பவற்றை எடுத்துக்காட்டி இவர்களை இலேசில் எதிர்கொள்ள முடியாது என்று கூறியிருக்கிறார்கள். உதாரணத்துக்கு மீண்டும் எழுச்சிகண்டுள்ள மரியஷரபோவா கூறும்போது, வில்லியம்ஸ் சகோதரிகள்தான் இம்முறை விம்பிள்டன் போட்டிகளை ஆக்கிரமிப்பார்கள் போலத் தெரிகிறது என்று கூறியுள்ளார்.

ரெனிஸ் ரசிகர் உலகமும் அப்படியே கருதுவதாகத் தெரிகின்றது. மரியா ஷரபோவா, வொஸ்நியாக்கி, லீநா போன்ற தற்போது பெரிதாகப் பேசப்படும் வீராங்கனைகளை விட்டுவிட்டு, வில்லியம்ஸ் சகோதரிகளே விம்பிள்டனின் ஆதிக்க சக்தியாக இம்முறை திகழப்போகிறார்கள் என்று எதிர்வு கூறுகிறார்கள். எல்லாம் ஒரு சில தினங்களில் தெளிவாகிவிடும்.

**கிழக்கு** மாகாணத்தை ஒரு கலக்குக் கலக்கிய விடயமாக கடந்த வாரத்தில் ஆசிரிய இடமாற்றப்பிரச்சினை இருந்தது. அது போன்றே காத்தான்குடியில் மாணவிகள் இருவர் பார்க்கக்கூடாத படத்தினைப் பார்த்ததும் சூடு பிடித்திருந்தது. இவற்றில் சந்தர்ப்பம் கருதி காத்தான்குடி விடயத்தினை இவ்வாரம் ஆராயலாம்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் காத்தான்குடி பிரதேசம் இஸ்லாமிய அடிப்படை வாதம் கடைப்பிடிக்கப்படும் ஒரு முக்கிய பகுதியாகும். இப்பிரதேசத்தில் மாணவிகள் ஆபாசப்படம் பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் வலுக்கட்டாயமாக துன்புறுத்த முயன்ற இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றமையானது அனைவருக்கும் கவலையானதே.

இந்த இடத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்த விளக்கம் ஒருசில தேவை என நினைக்கிறேன். கடந்த 20ஆம் திகதி பார்க்கக்கூடாத ஆபாசத் திரைப்பட மொன்றைப் பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் காத்தான்குடியைச் சேர்ந்த இரு மாணவிகள் இளைஞர்களால் மிரட்டப்பட்டு பலவந்தமாக அழைத்துவரப் பட்டுள்ளனர். இந்த விடயம் சம்பந்தமாக பிள்ளைகளின் பெற்றோர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அத்துடன் கொழும்பிற்கும் பெரிய உயர்மட்டங்களுக்கும் அறிவிக்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியிலிருந்து மட்டக்களப்பு பிரதேசத்துக்கு பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்று வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த இவ்விரு மாணவிகளையும் பின்தொடர்ந்துள்ள இளைஞர்கள் சிலர், நீங்கள் ஆபாசத் திரைப்படமொன்றைப் பார்த்தீர்கள் தானே? என்று கூறி பலவந்தமாக முச்சக்கரவண்டியொன்றில் ஏற்றி, காத்தான்குடியில் அமைந்துள்ள வீடொன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் அவ்வீட்டுக்கு வந்து சேர்ந்த மேலும் சிலர், நீங்கள் செய்த தவறை ஒப்புக்கொள்ளுங்கள் என்றும் அச்சுறுத்தியுள்ளதுடன் அவர்களைத் தாக்கியும் உள்ளனர். அதன்பின் காத்தான்குடி அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் செயலகக் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த அனைவரையும் அவர்களைப் பார்க்கும்படி கூறியுள்ளனர். அத்துடன் அம்மாணவிகள் செய்த தவறுக்காக அவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்று கோரி கூச்சலிட்டுள்ளனர்.

அவ்வேளையில், குறித்த மாணவிகளை பொலிஸார் வரவழைக்கப்பட்டு பெற்றோரிடம் இவர்களை ஒப்படைப்பதற்காக மாணவி களை பொலிஸாரிடம் கையளித்தோம். மாறாக இச்சம்பவத்திற்கும் பள்ளிவாயல்கள் சம்மேளனத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்திற் கும் உண்மையிலேயே இவ்வாறு ஆபாசப் படம் பார்த்ததால் ஏற்பட்ட பிரச்சினையா என்ற கேள்வி எழுவதே அதற்குக் காரணமாகும்.

ஏனென்றால் காத்தான்குடி இணையம் என்ற ஒரு வலைப்பக்கத்தில், கடந்த வருடம் மே 31ஆம் திகதி காத்தான்குடி மாணவிகளின் வெளி பிரதேசக்கல்வி அவசியமா? இல்லையா? உங்கள்

# காத்தான்குடியில் முற்றுக்கு வராத பார்க்கக்கூடாத படம்!

மீட்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். அவ்வேளை பொலிஸார் மீது பொதுமக்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். அதன் பின்னர் கலகத் தடுப்புப் பொலிஸார் மட்டக்களப்பிலிருந்து அழைக்கப்பட்டு பொதுமக்களுடனான பெரும் போராட்டத்தின் பின்னர் பொலிஸாரால் மீட்கப்பட்டு இரு மாணவிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காத்தான்குடி விடயம் மூடி மறைக்கப் பட்டதாகவே விடப்பட்டிருந்தது. ஆனால் ஒரு சில ஊடகங்கள் இதனை வெளியிட்டுப் பிரபலப்படுத்தியமையினால் காத்தான் குடியைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம் மாணவிகள் மட்டக்களப்பில் இஸ்லாமிய கலாசாரத்திற்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் என்ற சந்தேகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கும் காத்தான்குடி பள்ளிவாயல்கள் சம்மேளனத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. இங்கு கருத்து தெரிவித்த காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவர் எம்.ஐ.எம்.சுபைர் காத்தான்குடியைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம் மாணவிகளை மட்டக்களப்பில் இஸ்லாமிய கலாசாரத்திற்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் உணர்ச்சி வசப்பட்ட சில இளைஞர்கள் குறித்த மாணவிகளை காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்திற்கு அழைத்து வந்தனர்.

குறித்த மாணவிகளை பெற்றோரிடம் ஒப்படைக்க சம்மேளனம் முற்பட்ட போது சம்மேளன அலுவலகத்தை சூழ்ந்து நின்ற இளைஞர்கள் கூச்சலிட்டு சம்மேளன காரியாலயத்தை கற்களால் தாக்கினர். இந்நிலையிலேயே

மட்டக்களப்பிலிருந்து இம்மாணவிகளை அழைத்து வந்ததிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் கடந்த 30 வருடங்களாக இப்பிராந்தியத்தில் மக்களுக்காக சேவையாற்றும் ஒரு சிவில் சமூக அமைப்பாகும்.

யுத்த சூழ்நிலையின் போதும் சம்மேளனம் இன ஒற்றுமையை வலியுறுத்தி செயற்பட்டதுடன் இன்றும் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக பாடுபட்டு வருகின்றது. மனித நேயப்பணிகளில் ஈடுபட்டு வரும் சம்மேளனம், ஜனநாயகத்தை மதித்து அரசாங்க சட்டதிட்டங்களுக்குள்

**லோகேஸ்வரி**

நின்று செயற்பட்டு வரும் நிலையில் சம்மேளனத்தின் நடவடிக்கைகளை சிலர் கொச்சைப்படுத்த முயல்கின்றனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புபடுத்தி திரிபுபடுத்துகின்றனர் என்றும் தெரிவித்திருந்தார்.

இன்றைய நாகரிக வளர்ச்சி, மேற்குலகத் தொடர்புகள், இலத்திரனியல் வளர்ச்சிகளுக்கு மத்தியில், மிகவும் கடுமையாக ஒடுக்கப்பட்டவர்கள் போன்று இரு பெண் மாணவிகள் நடத்தப்பட்டமையானது பல்வேறு வகைகளிலும் விமர்சன ரீதியாகப் பார்க்கப்படுகின்ற விடயமாக மாறியுள்ளது.

இருந்தாலும் இந்த விவகாரம் முன்கூட்டியே திட்டமிட்ட ஒரு விடயமாக இருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது. அதாவது பிரத்தியேக வகுப்புக்கு சென்று வந்ததனால் ஏற்பட்ட பிரச்சினையா அல்லது

வாக்குகளை இங்கே பதிவு செய்யவும் என்ற தலைப்பில் வெளியான ஒரு விவாதத்துக்கான பதில் இதிலிருந்துதான் கிடைக்கும்.


அந்தக் கணிப்பில், சில காலமாக கல்விக்கைக்காக எமதூர் சில மாணவிகள் வெளிபிரதேசங்களுக்கு சென்று சில அநாச்சார விடயங்களில் நடந்து கொண்டனர் என்பதை நாம் நன்கு அறிவோம். இதனடிப்படையில் எமதூர் மாணவிகளின் வெளிப்பிரதேச கல்வி அவசியமா? என நாமே முடிவெடுக்க கடமைப்பட்டுள்ளோம். ஆகவே இதற்கு தகுந்த நடவடிக்கை உங்களின் தெளிவான கருத்தே தீர்வு என நம்புகிறோம் என்று அந்த வலைப்பதிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப்பதிவின் மூலம் இந்தக்கருத்து எப்போதோ திணிக்கப் பட்டது என்பதனை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

காத்தான்குடியைப் பொறுத்தவரை சகல விடயங்களிலும் கட்டுப்பாடும், பாதுகாப்பும் நிறைந்ததொரு பிரதேசமாக இருக்கிறது. அப்பிரதேசத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது கவனிக்கவேண்டியதும் கவலை கொள்ள வேண்டியதுமாகும்.

ஆனால் அது முஸ்லிம் பெண்கள் கொஞ்சம் சுதந்திரம் இல்லாதது பெரிய இழப்பாக கருதுகிறார்கள், அப்படியான சிலர் வெளி ஊர் படிப்பு என்று தாய்மார்களை ஏமாற்றிக்கொண்டு வீட்டை விட்டு வெளியில் சென்று அனாவசியமான செயல்களிலும் ஈடுபட சந்தர்ப்பமாக அதனைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற கருத்தும் காத்தான்குடியைப் பொறுத்தவரையில் காணப்படுகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)


**மலையாள மாந்தரீக முறைப்படி**



**45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை**

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீட்டினை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரோ, அதேபோல் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண ஆதிபராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

"நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை" என்றால் அது எனது சேவையே!" என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவையில் நான் மட்டுமே!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜாம பிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதகக் குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும், நல்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள். எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்கு முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

***வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்) (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.**

**DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா**


SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO.23,MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.
011-2470615, 011-2342463, 011-2342464. FAx 094-112344831
நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508




**இதோ வந்து விட்டது....** பயிற்சி புத்தகம் , CD, முழு பொருட்களுடன்

Reg. No. 30/2046

**ஆடைகளின் அச்சுக்கலை SCREEN PRINTING**




நீங்கள் விரும்பிய டிசைன்களை
விரும்பிய ஆடைகளில்
இலகுவாக உங்கள் வீட்டிலேயே
பிரின்ட் செய்து கொள்ளலாம்.



முழு செட் பெற விரும்புவோர்
கீழ் காணும் வங்கி கிளைக்கு ரூபா. 3000.00 செலுத்தினால் 03 நாட்களுக்குள் உங்கள் இல்லத்திற்கே அனுப்பி வைக்கப்படும்.

**இலங்கை வங்கி புத்தளம் கிளை:** சேமிப்பு கணக்கின் பெயர்: Y. Screen System
கணக்கு இலக்கம் : 71865505

அழையுங்கள் (+94) 32 4905366 | (+94) 777-177 595 | e-mail: yscreen1@gmail.com

**Y. SCREEN SYSTEM INSTITUTE OF PRINTING TECHNOLOGY**
**# 110/02, SPILL ROAD, PUTTALAM - SRI LANKA.**

C/787



# கம்சன் ஹாட்வெயர்

(மொத்த விற்பனையாளர்கள்)

**நேரடி இறக்குமதியாளர்கள்**

எம்மிடம்

* மின்சார உபகரணங்கள்,
* விவசாய உபகரணங்கள்,
* ரைல்ஸ் கட்டிங்,
* வெல்டிங் உபகரணங்கள்,
* நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
* தச்சுவேலை உபகரணங்கள்,
* கதவுப் பூட்டுக்கள்,
* பாதுகாப்பு உபகரணங்கள்,
மற்றும் இதர ஹாட்வெயர் பொருட்கள்.
* குளியலறைச்சாதனங்கள்,
* மோட்டார் பொறியியல் உபகரணங்கள்,
*ஆமைப்பூட்டுக்கள்,
*கதவு, யன்னல் பிற்றிங் பொருட்கள்,



Tel:- 011 243 5413
011 233 2834
011 233 7353

235, பழைய சோனகத்தெரு,
(Old Moor Street)
கொழும்பு-12

(C/708)




அது ஒரு பெண் என்பது விளங்கியது.

ஆனால், அவள் இறந்துவிட்டிருந்தாள்!

அதன் பிறகு இணைந்த நிலையிலேயே அந்தப் படகுகள் இரண்டும் பங்களாவை நோக்கி விரைந்தன.

அந்தப் பெண்ணைப் படகிலிருந்து இறக்கிக் கரையில் படுக்க வைத்தனர். அப்போதும் அந்த உருவம் விறைத்தபடியே அமர்ந்திருந்தது.

உடனே காவலர் ஒருவர் ஓடி வந்தார்.

"இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா? புஷ்பராஜ் கேட்டார்.

"தெரியும். இவர் ஒரு சினிமா நடிகை." காவல்காரர் பதிலளித்தார்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இந்தப் பெண் இங்கு வந்து என்னிடம் பேசியிருக்கிறாள்."

"அப்படியா!" என்றவர், அவள் இருந்த படகை ஒரு முறை தோண்டித் துருவி ஆராய்ந்தார்.

"வந்தவர்கள் இருவராக இருக்க வேண்டும். இவளை இந்தப் படகில் தூண்டில்காரனாக விட்டுவிட்டு, மற்றொருவன் நீரில் நீந்தி பங்களாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும்." புஷ்பராஜ் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

கபூர் அவரையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

"அதற்குள் தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டான். இப்படியொரு யோசனையை நான் ரஷ்ய நாவல் ஒன்றில் வாசித்திருக்கிறேன்." புஷ்பராஜ் கூறினார்.

"இப்போது நாம் என்ன செய்வது?" அப்துல் கபூர் கேட்டார். இவளைக் குறித்து பொலிஸ்காரர்கள் தங்கள் வழி முறைப்படி அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளட்டும். நாம், டிக்சனை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது பற்றி யோசிப்போம். புஷ்பராஜ், பங்களாவுக்குள் நுழைந்தார்.

இருவரும் கபூரின் அறைக்கு வந்தனர்.

அவன் எப்படி வந்தான். எந்த வழியாகக் கடத்திச் சென்றான் என்பது குறித்தெல்லாம் யோசித்து நேரம்கடத்த அவர்கள் விரும்பவில்லை. அதனால் எந்தவித பயனும் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும்.

"ஏரிக்கரை வழியாக அவன், அவரைக் கடத்திக் கொண்டு போயிருக்க முடியாது. அப்படிச் சென்றால் நாம் சுலபத்தில் கண்டுபிடித்து விடுவோம் என்று அவனுக்குத் தெரியும். எனவே, நகரில் உள்ள எல்லா ஓட்டல்களையும், அதே மாதிரி நகரைவிட்டு வெளியேறும் எல்லா வண்டிகளையும் சோதனைபோட ஏற்பாடு செய்ய வேண்டும்." புஷ்பராஜ் கூறினார்.

உடனே ஜோஸப் மாத்தியூவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர் ஒரு கணம் அசைவற்றுப் போனார்.

எனினும், விரைவிலேயே சுயநினைவை அடைந்தவர், உடனுக்குடன் கவலையை எல்லா இடங்களுக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்தார்.

ஒரு சில நிமிடங்களுக்குள் நகரின் பிரதான சாலைகள் மற்றும் நாற்சந்திகளிலும் வாகன சோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சாலையில் வரும் எந்த ஒரு வண்டியும் பொலிசாரின் சோதனையிலிருந்து தப்பவில்லை.

இந்த ஏற்பாடுகளையெல்லாம் பொலிசார் செய்து முடிப்பதற்குள் மாருதி கார் ஒன்றில் டிச்சனை ஏற்றிக்கொண்டு ராபின்சன், கங்காபிரசாத்தின் இரகசிய இருப்பிடத்தை அடைந்துவிட்டான்.

அங்கு டிக்சனை அழைத்துச் செல்வதற்காக ஜான்ஜன் தயாராகக் காத்திருந்தான்.

"ஹலோ மிஸ்டர் ராபின்சன், இந்தச் செயலை தாங்கள் இவ்வளவு விரைவில், இந்த அளவுக்குக் கெட்டிக்காரத்தனமாக நிறைவேற்றுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை." கங்காபிரசாத் மிகுந்த உற்சாகத்துடன் கூறினார்.

"என்னை இப்படியெல்லாம் புகழ்வது பிடிக்காத விடயம். எனக்குத் தேவை பணம்தான். அதைக் கொடுத்துவிட்டால் நான் கிளம்பிவிடுவேன்." சிகரெட்டைப் புகைத்தபடி ராபின்சன். ஜான்ஸனைப் பார்த்தான்.

ஸான்ஸன், கங்காபிரசாத்தைக் கவனித்தான். அவரோ சுருட்டைப் புகைத்தபடி அறைக்குள் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தார். அவர் ஏதோ ஒன்றைக் குறித்துத் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார்.

சட்டென்று திரும்பிய கங்காபிரசாத் ராபின்சனைப் பார்த்தார்.

"ஒப்புக்கொண்டதைவிட உங்களுக்கு அதிகமாகப் பணம் கொடுக்கத் நாங்கள் தயார். ஆனால், நீங்கள் மற்றோர் உதவியையும் செய்யவேண்டியுள்ளது." ராபின்சனிடம் கூறினார்.

"என் வேலை முடிந்துவிட்டது.!" ராபின்சன் நிம்மதி இழந்தவனாகப் பேசினான்.

"இப்போது நீங்கள் செய்ய வேண்டியதும் முக்கியமான வேலைதான். அதை நீங்கள் மட்டுமே செய்ய முடியும்!" கங்கா பிரசாத்தின் குரல் திடமாக ஒலித்தது.

"சாதாரணமாக நான் மற்றவர்களுக்காக வேலை செய்வதில்லை. இருப்பினும் ஒப்புக்கொண்ட வேலையை முடித்துவிட்டேன்." ராபின்சன் பதிலளித்தான்.


"அதெல்லாம் எனக்குத் தெரியும். மற்றவர்கள் செய்ய முடியாத இதே வேலையின் தொடர்ச்சியை உங்களிடம் ஒப்படைக்கின்றேன். மயக்க நிலையில் கிடக்கும் டிக்சனைப் பாதுகாப்பான இடத்துக்குப் பத்திரமாகக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்."

"முதலில் நீங்கள் என்னிடம் இதைப்பற்றி கூறவில்லை."

"தவறுதான். உங்களைத் தவிர வேறு யார் டிக்சனை அழைத்துச் சென்றாலும் பொலிசாரிடம் சிக்கிக்கொள்வார்கள்."

"அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது.

(தொடரும்...)




## உடல் உணர்ச்சிகளைத் தூண்ட உதவும் சிவப்பு

தாங்கள் எப்படி எல்லாம் இருந்தால் பெண்களுக்கு பிடிக்கும் என்று ஆண்களும், தாங்கள் எப்படி எல்லாம் அழகாக காட்சி அளித்தால் வாலிப் பட்டாளத்தை பின்னால் அலைய விடலாம் என்று பெண்களும் போட்டி போட்டுக்கொண்டு ஒருவருக்கொருவர் தங்களை அழகுபடுத்திக்கொள்வதில் ஈடுபடுவதாக தெரிவிக்கிறது ஒரு ஆராய்ச்சி. பல சுவாரஷ்யமான தகவல்களை கொண்ட அந்த ஆராய்ச்சி முடிவு பற்றி நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

## மனதை மயக்கும் சிவப்பு

பொதுவாகவே காதலர்களிடம் சென்று நீங்கள் காதலிப்பதற்கு என்ன காரணம் என்றால், நல்லகுணம், என்று பொய், மேல் பொய் சொல்வார்கள். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. காதல் வருவதற்கு அழகும், உடற்கூறும் தான் காரணம் என்று கூறும் ஆராய்ச்சிகள் ஒரு கட்டத்தில் சிவப்பு நிறத்தாலும் தான் பெரும்பாலும் செக்ஸ் உணர்ச்சி ஏற்பட்டு அதன் மூலம் காதல் வலையில் விழுகிறார்கள் என்று நிருபிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், பொதுவாக சிவப்பு கலரில் உடை அணியும் பெண்கள் கவர்ச்சியாக தெரிவார்கள் என்கின்றனர்.

காமம் இல்லாத காதல் இல்லை என்பார்கள். அதுவும் இந்த ஆராய்ச்சியின் முடிவும் சரியாகத்தான் இருக்கிறது. உச்சம் தலை முதல் உள்ளங்கால் வரை ஒரு பெண்ணை பார்த்த அடுத்த நிமிடத்திலேயே படம் எடுக்கிறது வாலிபர்களின் கமெரா கண்கள்...! கண்ணை பறிக்கிற சிவப்பு கலர் உடை அணிபவர்களுக்கு பாலுணர்வு தானாகவே வந்து விடுகிறது. சிவப்பு என்பது பெண்களை பகலிலும், இரவிலும் வசீகரிக்கும் ஒரு கலர் என்று தெரிவிக்கிறது அமெரிக்காவின் ரோசெஸ்டர் பல்கலைக்கழக ஆய்வு முடிவுகள்.

## ஆண்களை கவரும் பெண்கள்

பெண்களின் அழகுக்கு முதல் அழகு சேர்ப்பது கண்கள் தான். இதில் கண்களுக்கு மேக்கப் போடாத பெண்களை குறைந்த ஆண்களுக்கு மட்டுமே பிடிக்குமாம். அதுவும் கிராமப்புறத்து வாலிபர்களுக்கு தான் இது போன்ற கண்கள் பிடிக்கும். ஆனால் நகரத்தில் வசிக்கும் வாலிபர்களுக்கு ஒவ்வொரு அழகு பிடிக்கிறது. ஐ லைனர் போடும் பெண்கள் பெரும்பாலான இளைஞர்களை வசீகரிக்கின்றனர். அவர்களின் கண் அழகும், முகம், சிரிப்பு என ஒட்டுமொத்தமாக வாலிபர்களை கட்டிவைக்கிறது. இது போன்ற அழகுடன் கண் மேக்கப் செய்தவுடன் மேலும் அழகு சேர்ந்து கொள்வதால் பெண்களின் அழகுக்கு எப்போதுமே நாங்கள் அடிமை தான் என்று கூறும் அளவுக்கு இளைஞர்கள் மாறிவிடுகின்றனர்.

## இயற்கை அழகை ரசிக்கும் வாலிபர்கள்

ஆனால் இதே அளவுக்கு மேக்கப் போடும் பெண்களை வெறுக்கும் வாலிபர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் என்ன தான் இருந்தாலும் பெண்களுக்கு இயற்கையான அழகே, தனிதான் என்று ரசிக்கின்றனர். இப்படி வேறுபட்டு இருந்தாலும் அனைவரையும் கவர்ந்திழுப்பது பெண்களின் கண்கள் தான் என்பது மற்றொரு விசேஷம்...! கண்ணுக்கு மை அழகு... கவிதைக்கு பொய் அழகு என்பது போல பெண்ணின் கண்ணுக்கு மேக்கப் அழகு தான் என்கிறார்கள் காதலில் விழ்ாதவர்களும்.

## முத்தம் சிந்தும் உதடுகள்

அடுத்து பெண்களின் அழகை நிர்ணயிப்பதில் முக்கிய பங்காக இருப்பது உதடுகள். ஆண்களை விட பெண்களின் உதடுக்கு எப்பவுமே தனி மவுசுதான். அழகுக்கு அழகு சேர்க்கும் விதமாக இன்றைய காலகட்டத்தில் உதட்டிற்கு லிப்ஸ்டிக் போடாத பெண்களே இல்லை என்று கூறும் அளவுக்கு நாகரிகம் வளர்ந்து விட்டது. லிப்ஸ்டிக் போட்டுக் கொள்வதால் முகத்திற்கு பளிச்சென்ற தோற்றம் ஏற்படுகிறது.

உதட்டில் ஈரப்பதத்தை தக்க வைக்கவும், வெயிலில் பாதுகாக்கவும் லிப்ஸ்டிக்கில் உள்ள மாய்சுரைசர் உதவுகிறது. இதே போல் உதடுகளுக்கு நிறம் கொடுக்கும் மற்றொரு பொருளாக லிப்கிளாஸ் உதவுகிறது. உதட்டினை பளபளப்பாகவும், மிருதுவானதாகவும் இது காட்டும். இதை பெரும்பாலான இளைஞர்கள் ரசிக்கின்றனர். பெண்களின் அடுத்த அழகாக உருவெடுத் துள்ளது நகங்கள். பொதுவாக இன்றைய காலக் கட்டத்தில் பெண்கள் நீண்ட நகங்கள் வளர்த்து வருகிறார்கள். பொதுவாகவே நகம் வளர்க்கும் பெண்களை ஆண்களுக்கு பிடிக்காது என்பது தான் பெண்களுக்கு அதிர்ச்சி தரும் விஷயம்.

## பந்தா இல்லாத ஆண்கள்

சரி இனி ஆண்களைப்பற்றி ஆய்வு முடிவு என்ன கூறுகிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். ஆண்கள் அணியும் உடையின் வர்ணத்தில் சிவப்பு தூக்கலாக இருந்தாலே போதும், தன்னை அறியாமலே பெண்கள் திரும்பிப்பார்ப்பார்கள். சிவப்பு கலரில் பனியன், சட்டை போடும் ஆண்களை கவர்ச்சிகரமானவராக பெண்கள் உணர்கிறார்கள் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும் பெண்களுக்கு பந்தா இல்லாத ஆண்களை தான் மிகவும் பிடிக்கும். எளிமையான, நகைச்சுவை உணர்வு, பேச்சு திறமை கொண்ட ஆண்களை தான் பெண்கள் வளைத்து வளைத்து காதலிக்கிறார்கள் என்கிறது சர்வே...! பெண்களை கவர ஆண்களுக்கான செலவு கம்மிதான். ஆனால் தமக்கு பின்னால் ஆண்களை சுற்ற வைக்க வேண்டும் என்றால் பெண்களுக்குத் தான் செலவு அதிகம் பிடிக்கும் என்று தெரிவித்துள்ளது ஆராய்ச்சி முடிவு.

## மனதுக்கு நிம்மதி

# வெற்றியில் கர்வம் கொள்ளாதீர்கள்!

**நெப்போலியன் போன்றவர்கள் பெற்ற ஆரம்ப வெற்றிகள் சாதாரணமானதல்ல. அது அவர்கள் மனதில் தாங்கள் யாராலும் வெல்ல முடியாதவர்கள் என்ற கர்வத்தை ஏற்படுத்தியது. கர்வம் ஒரு மனிதனை உள்ளதை உள்ளது போல் பார்க்க விடாது. அறிவுக் கண்ணை அது அழகாக மறைக்க வல்லது. நன்மைகளை செய்ய கர்வம் பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. தான் செய்வதே சரி என்கிற எண்ணம் ஒருவரை எதையும் சீர்தூக்கிப் பார்க்க வைப்பதில்லை. அதன் விளைவு அவர்களை பெரும் வீழ்ச்சி காண வைக்கிறது.**

**தோல்வியில்** துவண்டு விடாதீர்கள், தன்னம்பிக்கை இழந்துவிடாதீர்கள், முயற்சியை நிறுத்திவிடாதீர்கள் என்று எல்லாம் பலர் அறிவுரை சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் வெற்றி பெற்றவர்களுக்கு யாரும் அதிகம் அறி-வுரை சொல்வதில்லை. காரணம் வெற்றி பெற்றவர்கள் அறிவு மிக்கவர்கள், நல்ல உழைப்பாளிகள், எல்லாம் தெரிந்தவர்கள் என்ற அபிப்பிராயம் பலர் மனதிலும் இருப்பது தான். அதெல்லாம் மற்றவர்கள் மனதில் இருந்தால் பரவாயில்லை. வெற்றி பெற்றவர்கள் மனதிலேயே அந்த அபிப்பிராயம் உறுதியாகத் தோன்றும் போது அது எதிர்கால ஆபத்திற்கு அத்திவாரம் போடுகிறது.

வெற்றி எப்படிப்பட்டவர்களையும் ஏமாற்றவல்லது. அது மூன்று குணாதிசயங்களை வெற்றியாளர்களிடம் ஏற்படுத்த வல்லது.

முதலாவதாக, வெற்றி ஒருவரிடம் 'என்னை மிஞ்ச ஆளில்லை' என்ற கர்வத்தை ஏற்படுத்தலாம். கர்வத்தைப் போல வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் ஒரு குணாதிசயம் வேறொன்று இருக்க முடியாது. புராணங்களில் அரக்கர்கள் கடவுளிடம் வரம் பெற்று பெரும் சக்தி பெறுவார்கள். பெரும் சக்தி பெற்ற அவர்களது கர்வம் அவர்களை சும்மா இருக்கவிடாது. பலரைத் துன்புறுத்த முனைவார்கள், எங்களை எதிர்க்க யாரிருக்கிறார்கள் என்று அறைகூவல் விடுப்பார்கள். முடிவு அவர்கள் அழிவு தான் என்பதை நாம் புராணங்களில் படித்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் வரலாறிலும் இதற்கு ஏகப்பட்ட உதாரணங்களைப் பார்க்க முடியும். ஹிட்லர், முசோலினி, நெப்போலியன் போன்றவர்கள் பெற்ற ஆரம்ப வெற்றிகள் சாதாரணமானதல்ல. அது அவர்கள் மனதில் தாங்கள் யாராலும் வெல்ல முடியாதவர்கள் என்ற கர்வத்தை ஏற்படுத்தியது. கர்வம் ஒரு மனிதனை உள்ளதை உள்ளது போல் பார்க்க விடாது. அறிவுக் கண்ணை அது அழகாக மறைக்க வல்லது. நன்மைகளை செய்ய கர்வம் பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. தான் செய்வதே சரி என்கிற எண்ணம் ஒருவரை எதையும் சீர்தூக்கிப் பார்க்க வைப்பதில்லை. அதன் விளைவு அவர்களை பெரும் வீழ்ச்சி காண வைக்கிறது.

சிலபேர் கூறுவார்கள், பெரிய விடயங்களில் எல்லாம் வெற்றி பெற்றிருக்கிறேன், இது என் திறமைக்கு முன் எம்மாத்திரம் என்ற எண்ணத்தோடு இறங்கி சி-றிய வி'யங்களில் தோற்று மூக்குடைந்த மேதாவிகளை நாம் அனைவரும் பார்த்திருக்க முடியும்.

வெற்றி பெற்றவர்களுக்கு யாருடைய அறிவுரையும் தேவை இல்லை என்ற எண்ணம் மேலோங்கி நிற்க வாய்ப்பு உண்டு. ஒருவன் எத்தனை தான் புத்திசாலியானாலும் அவன் அறிந்திராதவையும் எத்தனையோ இருக்கக் கூடும். அந்த அறிந்திராத விடயங்கள் அவனுடைய எதிர்கால வெற்றிக்கு முக்கியமானவையாக இருக்கக் கூடும். ஆனால் எல்லாம் எனக்குத் தெரியும், தெரியாமலா இத்தனை வெற்றிகள் பெற்றிக்கிறேன் என்று நினைக்கிற சில வெற்றியாளர்கள் அறிவுரை கூற வருபவர்களை ஏளனமாகப் பார்க்க முற்படுகிறார்கள். அவர்களுக்கு அறிவுரை வேம்பாகக் கசக்கிறது.

எனவே அவர்கள் தங்களைச் சுற்று துதிபாடிகள் இருப்பதையே அதிகம் விரும்புகிறார்கள். உள்ளதை உள்ளபடி சொல்பவர்களை அவர்கள் ஒதுக்க ஆரம்பிக்கிறார்கள். யாரானாலும் சரி மற்றவர்கள் கூறுவதில் உண்மை இருக்கிறதா என்று கூட சிந்திக்க மறுக்கும் போது, புதியனவற்றை அறிந்து கொள்ளத் தவறும் போது தோற்கவே ஆரம்பிக்கிறார்கள்.



எனவே தோல்வி அடையும் சமயத்தைவிட அதிகமாய் வெற்றி அடையும் சமயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். தோல்வி அடையும் போது இருப்பதை விட அதிகமாய் வெற்றியைப் பெறும்போது அடக்கமாய் இருங்கள். கர்வமும், அலட்சியமும், அடுத்தவர்களைத் துச்சமாய் நினைக்கும் தன்மையையும் உங்களை அண்ட விடாதீர்கள். அப்படிக் கவனமாய் இருந்தால் மட்டுமே வெற்றியை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும். வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறுவதும் அப்படி இருக்கும் போது மட்டுமே சாத்தியமாகும். ■

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 425

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| | | 9 | | 11 | |
| | 14 | 15 | | 17 | 18 |
| | | 21 | | 23 | 24 |
| 25 | | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 13.07.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-425
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.423 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

க.சின்னத்துரை, மின்சாரநிலைய வீதி, சுன்னாகம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. மு.முத்துராஜா, திகிரி லேன், தும்பளை, பருத்தித்துறை.
02. து.வைஸ்ணவி, பிரதானவீதி, சாய்ந்தமருது.
03. சு.ரஞ்சினி, தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.
04. ச.சுரேஸ், செட்டிகுளம், வவுனியா.
05. சி.குகராஜா,எழுத்தூர்,மன்னார்.
06 என்.பர்ஹானா, 02 ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி.
07. ந.டேனுகா, உரும்பிராய் மேற்கு, யாழ்ப்பாணம்.
08. இ.கார்த்திகா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
09. வே.குமாரசுவாமி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
10. V.தனபாலசிங்கம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

**இடமிருந்து வலம்**

01.தெற்காசிய நாடுகளின் ஒருங்கிணைந்த அமைப்பொன்று.

05.காட்டு முட்செடி ஒன்று.

14.உயிர் என்றும் பொருள்.

23.நீண்ட ஆயுளையுடைய உயிரினம். (திரும்பியுள்ளது)

28.மருந்துக்குப் பயன்படும் பழங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)

31.இயற்கை அனர்த்தமொன்று. (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 423- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஜ | 2 னா | 3 தி | 4 ப | 5 தி | |
| 7 ன | 8 மி | 9 ன் | 10 ல் | | 12 ஏ |
| 13 க | 14 சு | 15 வ | 16 ம் | 17 க் | 18 ர் |
| 19 ன் | | 21 க | 22 சோ | 23 ம் | |
| | | 27 ர | | 29 ஊ | 30 மை |
| | | | 34 ம் | 35 க | 36 சு |

**மேலிருந்து கீழ்**

03.ஒளி தருவது. (குழம்பியுள்ளது)

05.மழை என்று பொருள்படும்.

18.சைவசமயம் கூறும் முப்பொருள் களில் ஒன்று. (குழம்பியுள்ளது)

23.சிலை என்றும் கூறலாம்.

25.நிலம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)

28.விவசாயிகளுக்கு சேதத்தை ஏற்படுத்துவது. (திரும்பியுள்ளது)

---



# இசையே மருந்து...

எமது மனத்துக்கு ஓய்வாக இருக்கு வேண்டுமென்றால், மனதுக்குப் பிடித்த மென்மையான பாடல்களைக் கேட்டாலே போதும். எவ்வளவு தான் வேலைப்பளு இருந்தாலும், பாடல்களைக் கேட்ட கொஞ்ச நேரத்தில் மீண்டும் உற்சாகம் ஆகிடுவோம். இசைக்கும், மனதுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மூளை, நரம்பு, மனம் சம்பந்தப்பட்ட நோய் குறை-பாடுகளை இசையால் குணப்படுத்திவிடலாம். இந்த சிகிச்சை முறைக்கு 'மியூசிக் தெரபி' என்று பெயர். எப்படி இந்த இசை, நோயைக் குணப்படுத்துகிறது. அதாவது இசையில் மனம் லயிக்கும் போது ஹோமோன் மாற்றம் அடைகிறது. நரம்புப் புத்துணர்ச்சி அடைகிறது. மூளை சுறுசுறுப்பாகி உடல் புத்துயிர் ஆகிறது. இசையில் மனம் மயங்குகிறது. இராக ஆலாபனை யில் உடலும், மனமும் புத்துணர்ச்சி பெறுகிறது.

மனநிலை சமச்சீராகிறது. மன அழுத்தம், கோபம், வெறுப்பு, பகை உணர்ச்சிகள் போன்றவற்றை இசை விரட்டுகி றது. அதனால்தான், அந்தக்காலத்தில் மன்னர்கள் எல்லோரும் தங்கள் அருகிலேயே இசை வல்லுநர்களை பணி யில் அமர்த்தி, தங்கள் உடல் நலனைப் பாதுகாத்து வந்தனர். மகிழ்ச்சிக்கும், மன அழுத்தத்திற்கும், தூக்கத்திற்கும் கூட இசை அருமருந்தாக உதவுகிறது.

இத்தாலி இசை மாமேதையான மொசார்டின் இசைக் குறிப்புகள், இன்றும் உயர்ந்த ரக இசையாக சிறப்பிக்கப்பட்டு வருகிறது. இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், இவர் முழுமையாக காதுகேளாதவர் என்பதுதான்.




ராஜேஸ்வரி அகல்யாவைச் சற்று நேரம் அவளை அழவிட்டாள்."

"ஐயோ ... வேற என்ன வழி இருக்கு எனக்கு?"

"பெத்துக்க! கொல்லாத கண்ணு! குழந்தை பெத்துக்க நாங்கள் எல்லா ஏற்பாடும் செய்கிறோம்." என்றாள் ராஜேஸ்வரி.

"என்ன சொல்றீங்க? நான் கல்லூரிக்குப் போகணும். படிக்கணும். வேலைக்குப் போக ணும். வாழ்க்கையில எத்தனை இருக்கு எனக்கு."

"எல்லாம் ஒன்றும் குறையில்லாம நடக்கும். இப்ப என்னண்டுற. உனக்கு என்ன இதிலே? கொம்பியூட்டர் படிக்கிறதுக்கு சேர்ந்திருக்கிறாய் அதை இங்க தொடரலாம். உன் படிப்பை பொறுத்தவரையில் கிருத்திகா சாரிக்கிட்ட சொல்லிட்டா வரவு பற்றிக் கவலைப்பட வேண்டாம். தனியான வகுப்புக்கு ஏற்பாடு பண்ணினால், ஒன்றுமே மிஸ் பண்ணாம பண்ணிரலாம்."

'நீங்க சொல்றது புரியலை. அதாவது நான் அந்தக் குழந்தையை அபோஷன் பண்ணாம பத்துமாதம் சுமந்து பெத்துக்கணும் என்கிறீங்களா?

'பத்து மாசம் இல்லை. ஒரு சாதாரணமான கர்ப்பம் என்கிறது முப்பத்தொன்பது வாரம். அதிகப்படியா 28 நாளைக்கு மேல் போகாது. முதல் தரத்திலேயே உனக்கு எண்பது நாள் என்று கேள்விப்பட்டேன். அதனால உனக்கு ஆறு மாசம்தான் இங்க இருக்க வேண்டி வரும்."

"இதெல்லாம் நீங்க எதுக்கு எனக்குச் செய்யிறீங்க." ராஜேஸ்வரி ராபர்ட் எடைக்கு வைக்கப்பட்ட குண்டுக் கண்ணாடியை உருட்டிக் கொண்டே சொன்னாள். "கடவுள் கொடுத்த உயிரைப் பறிக்கிறது நமக்கு உரிமை கிடையாது என்று நம்புறவங்க நாங்க."

***

ப்ரமோத் பிஸிக்கல் லாபுக்குப் போகும் வழியில் ரகுவைப் பார்த்தான். அவர்கள் சிகரெட் புகைத்துக்கொண்டிருந்தார்கள். பக்கத்தில் சீனு எட்டாவது முறையாக

> **அகல்யா மாமா சுந்தரேசனையும் அழைத்துக் கொண்டு 'வாழ்க்கைக்காக' என்னும் நற்பணி மன்றத்திற்குச் சென்றாள். அங்கு அவள் எதிர்பார்த்ததற்கு மாறாகவே எல்லாம் நடந்தது. அங்கு ராபர்ட் ராஜேஸ்வரி என்னும் பெண் அவளைச் சந்தித்தாள். அவள் வயிற்றில் உள்ள குழந்தையைக் கருக்கலைப்புச் செய்வதினால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், அந்தக் குழந்தையைப் பெற்றெடுக்குமாறும், அதற்கான முழு வசதியையும் தம்மால் செய்துதரப்படும் என்றும் கூறினாள். ஆனால் இதற்கு அகல்யா உடன்படவில்லை. அவள் மேலும் குழப்பத்திற்குள்ளாகிய நிலையில் விடுதிவந்து சேர்ந்தாள்.**

"ஆடிப்புட்டேன் வாத்யாரே... கட்டில் அடியில குழந்தைச் சத்தம். அவ எடுத்து சேலையை விலக்கிப் பால் கொடுக்கிறப்பா... சட்டுன்று லைட் அணைச்சாப்போல ஆயிற்று. ஆளை விட்டா போதும் என்று ஒரே ஓட்டமா ஓடிவந்திட்டேன்."

"சரியா, விசாரிக்கணும். இனிமே இந்தமாதிரி அம்மாக்களையெல்லாம் கொண்டுவந்து காட்டினா, நடக்கிறதே வேறு என்று சொல்லணும்."

ப்ரமோத் வருவதைப் பார்த்து "ப்ரமோத் எங்க உன் ஆளைக் கொஞ்ச நாளாக் காணோம்... கர்ப்பமாக்கிட்டியா..? இல்லை. நீ கர்ப்பமா இருக்கிறியா?" என்றான் ரகு.

ப்ரமோத் அவனை வெறுப்பாகப் பார்த்தான். ரகு மெள்ள மென்றுகொண்டு அவனை அற்பமாக ஏறிட்டான்.

"சில பேருக்கு எல்லாம் கேக்குதடா சீனு. இதே ப்ரமோத்தை இப்ப அந்த வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனா வருவானா? மாட்டானாடா?

ப்ரமோத் தீர்மானித்தான்.

"ரகு உங்ககூட பேசணும்."

"உனக்கும் எனக்கும் பேச பொதுப் பாடம் கிடையாது வாத்தியாரே..."

"இருக்கு ஒரு பொது எதிரி. அப்புறம் அகல்யா."

'என்ன ஆச்சு? சண்டை போட்டுக்கிட்டியா...ஊடலா?"

"நான் சொன்னா நீ கல்லூரி முழுக்கவும் பரவிடுவே!"

"எல்லாம் பரவித்தான் இருக்குது. என்ன பிரச்சினை சொல்லு."

'அவளை ஸ்ரீதர் என்கிற ஒரு பையன் கெடுத்திட்டான்."

ரகுவின் முகம் தீவிரமடைந்தது.

"யார்றாவன்."

"ரெண்டு மாசம் முந்தி இசைவிழா வில முதல் பரிசு வாங்கினான் பாரு... திருச்சியிலயிருந்து ஒரு ஐயர் பையன். அவன்தான்."

"அப்படியா? பட்டா, அவனை பீஸ் பீஸா கிளிச்சு துவைச்சிரலாம். என்னடா சீனு... திருச்சிய ஒரு ரவுண்ட் அடிக்கலாமா?"

'ஓ!"

"அதை உங்கிட்ட சொல்றதுக்குத்தான் வந்தேன். நாங்க பாஸ்கெட் போல் சுற்றுப்போட்டிக்குத் திருச்சிக்குப் போறம். சென்ஜோசப் இன்டர் யூனிவர்சிட்டியில பாரதிதாசனுக்கும் நமக்கும் நடக்குது" என்றான் ப்ரமோத்.

"விளையாடுற குழுவில இருக்கேன். எங்ககூட நீயும் சீனுவும் வந்து அவனை ஒரு தட்டு தட்டி விசாரிக்கணும்பா."

"தட்டுறது என்ன? வாழ்நாள் முழுக்க வாங்கும்படி எலும்பெல்லாம் முறிச்சிரலாம்... என்ன பேரு சொன்னே?"

"ஸ்ரீதர்."

"அப்பவே திருதிருன்னு முளிச்சான். கில்லாடி என்ன செய்தான்?"

"ராத்திரி விருந்து இருந்துச்சு... இசைவிழாவுக்கு அப்புறம் அந்தப் பெண்ணைத்தனியா கூட்டிக்கொண்டு போய் நினைக்கிற மாதிரி நைசா பேசி..."

"என்ன மாதிரி அலையிறாங்களப்பா..."

"நம்ம சிநேகிதி, நம்ம கல்லூரிப் பெண்... தங்கக்கட்டி... அவளைப்போயி? அப்பவே சொல்லியிருந்தா பலிபோட்டிருப்பேனே" என்றான் ரகு.

"இப்பத்தான் அகல்யா என்கிட்ட தயங்கித் தயங்கிச் சொன்னா. உங்கிட்டயும் சொல்லச் சொன்னா" என்று பொய் சொன்னான்.

***

அகல்யா அந்த அறைக்குள் நுழைந்தாள். ஒரு மாதிரி இரட்டை தொலைக்காட்சி போல இருந்தது அந்தக் கருவி.

"இதப் பாரும்மா... இது எக்ஸ்ரே மாதிரி... எந்தவித ஆபத்தும் கிடையாது. வலியும் கிடையாது.. போட்டோ எடுக்கிறது போலதான் இது. அமெரிக்காவிலேயே இம்மாதிரியான கருவி பெரிய வைத்தியசாலைகளில ஒண்டு இரண்டுலதான் இருக்கு. அது இந்த வைத்தியசாலைக்கு அன்பளிப்பா கொடுத்திருக்கிறாங்க. எல்லாம் எதுக்காக? உயிர்களைக் காப்பாத்துறதுக்காக. அதக் கொல்லுறதுக்கில்லை." என்றாள் ராஜேஸ்வரி ராபர்ட். அகல்யாவின் பாவாடையை விலக்கி அவள் வயிற்றில் ஜெல்லி தடவி அந்தக் கருவியை வைத்து குமிழிகளைத் திருக,

"பார் தெரியுதா சேப்? அதான். இன்னம் கொஞ்ச நாள் போனா ஆணா பெண்ணா கூட சொல்லிடலாம்.

அந்த இரட்டை விம்பத்தில் என்னவோ வண்ண வடிவங்கள் தெரிந்து துருத்திப் போல அசைந்து கொண்டு இருந்தன. அகல்யா மேலும் அதைப்பார்க்க விரும்பவில்லை.

"போய்ட்டு வாம்மா.. உன்னை யாரும் எதுவும்பலவந்தப்படுத்தலை. இது உன் தீர்மானம். அபோஷன் பண்ணிக்கிறதா இருந்தா நகரத்திலேயே பண்ணிக்க. இல்லை உன் படிப்பு எந்த விதத்திலும் பாதிக்காதபடி நாங்க இங்க தங்க ஏற்பாடு செய்யிறோம். மிஞ்சிப்போனா ஆறுமாசம். அமைதியா, சுகமா யார் கண்ணிலயும் படாம ஆரோக்கியமா வாழலாம். அதில் எதுவென்று நீதான் தீர்மானிக்கணும். அதுக்கு முந்தி இதைக் கேட்டுட்டுப்போ" என்று ஒரு முறை அந்தக் கருவியை இயக்க, தப் தப் தப் என்று ஒரு சத்தம் கேட்டது.

**இன்பம் தொடரும்**

**இவ்வாரச் சிறுகதை**



# முதல் தேவதை

**சஞ்சை** கண்ணீரோடு வீடு வந்து சேர்ந்தான். அன்றைய பொழுது துக்கரமான பொழுதாகவே இருந்தது. அவன் கண்களில் இருந்து வழிந்துகொண்டிருந்த கண்ணீர்த்துளிகள் கொஞ்சம் கூடக் குறையவில்லை. இதற்கெல்லாம் காரணம் வேறு யாரும் இல்லை. தன்காதலியை நினைத்து மனசுக்குள்ளேயே வைத்து குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கும் லோஜிதான். சஞ்சை தன் வாழ்க்கைக்கே என முற்றுப்புள்ளி வைத்த அவளை எப்போது கண்டான். அவனை அறியாமலே நினைவுகள் அலை மோதியது.

சஞ்சை நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் வீட்டில் அவன் மீது பெற்றோர் சகோதரர்கள் அதிக பாசம் வைத்திருந்தனர். சஞ்சைக்குப் பதினெட்டு வயது கடந்தும் விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்தான். நண்பர்களோடு அரட்டை அடிப்பது, திருட்டுத் தம் அடிப்பது. கடலுக்குக் குளிக்கப் போவது இதுதான் சஞ்சையின் தொழில், வழக்கம் போல ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் கடற்கரைக்குப் போனான். கடற்கரையில் அண்மையில் சுற்றிக்கட்டப்பட்ட கிணற்றில் வழமைக்கு மாறாக கலர் கலரான ஆடை ஆபரணங்களுடன் ஆண்களும், பெண்களும் நின்றிருந்தார்கள். சஞ்சையின் விளையாட்டுப் புத்தி அவனை இதிலும் விட்டு வைக்க வில்லை. அதைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் அவனை நிலை கொண்டது. அவனது அசையும், வெகுளித்தனமும் சேர்ந்து அவனை கிணற்று மதிலைப் பிடித்து எட்டிப் பார்க்க வைத்தது. ஒரு பெண் பூப்படைந்தால் என்ன செய்வார்கள் என்று சஞ்சைக்கும் தெரியும். அதுதான் இங்கு நடந்துகொண்டிருந்தது. சஞ்சையின் மனதில் இதுவரையும் எந்தப் பெண்ணும் இருந்ததில்லை. எவளையும் அவன் நினைக்கவுமில்லை. ஆனால் அன்று அவன் பார்த்துக்கொண்டிருப்பதை அவனாலேயே நம்பமுடியவில்லை.

அவள் அழகு அவனைச் சற்று அதிர்ச்சியடையவைத்தது. ஆக, அவள் சற்று ஒல்லியான உடல்வாகு. தாமரை இதழ் போல விழிகள். இதெல்லாம் ஒன்று சேர்த்து சஞ்சையை பரவசப்படுத்தியது. பல தொல்லைகளுக்கும் மத்தியிலும் அவள் பேரைக் கேட்டுவிட்டான். லோஜி. பேருக்கேற்ற அழகு. சஞ்சையின் மனசுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் ஒன்றாக சிறகடித்துப் பறப்பது போல ஒரு போல் உணர்வு. அன்றில் இருந்து லோஜியைப் பார்க்கும் போதெல்லாம் தனக்குள்ளே எல்லை இல்லாத சந்தோஷம். ஆனாலும் இருவருக்கும் இடையில் எந்த சர்ச்சைகளும் இல்லை.


சில மாதங்கள் நகர்ந்தன. சஞ்சை தன் தோழி மூலம் லோஜிக்கு தன் காதலை வெளிப்படுத்தினான். முதல் பதில் மௌனம்தான். இருந்தாலும் சஞ்சை கடிதம் மூலம் தொடர்ந்தான். எதிர்பார்த்தது போல் எல்லையில்லா மகிழ்ச்சி. லோஜி தன் காதலுக்குச் சம்மதம் தெரிவித்தாள். நேரடியாகவோ-இருவரும் சந்திக்கவில்லை. சஞ்சையின் மனசு பாதி சந்தோஷம் பாதி கவலை இருந்தாலும் கடிதங்கள் மூலம் தங்கள் அன்பை பரிமாறிக்கொண்டனர். லோஜி அதிகம் யாருடனும் பேசமாட்டாள். மௌனம் தான் அவள் அதிக மொழி. பயந்தவள். லோஜியின் அப்பாவே கடும் கோபக்காரர். அவர் கோபத்திற்கு ஏற்றது போல் அவர் உருவம் எல்லோரையும் பயப்படவைக்கும். அன்று புதன் கிழமை சஞ்சை அவள் தோழியிடம் கடிதம் ஒன்றைக் கொடுத்தான். அவள் அதை தன் கொப்பிக்குள் வைத்துக்கொண்டு லோஜி வீட்டுக்குச் சென்றாள். தன் கொப்பியை மேசைமீது வைத்துவிட்டு வீட்டுக்குப் பின்புறமாகப் போய்விட்டாள். அது காற்றுக்கு ஒவ்வொரு ஒற்றையாகப் பறந்துகொண்டிருந்தது,

**செ.சதீஸ், நெடுந்தீவு**

காற்றுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் கொப்பிக்குள் இருந்த சஞ்சையின் காதல் மடல் லோஜியின் அப்பாவின் முதுகில் ஒட்டிக்கொண்டது. அவர் அதை எடுத்துப் பார்த்தார். இந்தப் பூனையும் பால் குடிக்குமா! என்று அதிர்ந்துபோனார்.

"ஏய் லோஜி இங்கே வாடி." அவரின் குரலில் வீடே ஒரு கணம் அதிர்ந்தது. "இதெல்லாம் என்ன எத்தின காலமாக இது நடக்குது" லோஜியை அதட்டினார். லோஜியால் எதுவுமே பேசமுடியவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் மட்டுமே பேசியது. லோஜியின் அம்மா மகளுக்கு பக்க வாத்தியம் இசைத்தாள். அவருக்கு இருந்த கோபத்தில் அவளுக்கு அடியும் கொடுத்தார். அவளை வெளியில் போகக் கூடாது என்று சொல்லிவிட்டு, சஞ்சையின் வீட்டுக்கு வந்து முறையிட்டார். சஞ்சைக்கு எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவன் அப்பாவின் அடியை வாங்கினான். அவன் மீது வைத்திருந்த பாசம் அவனாலே இல்லாமல் போனது. ஒரு சில விநாடிகளில் ஒரு சூறாவளியே வீசியது போல் இருந்தது. அன்றிலிருந்து லோஜியின் கடித உறவும் இல்லாமல் போனது. சில மாதங்கள் கடந்தும் சஞ்சை மனசில் அந்த வடு மறையவில்லை. அவன் நண்பர்களும் அவன் நிலையக் கண்: "டேய் நீ அவளை மறந்திரடா. அதெல்லாம் உனக்குச் சரிவராது" என அறிவுரை கூறினார்கள். சஞ்சை எதையுமே காதுக்கு எடுப்பவனாக இல்லை. அவளையே தான் அடைய வேண்டும் என்று தீர்க்கமான முடிவில் இருந்தான். தன் வாழ்க்கையில் வந்த முதல் தேவதையும் அவள்தான். லோஜியிடம் மீண்டும் தூது அனுப்பி அவளை நலம் விசாரித்தான். ஆனால் அவள் பதில் இத்தனை சோகத்தை தரும் என்று நினைக்கவில்லை. "என்னை மறந்து வேறு யாரையும் திருமணம செய்யும்படி" அதில் கூறினாள். அந்த வார்த்தையைக் கேட்ட நிமிசத்தில் இருந்து அவன் அவனாக இல்லை. கண்ணீரோடு வீடு புறப்பட்டான். ஏதோ தட்டுப்பட்டு நினைவில் இருந்து மீண்டவன் மேலும் கீழும் பார்த்தான். எல்லாம் இருட்டாகவே இருந்தது." அவன் வாழ்க்கையும் தான்.

# பொன்மொழி



எந்த குடும்பத்தில்
உள்ள பெண்மை
கொண்டாடப் படவில்லையோ,
அந்த வீடும் பாழ்
அந்த நாடும் பாழ்.

சுவாமி விவேகானந்தர்

இலக்கிய நயம்

33

கே.வி. குணசேகரம்



# திருமந்திரம் கூறும் மகளிர் இழிவு

**எட்டி** மரத்தின் இலை, தளிர், பூ, காய், கனி என்பன மிகவும் அழகானவை. கண்களைக் கவரும் தன்மை வாய்ந்தவை. தாவர வர்க்கத்தில் மிக மிக அழகுடைய மரம் என எட்டி மரத்தைப் பற்றி அழகுணர்ந்தோர் கூறுவர். எட்டி மரத்தின் பழங்கள் பார்ப்பவர்கள் அனைவரையும் மயக்கிக் கவரும் தன்மை வாய்ந்தன. அதை மனிதர்கள் அழகிற்காக இரசிப்பார்கள். ஆனால் பறவைகள் இழைப்பாறுவதற்குக் கூட எட்டி மரத்தில் இருக்கமாட்டாது. மிருகங்கள் அதைக் கவனிக்காது சென்றுவிடும். எட்டி மரத்தின் பழங்களை அதன் அழகு கருதி உண்பவர்கள் இறந்து விடுவார்கள். இது ஐந்தறிவுள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் தெரியும். அதனால் ஜீவராசிகள் எவையும் எட்டிமரத்தின் பக்கம் செல்வதில்லை.

இது போல கண்களைக் கவரும் மையூசிய அழகான ளின் வீடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்து நன்நெறியில் செல்லு மாறு கூறுகிறது.

திருமந்திரப் பாடல்கள் மிகமிக இலகுவானவை. வாசிப்பவர்களுக்கு எளிதில் புரிபவை. சங்ககாலத்தில் ஒழுக்கம் சீர்குலைந்தமையால் தான் சமணசமயம் உருவாகி வளர்ந்ததாக அறிஞர்கள் கூறுவர். சங்ககாலத்தில் நடந்த ஒரு சம்பவம் இது.

அவன் பெரும் தனவந்தன். அழகிய பெண்ணைக் காதலித்து மணம்புரிந்து ஐந்து பிள்ளைகளைப் பெற்றவன். கோயிலில் நடைபெற்ற ஒரு திருவிழாவில் அவள் நடன மாட வருகிறாள். அவளது ஆடல், பாடல், அழகு என்பன அவனைக் கவர்கின்றன. அன்றே அவன் அவளது வீட்டிற்குச் செல்கிறான். அவனை அவள் மிகுந்த விருப்புடன் புன்னகை தவள வரவேற்கிறாள். அவளின் அழகான

சுழன்றாடும் கவர்ச்சி மிக்க கண்களையும், காண்போரின் மனதைக் கவர்ந்து மனத்திடத்தை அழித்து உணர்ச்சிகளைப் பெருக்கும் புன்னகையையும் உடைய இழிந்த மகளிரின் மீது ஆசை கொள்ளக்கூடாது. இப்படியான பொய்மையான ஒழுக்கத்தை உடைய மாதர்கள் எட்டிப் பழத்தைப் போல தொடர்பு கொள்வோரின் உயிரை அழித்து விடுவார்கள் என்று திருமந்திரம் சொல்கிறது. சங்ககாலத்தில் ஒழுக்கம் சீர்குலைந்திருந்தது. அதனால் ஆண்கள் பரத்தைகளின் வீடுகளுக்குச் சென்று தம் பொருட்களையெல்லாம் கொடுத்து அவர்களுடன் உறவுகொண்டு தமது பொருட்களையும், குடும்பத்தை அழித்தனர். இந்த வரலாற்றினை குறுந்தொகையும் அவைபடச் சொல்லத் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் கண்டிக்கின்றன. அதுபோல சைவசமயத்தின் சாத்திர நூலான திருமந்திரம் பொய்மை மாதரான தாசிக-

கவர்ச்சியான புன்னகை அவனைக் கவர்கிறது. முத்துப் போன்ற பற்களும் அழகான உதடுகளும் அவனது மனதைக் கவர்கின்றன. அவளது முகத்தில் படர்ந்திருந்த காம உணர்வுகள் அவனை மெய்மறக்கச் செய்கிறது. அவளே தஞ்சமென அவ-ளின் வீட்டில் தங்கிவிடுகிறான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அவள் அவனுக்கு இன்பமளிக்கிறாள். இதுவரை மனைவியால் கிடையாத புதிய புதிய இன்பங்கள் அவனுக்குக் கிடைக்கின்றன. நன்கு திட்டமிட்டு அவனின் பொருளின் மீது ஆசைப்பட்டு அவனது பொருள் முழுவதையும் கவரும் நோக்கில் அவர் செயற்படுகிறாள். அவனால் உவகை உணர முடியவில்லை. அவளது அணைப்பில் கிடைக்கும் சுகம் புதியனபோலத் தினமும் இருக்கின்றன. மனைவி, மக்கள், தொழில் யாவற்றையும் மறந்து அவளின் அடிமையாகிறான். அதனால் அவனது பொருட்கள் யாவும்

அவளின் உடைமையாகின்றன. இறுதியில் பொருளில்லாதவனானதும் அவளால் துரத்தப்படுகின்றான்.

இந்த நிலையில் பெருஞானியும் சித்தருமான திருமூலர் எட்டி மரத்தை உதாரணங்காட்டி எட்டி மரத்தைப் போன்ற பொய்மை மாதர்மேல் ஆசைவைக்க வேண்டாம் என்று சொல்கிறார். அப்படிச் சொல்லும் பாடல் இது.

"இலை நலவாயினும் எட்டி
பழுத்தால்
குலைநல வாங்கனி
கொண்டுன வாகா
முலை நலங் கொண்டு
முறுவல் செய்வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்து
கொள்வீரே!

(திருமந்திரம்:247)



✉ சிந்தியா! தமிழ்க் கட்சிகள் சுயநிர்ணய ஆட்சி அமைக்க சூழ்ச்சி செய்வதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறியுள்ளதே.

என். மணிகண்டன்,
நீர்கொழும்பு.

●தமிழ்க் கூட்டமைப்பினர் இப்போதும் தென் இலங்கை மக்கள் சந்தேகிக்கும் படியான கருத்துக்களைத்தான் பேசுகின்றனர்.

இன்றும் கூட வடக்குக்குச் சிங்களவர்களும், முஸ்லிம்களும் தங்களின் இஷ்டப்படி வந்து செல்கின்றார்கள், கலாச் சாரத்தைச் சீரழிக்கின்றார்கள், வளங்களைச் சூறையாடுகின்றார்கள் என்றுதான் கூறுகின்றார்கள். இப்படிக் கூறுவதுதான் தமிழ் தேசியம் என்று பாராட்டவும் செய்கின்றனர்.

இந்த நிலைப்பாட்டுக்குத் தமிழ் மக்கள் வாக்களித்து அங்கீகாரம் வழங்கி இருக்கின்றார்கள் என்று தமிழ்மக்களை ஏனைய இனங்களின் பகையாளிகளாகவும் காட்டி வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

இதே மனோநிலை தானே, தெற்கிலும் மேற்கிலும் வளரும். அதன் வெளிப்பாடுதான் அது.

✉ சிந்தியா! ரெலோ இயக்கம் மீண்டும் ஓரணியில் இணைந்திருப்பது பற்றி உங்களின் கருத்து என்ன?

எஸ்.சிவகரன்,
வவுனியா.

●விடுதலைக்கான போராட்டத்தில் குதித்த அத்தனை இயக்கங்களையும், தலைமைகளையும், போராளிகளையும் அழித்துச் சிதைத்தது புலிகள்தான்.

பின்னர் அரசியல் நலனுக்காக தலைமைகளை, தோழர்களை அழித்த புலிகளுக்கு புகழ்பாடி கூட்டமைப்பில் பலர் ஐக்கியமாகியது உலகறிந்த இரகசியம். தற்போது புலிகள் இல்லாத சூழலிலும், யாருக்கும் கட்டுப்படத் தேவையில்லா நிலையிலும் ஓரணி சேர்கின்றனர்.

சகபோராளிகளை அநாதரவாகக் கைவிட்டவர்களுக்கு இந்த முயற்சி வெற்றியளிக்குமா என்பது கேள்விக்குறிதான்.

✉ சனல் - 4 'கொலைக் களம்' வீடியோ சிந்தியாவைச் சிந்திக்க வைத்ததா?.

எம். விதுஷா,
யாழ்ப்பாணம்.

● ஐ.நா.சபை செயலாளர் நாயகம் சொல்வது போல நான் இன்னும் அதைப் பார்க்கவில்லை என்று என்னால் பொய் சொல்ல முடியவில்லை.

பார்த்தேன், உணர்ந்தேன், சிந்தித்தேன். தமிழ் மக்கள் என்ன விலை கொடுத்திருக்கின்றார்கள் என்று சிந்திக்கும் அதே வேளை, அடுத்து என்ன செய்யப்போகின்றோம் என்பது பற்றியே சிந்திக்கின்றேன்.

கொடூரமான பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதற்குத் தமிழ் மக்கள் பெரும் விலை கொடுத்துள்ளார்கள் என்பது மட்டும் உண்மை.

அந்த வீடியோவில் காட்டப்படுகின்ற நிர்வாணக் காட்சிகள், மூன்றாம் மனிதனுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். அது நமது சகோதரியாக இருந்தால், அவர்களின் சகோதரர்களுக்கு எத்தகைய கொதிப்பை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப் பார்க்காமல், அதைப் பிரதி எடுத்து விற்பனை செய்து வெள்ளைக்காரனின் அனுதாபத்துக்கு அலைகின்ற மனநோயாளிகளாகி விட்டோமோ என்றும் சிந்திக்கின்றேன்.

இந்த உடல் நிர்வாணமாக இருந்ததாலே மூடி மறைக்கும் கலாச் சாரத்திலிருந்து விடுபட்டு நிர்வாண உடல்களைப் பார்வைக்குக் காட்சிப் படுத்தும் வக்கிரம் எத்தனை பயங்கரமானது என்று சிந்திக்கின்றேன்.

✉ சிந்தியா! இலங் கையிலிருந்து அகதியாகத் தஞ்சம் கோரி இலண்டன் சென்றவர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை எதைக் காட்டுகின்றது?

என். பாலன்,
திருகோணமலை.

● இலண்டன் போன்ற நாடுகளில் வேறு நாட்டவர்கள் குடியிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான்.

ஆனால் நம்மை வெள்ளையனா? ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்தவனா? ஆபிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்தவனா? என்று பார்த்து வகைப்படுத்திக் கொள்வது அவர்களின் வழக்கம். அதாவது முப்பது ஆண்டுகளாக இலண்டன் வாசியாக வாழ்ந்தாலும் பூர்வீகம் ஆசியாவைச் சேர்ந்தவன் என்பது நமக்குப் பொருந்தும். இந்த நிலையில், போதுமான காரணம் 'இல்லாமல்' ஏற்புடையதற்ற குற்றச்சாட்டுக்களை கூறுவது மட்டும் குடியுரிமை பெறப் போதாது. நம்மவர்கள் நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்கள், அடாவடித்தனங்கள் அந்த நாடுகளின் நாகரிகங்களுக்கு பொருத்தப்பாடானதல்ல. ஆகையால் முன்னைய தவறுகள் மீண்டும் இடம்பெற அனுமதியளித்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் விழிப்படைந்துள்ளார்கள் என்று நினைக்கின்றேன்.

✉ சிந்தியா! ஆசைகள்தான் எல்லாத் துன்பத்துக்கும் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளலாமா?

எச்.எம்.எம். மஸ்னவி,
புத்தளம்.

●நூற்றுக்கு இருநூறு தடவை ஏற்றுக்கொள்ளலாம்.

"ஆசையே அலைபோலே
நாமெல்லாம் அதன்
மேலே.."

என்ற பாடல் வரியும் "பூமியை வெல்ல ஆயுதமெதற்கு
ஆசை துறந்தால் அகிலம் உனக்கு..." என்ற பாடல் வரிகளும் சொல்லுகின்ற தத்துவம் இதைத்தான் சொல்கின்றது.

✉ சிந்தியா! இவ்வாண்டுக்கான விஜய் ரீவியின் விருது விழாவில் ரஜினிகாந்துக்குச் சிறந்த வில்லன் விருது கிடைத்திருப்பது பற்றி?

சி.கேசி,
கொழும்பு.

●சரியான முடிவு. மனிதன் தனக்குள் இருக்கும் வில்லனை எதிர்கொள்வது மிக மிகக் கடினமானது. எந்திரன் படத்தில் ரஜினிக்கு ரஜினியே வில்லனாகியதுதான் கதைக்கு ஒரு கம்பீரம் கொடுத்தது. வேறு ஒருவர் வில்லனாக நடித்திருந்தால் படம் வழமையான சினிமாவாகவே இருக்கும். வில்லனாக திரைக்கு அறிமுகமான ரஜினிக்கு வில்லனுக்கான விருது கிடைத்திருப்பது வித்தியாசமான அனுபவம்தான். அவர் சுப்பர் ஸ்டார் வில்லன்.

சிந்தியா ✉ பதில்கள்

# உடலுக்கு கேடு விளைவிக்கும் புகைத்தல் பாவனை

கிருபா ஜனோ

புகைபிடிக்கும் பழக்கம் சமூகத்திற்கு கேடு விளைவிக்கிறது என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

புகை பிடிப்பவர்களில் பெரும்பாலானோர் அந்தப் பழக்கத்தை எப்படியாவது விட்டுவிட வேண்டும் என நினைத்தாலும் விட முடியாமல் படாத பாடு படுகின்றார்கள்.

இந்த புகை பிடிக்கும் பழக்கத்தை ஒட்டுமொத்தமாக சமூகத்திலிருந்து களைந்துவிட இருக்கும் ஒரே வழி ஒட்டுமொத்தமாக சிகரெட் உற்பத்தியை தடை செய்வது என்று நினைக்கலாம். ஆனால் அது அத்தனை சுலபமான காரியமல்ல.

புகையிலை பயிரிடும் விவசாயிகள், புகையிலை வர்த்தகர்கள், சிகரெட் ஆலையில் வேலை செய்பவர்கள், அந்தத் தொழிலில் புழங்கும் பணம், உள்நாட்டு உற்பத்தியில் சிகரெட் தொழிலின் பங்களிப்பு, அந்த தொழிலில் முதலீடு செய்திருக்கும் உள்நாட்டு வெளி நாட்டு, நிதி நிறுவனங்கள், சிகரெட் உற்பத்தியிலும் விற்பனையிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுகிறவர்கள் அனைவரையும் பாதிக்கக் கூடிய ஒரு பிரச்சினையாகவே உள்ளது.

புகை பிடிக்கிற காட்சிகளை திரைப்படங்களில் இருந்து நீக்குவதன் மூலம் அப்பழக்கத்தை படிப்படியாக சமூகத்தில் இருந்து ஒழித்துவிட வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை.

புகை பிடிப்பவர்களில் பெரும்பாலானோரிடம் எந்த வயதில் இந்தப் பழக்கம் ஏற்பட்டது என்று கேட்டால், 17 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஆக சிகெரட் பழக்கம் ஒருவரை வாலிப வயதில்தான் பற்றிக் கொள்கிறது. குறிப்பாக பாடசாலை இறுதி வகுப்புகளிலும், கல்லூரிப் பருவங்களிலும் தான் இந்தப் பழக்கங்கள் பெரும்பாலும் இவர்களை பற்றிக்கொள்கின்றது. பள்ளிக் கல்லூரிகளுக்கு அருகாமையில் இருக்கும் கடைகளில் சிகரட் விற்பனையைத் தடை செய்யலாம்.

இந்த குறிப்பிட்ட வகையினரை சிகரெட் பழக்கம் போகாமல் பார்த்துக் கொண்டாலே புகை பிடிக்கிற பழக்கத்தை பெருமளவில் குறைத்துவிடலாம்.

புகை பிடிக்கிற பழக்கத்தினால் ஏற்படுகின்ற தீமையை, உடல்நலக் கேடுகளை சமூகவியல் வகுப்புகளில் ஒரு பாடமாக வைக்கலாம். ஆரம்ப காலங்களில் இப்போது மேற்கொள்ளப்படும் புகைத்தலுக்கு எதிராக பிரச்சாரங்கள் இல்லை. அவ்வாறு இருந்திருப்பின் ஓரளவேனும் புகைத்தல் பழக்கத்தை கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

புகைபிடிக்கும் பழக்கம் இருக்கும் பெரியவர்கள் தங்கள் குழந்தைகளை "கடைக்குப்போய் ஒரு சிகரெட் பைக்கற் வாங்கி வா" என்று சொல்லாமல் இருப்பதும் குழந்தைகளுக்குத் தெரியும்படியாக புகை பிடிக்காமல் இருப்பதும் இன்று அவசியமாக இருக்கிறது. ஏனெனில் இவ்வாறான செயற்பாடுகள் பெருமளவில் இளவயதில் புகை பிடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்குக் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

புகைத்தல் பாவனையால் ஆண்டுதோறும் சராசரியாக 20 ஆயிரம் பேர் வரை இறக்கிறார்கள் என்கிறது கருத்துக்கணிப்பு, தன்னைப் பற்றி எந்தக் கவலையுமின்றி புகைத்தலுக்கு அடிமையானவர்கள் மற்றவர்களைப் பற்றி நினைப்பதற்கு நியாயமான கருத்துக்கள் இல்லை.

புகை பிடிப்பதனால் ஏற்படும் விளைவுகளை ஒரு நிமிடம்கூட இவர்கள் நினைத்துப் பார்ப்பது கிடையாது. ஏனெனில் அதில் அவ்வளவு இன்பத்தை பெறுகின்றார்கள் போலும். படிப்படியாக தமது உயிரைக் காலனுக்கு இரையாக்குவதோடு சூழலையும் மாசுபடுத்தி பிறரது ஆரோக்கியத்தையும் பறிக்கிறார்கள்.

பிறரைப் பற்றி நினைத்திருந்தால் அவன் தனது நிலையை உணர்ந்து ஒழுக்க சீலனாய் மாறியிருக்கலாமே. எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாய் இருந்திருக்கலாமே, என்ற கேள்வி நம் முன் எழுகின்றது.

புகைத்தல் தொடர்பான கணக்கெடுப்புகளில் புகைத்தலினால் உடனடியாகவும் கடுமையாகவும் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களும் குழந்தைகளும் என்றே கூறப்படுகின்றது.

புகைத்தலினால் தங்களது எதிர்காலத்தை தொலைத்தவர்கள் கூடவே எதிர்காலச் சந்ததியினரையும் இவ்வாறானதொரு இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடுவார்கள் என்ற அச்சம் பரவலாக மக்கள் மத்தியில் உள்ளது.

பொது இடங்களில் புகைத்தலை 100% தடை செய்வதற்கு சட்டமூலம் அமுல்படுத்தப்பட இருக்கிறது. இது தொடர்பாக புகைத்தல் மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகார சபைத் தலைவர் தெரிவித்திருந்த கருத்துக்கள் இவ்வாறு அமைந்திருந்தது.

பொது இடங்களில் புகைத்தலை முற்றாகத் தடை செய்ய வேண்டுமென புகைத்தல் மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகார சபைத் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

அதே நேரம் புகைத்தலை குறைப்பதற்கான எச்சரிக்கைகளையும் விடுக்கும் வகையில் சட்ட விதிகளை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்கான புதிய சட்டம் விரைவில் அமுற்படுத்தப்படுமெனத் தெரிவித்துள்ள கார்லோ பொன்சேகா மேற்படி அதிகார சபையின் உத்தேச சட்ட திருத்தம் சுகாதார அமைச்சின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

புகைத்தல் மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகார சபையின் புதிய சட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் பொது இடங்களில் புகைபிடிக்க முடியாது. அதே நேரம் ஹோட்டல்களில் 30 அறைகள் அல்லது அதற்கு மேல் அறை வசதிகள் உள்ள இடங்களில் மாத்திரமே புகைப்பதற்கு அனுமதிக்க முடியும்.

இந்த புதிய நடைமுறை மூலம் 'புகைத்தலுக்கு தடை' எனும் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ள வாசகங்களை முற்றாக ஒழிக்க முடியும். சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இந்தத் தேவை ஏற்படாது என கார்லோ பொன்சேகா மேலும் கூறினார்.

இரண்டாம் நிலை புகைத்தல் தடை மூலம் பொது மக்களுக்கு எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் மதுபானம் அருந்தும் மற்றும் புகைத்தல் பழக்க வழக்கத்தினால் சுகவீனம் உற்றவர்கள் அரச வைத்திய சாலையில் சிகிச்சை பெற வேண்டுமானால் கட்டணம் செலுத்த வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் குடிப்பழக்கம் மற்றும் புகைத்தல் பழக்கத்தை இல்லாதொழிக்க மேற்கொள்ளும் முயற்சியாகவே இவ்வாறு ஒரு செயற்றிட்டம் மேற்கொள்ளவுள்ளதாகவும் மது மற்றும் சிகரட்டினை அதிக பணம் கொடுத்து வாங்குபவர்களுக்கு மருத்துவத்திற்கும் பணம் செலுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது இன்பத்துக்காக மட்டும் புகைப்பழக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் தனவான்களே! எமது சூழலையும் எதிர்கால சந்ததியினரையும் கருத்திற் கொண்டு ஆரோக்கியமான தூய சுற்றாடலை உருவாக்க உங்களது பங்களிப்பும் நமது நாட்டுக்குத் தேவை என்பதை சற்று உணர்ந்து நடந்தால் அனைவரும் ஆரோக்கியமாக வாழ வழியேற்படும்.

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி
**காத்தான்குடியில்...)**

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், இப்போதைய கால கட்டத்தில் பெண் பிள்ளைகள் என்றால் அவர்கள் திருமணம் முடிக்கும் வரையும் தாய், தகப்பன் கண்காணிப்பில்தான் இருக்க வேண்டும். நல்லவழியில் சென்றாலும் அவர்களை சூழல் கெட்ட வழியில் மாற்றி விடும் என்பதில் ஐயமில்லை. என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இதேவேளை யாரோ ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்காக மற்ற எல்லா மாணவிகளையும் செல்லவிடாமல் தடைசெய்வது தவறு. விகிதாசார அடிப்படையிலோ அல்லது எந்த அடிப் படையில் பார்த்தாலும் மிகக் குறைந்தவளவில் மாணவிகளே அவ்வாறு ஈடுபடுகின்றனர். குடும்ப வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்களின் விளைவாகவே இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகள் எங்கு செல்கிறார்கள், என்ன படிக்கிறார்கள் என்று கவனிக்கவேண்டும். இவ்விடயத்தில் ஈடுபடும் மாணவிகளை அவர்களது பெற்றோர்களே கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் உள்ளது.

தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட்ட வேண்டும் என்ற அடிப் படையில் ஆபாசப்படம் பார்த்த குற்றத்துக்காக இரு மாணவிகளையும், எல்லோருக்கும் காட்டி அவர்களை மனதளவில் பெரியளவுக்கு கொடுமை செய்வதானது வீண் விளைவுகளை ஏற்படுத்தும். ஆனாலும் மாறாக அவ்வாறு தவறிழைத்து பின்னர் சமூகத்தோடு சேரவருபவர்களை நாம் எவ்வித பாகுபாடோ அல்லது எவ்வித தண்டனையுமில்லாமல் சமூகத்தோடு சேர்த்துக்கொள்வதனால் எவ்வித பயமும் இல்லாத நிலையைத் தோற்றுவிக்கும்.

காத்தான்குடி சம்பவத்தில், பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் பிரதேசத்தின் நிலைமை வழமைக்கு கொண்டு வரப்பட்டதுடன் பெரியளவான பிரச்சினையும் ஏற்படாது தவிர்க்கப்பட்டுள்ளது. கலாசாரம் என்பதும் கட்டுப்பாடு என்பதும் உலகின் வளர்ச்சிக்கும், உலக ஓட்டத்துக்கும் ஏற்ப மாற்றங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அத்துடன் ஆண்களைப் பொறுத்தவரையில் உள்ள கட்டுப்பாடுகளுக்கு அமைவாக பெண்களுக்கும் இருந்தால் கூட பரவாயில்லை.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் ப்ரஷாந்த் ஜெயக்கொடி பெற்றோர்கள் கொடுத்த புகார்களின் அடிப் படையில், வழக்கு ஒன்று பதியப்பட்டு, சம்பந்தப்பட்ட இரு இளைஞர்களைத் தேடிவருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்

அதேநேரம், காத்தான் குடியைச் சேர்ந்தவரும், இலங்கையின் மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சருமான, எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா இந்தப் பிரச்சினையில் உண்மையில் பெண்கள் தாக்கப்பட்டார்களா என்பது தனக்குத் தெரியாது. உண்மையில் பெண்கள் அந்த மாதிரி காரியங்களில் ஈடுபட்டாலும், அது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டியது, பொலிசாரே தவிர மற்றவர்கள் அல்ல. தனி நபர்கள் இந்த விஷயத்தில் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால் இது ஒரு மத அடிப் படைவாதப் பிரச்சினை அல்ல, கலாச்சாரப் பிரச்சினையாகப் பார்க்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் அதிகாரங்கள், கட்டுப்பாடுகள், பாதுகாப்புகள் என அனைத்தும் இருந்தும் காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் அவற்றிற்குப் பிரயோசனங்கள் எதுவும் இருப்பதில்லை. உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதும், தனிமனிதர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதும் பொலிசாரின் கடமை என்ற வகையில் செயற்பட்டவர்களைக் கல்லால் அடித்துத் துரத்த முயலும் அளவுக்கு எமது நாட்டில் யாருக்கும் துணிவிருப்பதாகத் தெரியவில்லை.

எவ்வாறாயினும் காத்தான்குடியில் நடைபெற்ற ஆபாசப் படம் பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இரு மாணவிகள் மீது நடத்தப்பட்ட இவ்வாறான கொடுமை மனச்சாட்சியுள்ளவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததே.

கட்டுப்பாடுகள் ஒரு மனிதனை நல்வழியில் கொண்டு செல்வதற்காகவே ஒழிய துன்பப்படுத்துவதற்கோ மனதை வருத்துவதற்கோ அல்ல என்பதனை அனைவரும் இந்த இடத்தில் விளங்கிக் கொள்ள வேண்டும். பல்வேறு சமூகங்கள் உள்ள இடங்களில் இறுக்கமான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்க வேண்டுமானால் நாம் பழங்காலத்தவர்கள் போல் வாழ்ந்து எதனையும் அடைந்துவிடமுடியாது என்பதனையும் இந்த இடத்தில் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எது எப்படியிருந்தாலும் காத்தான்குடியில் நடைபெற்றது போன்றதொரு சம்பவம் இனியொரு தடவை நடந்துவிடாது அனைவரும் அவதானிப்புடனும் இதயசுத்தியுடனும் இருப்பது நல்லதே.

## மனோதத்துவ வைத்தியம்
General Psychotheraphy

அகில உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P. ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

**யாழ்ப்பாணத்தில் 05.07.2011 – 10 .07.2011 வரை**

KAMAL TOURIST INN
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)
392/A Clock Tower Street, Jaffna.

T.P:0214922403
Hotline:0719315664
0777569205

கமல் ரூரிஸ்ற் இன்
392/A மணிக்கூட்டுக் கோபுரவீதி,
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)

*** தாம்பத்திய பாதிப்புக்கு 100% இற்கு 10% கூட நோய் காரணம் அல்ல, 90% மனோநிலையால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையே காரணம்.**

இப்படியானவர்கள் திருமணம் செய்யப் பயந்து திருமணத்தை வெறுக்கிறார்கள். பலர் திருமணம் செய்து ஏற்பட்ட தோல்வியால் வாழ்வே வீணாகிவிட்டது என்று பயந்து வாழ்வை வெறுக்கிறார்கள். இதற்கு இளம் வயதில் இருந்து (முஸ்தீ மைத்தூனம்) கரப்பழக்கம் செய்து சீக்கிரம் விந்து வெளியாக்க பயிற்சி கொடுத்தாலும் சிலர் அளவுக்கதிகமான உறவு கொள்வதாலும் முறையற்ற தொடர்புகளாலும் உடல் ஆற்றல் குன்றி நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு இப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்திக்கொள்கின்றனர்.

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற முக்கியத்துவம் கொடுக்கும் இக்காலத்தில் இவ்வாறான பாதிப்புக்களை Dr.P.ஆறுமுகம் அவர்கள் விஞ்ஞான ரீதியில் அற்புதமான மனோதத்துவ பயிற்சியைக் கொடுத்து அடிமனதில் நான் முடியுமானவனாய் ஆகிவிட்டேன் என்று நம்பிக்கையைக் கொடுக்கின்றார்.

* வெளிநாட்டினருக்கு விஷேட வைத்தியம், மனோதத்துவ ஒலிப்பதிவு நாடாவும் நாலுவிதமான $1\frac{1}{2}$Kg மூலிகை மருந்தையும் அனுப்புகிறார்.

*** யாழில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.**

**விளக்கம்பெற 300ரூபா மணி ஓடர் அனுப்பவும்.**

**முற்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே வைத்தியம் செய்யப்படும்.** (C/790)

# இந்தவாரம் உங்கள் பலன்

(30.06.2011 தொடக்கம் 06.07.2011 வரை

## மேடம்

மங்களகரமான வாரம். எடுக்கின்ற எல்லாக் காரியங்களும் மங்களகரமாகவே முடியும். உறிவனர்கள், நண்பர்கள் ஆதரவாக இருப்பர். பணம் வரும். சமூகத்தில் நன்மதிப்பு உயரும். தூரத்திலிருந்து நல்ல சேதி கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். குடும்ப அங்கத்தவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்வார்கள். வீண் பேச்சுக்களைத் தவிர்த்தல் நல்லது. தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். சிலவேளைகளில் வீண் வதந்திகள் பரவ இடம் உண்டு. மாற்றங்களைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்க வேண்டாம். எந்தக் காரியத்திலும் நேர்மை, நீதியைக் கடைப்பிடிக்கவும். மாணவ சமுதாயம் கல்வியில் அக்கறை காட்டும்.

## இடபம்

இது சுமாரான நல்ல வாரம். எடுக்கும் செயல்கள் யாவும் வெற்றிகரமாக அமையும். பொருளாதாரம் மேம்படும். உடம்பு ஆரோக்கியமாக இருக்கும். குடும்பத்தில் நிம்மதி நிலவும். வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கிக் குவிப்பீர்கள். கணவன்–மனைவி உறவு சுமூகமாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் சுமூக உறவு காணப்படும். கொடுத்த கடன் வசூலாகும். சேமிப்புக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படும். மாணவ சமுதாயம் நல்ல வழியில் கல்வி கற்கும். தொழில் ஸ்தானத்தில் சுமூகநிலை காணப்படும். வீண் வதந்திகளை நம்பவேண்டாம். தொழில் பிரச்சினை உண்டு. அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

## மிதுனம்

இது மிகவும் அனுகூலமான வாரம். செய்கின்ற காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக அமையும். புதிய வீடு, வாகனம் வாங்கும் பலன் உண்டு. மற்றவர்களின் விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. வீணான செலவுகளைக் குறைக்கவும். குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்ப அங்கத்தவர்கள் எதேச்சையாகவே காரியங்களில் ஈடுபடுவர். நண்பர்கள் கடன் கேட்டுத் தொல்லை கொடுப்பார்கள். பணவருவாய் எதிர்பார்த்தபடி நடக்கும். தூரத்திலிருந்து நல்ல சேதி வரலாம். தாய் வழி உறவுகளிடமிருந்து எதிர்பாராத உதவி கிட்டும். மாணவ சமுதாயம் கல்வியில் நாட்டங்காட்டுவர். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## கடகம்

இது மிகச் சாதகமான வாரம். எடுக்கின்ற செயல்கள் அத்தனையும் அழகாக முற்றுப்பெறும். தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்கள் மறைமுக எதிர்ப்புக்காட்டுவார்கள். ஆனாலும் வெற்றி கிடைக்காது. நீங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே பண வருவாயும் இலாபமும் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்கும் பலன் உண்டு. தளபாடங்கள், வாகனங்கள் வந்த சேரக்கூடும். தொழில் ஸ்தானத்தில் உங்கள் மதிப்பு பன்மடங்காக உயரும். குடும்பத்தில் குதூகலம் இருக்கும். மாணவர்கள் கல்வியிற் கவனம் எடுப்பர். தேகநலம் பாதிப்படையும். மருத்துவச் செலவுக்கு இடம் உண்டு. கலைஞர்கள், வர்த்தகர்கள் கௌரவம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: சனி.

## சிங்கம்

நிம்மதியான சந்தோஷமான வாரம். நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களையும் மேலதிகாரிகள் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல அபிப்பிராயம் நிலவும். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாடும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். எதிர்பார்த்திருந்ததற்கு மேலாகவே பணவருவாய் கிடைக்கும். சகோதர வழி உறவுகள் தொந்தரவு தருவார்கள். கடமையைச் சரியாகச் செய்ததனால் பாராட்டும் கிடைக்கும். உழைப்புக்கேற்ற ஊதியம் உண்டு. குடும்ப உறுப்பினர்கள் உங்களுடன் ஒத்துப்போவார்கள். மாணவ உலகம நன்மையடையும். கலைஞர்கள், வர்த்தகர்கள் நலம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்:ஞாயிறு.

## கன்னி

இது உங்களுக்கு நல்ல அமைதியான வாரம். எடுக்கின்ற காரியங்களை எப்பாடுபட்டாவது நல்ல முறையில் வெற்றிகரகமாகச் செய்து முடிப்பீர்கள். பணக் கஷ்டம் கொஞ்சம் குறையும். பூர்வீகச் சொத்துக்களால் நன்மை வரப்போகிறது. குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். கணவன்–மனைவிடையே சுமூக நிலை காணப்படும். உறவினர்கள், நண்பர்கள் தாமாகவே வந்து உதவி செய்வர். எதிர்பார்த்த கடன் கைக்கு வந்து சேரும். உடம்பு நல்ல ஆரோக்கியமாக இருக்கும். திருடர்கள் வரக் கூடும். அவதானமாக இருக்க வேண்டும். வாகனம் தொல்லை கொடுக்கும். அயல்வீட்டாருடன் அதிகம் கதைக்க வேண்டாம். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவர். அதிர்ஷ்ட நாள்:திங்கள்.

## துலாம்

இது உங்களுக்கு நன்மை தரும் வாரம். தொழில் ஸ்தானத்தில் கடமைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் கொஞ்சம் சிக்கல் வரக் கூடும். பொருளாதாரம் நல்ல முறையில் அமையும். உற்றார், உறவினர்கள் மத்தியில் மதிப்பு உயர்வடையும். புத்திரக்காரர்களால் தேவையில்லாத பல பிரச்சினைகள் உருவாக இடமுண்டு. ஆனால் பாதிப்பு வரமாட்டாது. குடும்பத்தில் பிரச்சினைதான். ஆலய வழிபாடு நன்மை பயக்கும். எதிர்பார்க்காத காரியம் ஒன்றினால் பணம் வரக் கூடும். இவ்வாரம் வெளியிலிருந்து நல்ல சேதி வரும். வேலைப்பளு சற்று அதிகமாகவே காணப்படும். நண்பர்களால் தொந்தரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர். தேக நலமும் குறையும். அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

## விருச்சிகம்

மங்களகரமான மகிழ்ச்சியளிக்கும் வாரம். நடுநடுவே குழப்பங்கள் வந்தாலும் ஈற்றில் நன்மையாகவே முடியும். தொழில் ஸ்தானத்தில் மறைமுக எதிர்ப்பு இருக்கும். அதனால் பாதிப்பில்லை. குடும்ப உறுப்பினர்கள் ஒத்துப்போவார்கள். எதிர்பாராத வகையில் பண வருவாய் அதிகரிக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். கடன் தொல்லையும் நீங்கும். வெளிநாட்டுப் பயணம் சரிவரும். உற்றார் உறவினர்களால் தொந்தரவு உண்டு. கண் பாதிப்படையக் கூடும். சகோதர வழியால் நன்மை உண்டு மாணவர்கள் கல்வியிற் கவனஞ் செலுத்துவர். மருத்துவச் செலவுக்கு இடமுண்டு. கலைஞர்கள் வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். ஆலய வழிபாடு நலந்தரும். அயல் வீட்டாருடன் கதையைக் குறைக்கவும்.

அதிர்ஷ்ட நாள் :புதன்.

## தனுசு

இன்பம் பயக்கும் வாரம். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் செய்த ஒரு காரியத்தால் கூடிய நன்மை கிடைக்கும். அதனால் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் முரண்பட்டாலும் ஈற்றில் தங்கள் பக்கம் திரும்புவர். உற்றார். உறவினர்கள் தேடி வந்து உதவுவர். தாய்வழி உறவுகளால் நன்மைகள் கிட்டும். சாப்பாட்டில் கவனமாக இருக்கவும். உபாதைகள் வரக்கூடும். செய்காரியங்கள் கொஞ்சம் காலதாமதம் காட்டும். எனினும் ஈற்றில் வெற்றி உங்களுக்கே. கடன் எதுவும் கொடுக்க வேண்டாம். பதவி உயர்வுக்கு வாய்ப்புண்டு. வாகனங்கள் தொல்லை கொடுக்கலாம். அயல் வீட்டாருடன் பகைக்க வேண்டாம். கலைஞர்கள், வர்த்தகர்களுக்கு பரவாயில்லை. வருவாய் உண்டு. அதிர்ஷ்ட நாள்:வியாழன்.

## மகரம்

இந்த வாரம் கொஞ்சம் கஷ்டமாகவே இருக்கும். பணவருவாய் வழக்கம் போலிருந்தாலும் தேவையற்ற கொடுக்கல் வாங்கல்களால் பல பிரச்சினைகள் உருவாகலாம். நண்பர்களே பகைவர்களாக மாறிவிடுவர். உற்றார், உறவினர் தாமாக வந்து சுகதுக்கங்களில் பங்கேற்பர். உடம்பு சற்று சுகம் குறைந்து காணப்படும். வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டி வரும். கடன் கொடுத்தவர்கள் வந்து நின்று கலகம் செய்வார்கள். குடும்ப அங்கத்தவர்களால் தொந்தரவு இருக்காது. தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருக்கவும். வாழ்க்கையில் விரக்தி ஏற்படும். ஆலய தரிசனம் நன்மை பயக்கும். மாணவர்கள் கேளிக்கைகளில் ஈடுபடுவர். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமுறுவர்.

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்

## கும்பம்

இந்த வாரம் மகிழ்ச்சியான வாரம். நீங்கள் எதிர்பாரத்த படியே எல்லாம் நடக்கும். தொழில் ஸ்தானத்தில் நல்லபெயர் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் அனுசரித்துப் போவார்கள். கணவன்–மனையிடையே சுமூகநிலை காணப்படும். கொடுத்த கடன்கள் வசூலாகும். உடம்பு ஆரோக்கியமாகவிருக்கும். கொஞ்சம் தலையிடி மாத்திரம் இருக்கும். வேலைகளில் கவனமாக இருக்கவும். சக ஊழியர்கள் சதி வேலை பார்ப்பார்கள். எனினும் வெற்றி உங்களுக்கே. தாய்வழி உறவுகளால் சில நன்மை கிடைக்க வாய்ப்புண்டு. தூர தேசத்திலிருந்து நல்ல சேதி வரும். ஒப்பந்தங்களில் கையொப்பமிட வேண்டாம். கலைஞர்கள் வர்த்தகர்கள் கௌரவம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்:வெள்ளி.

## மீனம்

நன்மை பயக்கும் வாரம். செய்காரியங்கள் சிறப்பாக முடியும். தொழில் ஸ்தானத்தில் திட்டமிட்டவாறே எல்லாம் நடக்கும். மேலதிகாரிகள் வாழ்த்திப் பாராட்டுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்கள் ஒத்துப் போவார்கள். சுபகாரியங்களுக்கான பேச்சுக்கால் ஆரம்பமாகும். திருமண காரியங்களுக்கும் இடமுண்டு. நண்பர்கள், உறவினர்கள் தாமாகவே வந்து உதவுவர். அயல் வீட்டாருடன் கதையைக் குறைக்கவும். வாகனங்கள் வாங்கும் பலன் உண்டு. சிலவேளை இடமாற்றமும் வரக்கூடும். உடம்பு சுகமாகவே இருக்கும். வீண் செலவுக்ளைக் குறைக்கவும். உணவில் கவனமாக இருக்கவும். கலைஞர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் நன்மையுறுவர். அதிர்ஷ்ட நாள்: சனி

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ! நம்முடைய நாட்டில பல பேருக்கு அடிக்கடி மாறாட்டம் ஏற்படுகுதெண்டு வாத்தியார் சொல்லுறாருங்கோ. எனக்கென்னவோ அடிக்கடி இல்லை மாறாட்டத்தோடைதான் பலபேர் இருக்கினமெண்டதுதானுங்கோ அடியேனின் முடிவுங்கோ. நாட்டில யாருங்கோ நேற்றுப் பார்த்தமாதிரியே நாளைக்கும் இருக்கினம். அவனவன் காலையில ஒருமாதிரியும் மாலையில ஒருமாதிரியுமெல்லோ பேசிக்கொண்டும் நடந்து கொண்டும் இருக்கினம். நீங்களே சொல்லுங்கோ ஒருவராவது சொல்லுக்கும் செயலுக்கும் சரியாக நடந்து கொள்ளினமோ இல்லையே. நாடோடி ஒருவர் சிக்கினாருங்கோ அவர் என்ன சொல்லுறார் எண்டதை கீழ படியுங்கோவன்.**

**நான்:** என்ன அண்ணாச்சி என்ன வேலை செய்து கொண்டிருக்கியள்?

**நாடோடி:** வேலையெண்டு சொல்லிக் கொள்ளும்படியாக ஒண்டுமில்லையுங்கோ. பென்சன் வருகுது, அதை வைத்துக் கொண்டு திரியிறன். பிள்ளையள் வெளிநாடுகளிலை இருக்கினம். வீசா எடுத்து ரிக்கட் போட்டுக் கூப்பிடுவாங்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் போய் பேரப்பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டு வருவன். இப்போதைக்கு இதுதானுங்கோ வேலை.

**நான்:** எங்க சுத்தினாலும் நாட்டுக்கு வந்துடுவியள். நாட்டுப்பற்று அதிகமோ?

**நாடோடி:** அப்புடியெல்லாம் ஒண்டுமில்லையுங்கோ. இந்த நாட்டிலதானே சுவாத்தியம் நல்லா இருக்குது. அதுமட்டுமே இராவணனின் பெண்டாட்டி பிள்ளைகளையும், எல்லாளனின்ர பெண்டாட்டி பிள்ளைகளையும், காக்கைவன்னியனின்ர பெண்டாட்டி பிள்ளைகளையும் இன்னும் பாதுகாத்து வச்சிருந்தாலும் வச்சிருப்பினம். இண்டைக்கு இருக்கிற சில அமைச்சர்மார் யாரும் அப்பபடியொரு தகவலைச் சொல்லிச்சினமெண்டால் சாகிறதுக்கிடையில அவையளையும் ஒருக்கால் பார்க்கலாமெல்லோ. அப்புடிச் சொன்னால் அதை நம்புவியளோ நம்பலாமோ இல்லையோ எண்டது ஒரு பிரச்சனைதானுங்கோ. ஆனால் சொல்லுறவை என்ன ஞானோதயத்தில இருக்கினம். இப்புடி அடிப்படையே தெரியாதவை பதவிக்காகவும் சுகபோகத்துக்காகவும் கூடவே ஒட்டிக் கொண்டு கூலிக்கு மாரடிக்குமாப்போலை புகழ்பாடிக்கொண்டிருக்க அனுமதிச்சதாலைதானே தாங்கள் என்ன சொல்லுறம் எண்டது பற்றியெல்லாம் எந்தக் கவலையும் இல்லாமல் கண்டபடி உளறினம்.

**நான்:** புகழ்பாடி வாழுறதுதானே இப்போதைக்கு இருக்கிற பொலிரிக்ஸ் ட்ரெண்ட்டாக இருக்குது. அதை சிலபேர் அளவோடை செய்யினம். சிலபேர் அத்துமீறி ஓவராகச் செய்யினம். சிலபேர் எப்புடிச் செய்யிறதெண்டு தெரியாமல் தாறுமாறாச் செய்யினம். மொத்தத்தில கொஞ்சமும் கூச்சமோ வெட்கமோ இல்லாமல் புகழ்பாடிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கினம்.

**நாடோடி:** அது சரி நூறு வீதம் சரி. ஆனால் இதில இருக்கிற பெரிய ஆபத்து என்ன தெரியுமோ? ஓவராகப் புகழுறதும் சனங்கள் மத்தியில் வெறுப்பை தோற்றுவிச்சுப்போடும். அனேகமான சந்தர்ப்பங்களிலை ஓவர் புகழ்பாடல்களாலைதான் பல தலைமைகளிண்ர இமேஜ் தவிடுபொடியாகிப் போயிருக்குது. வரலாற்றை ஆசானாக மதிப்பவைக்கு உது விளங்கும் அப்புடி இல்லாமல் சர்வமும் நானே என்று யாரெல்லாம் திரியினமோ அவைக்கெல்லாம் சாத்தான் உந்த புகழ்பாடிகள் உருவத்திலதான் கூடவே ஒட்டிக்கொண்டு இருக்குதுங்கோ.

**நான்:** நீங்கள் நாக்கைக் காட்டுங்கோ பார்ப்போம். ஒருவேளை கருநாக்காக இருந்தால் பலபேரின்ர டப்பா விரைவில டாண்சு ஆடிடுமெல்லோ.


**நாடோடி:** கருநாக்கு இருந்தால் பழியை என்மேல போடலாமெண்டு நினைக்கிறீர் போல. நான் ஒண்டும் சாபம் போடயில்லையுங்கோ. நாட்டு நடப்பைச் சொன்னேன். பக்கத்தில இருந்து புகழேக்க புழுகமாகத்தான் இருக்கும். பிறகு புழுகிறவைக்கு புழுகமாகி அவை இருக்கினம் இவை இருக்கினம், அவையை இவை பாதுகாக்கினம். இவைக்கு அவை பயிற்சி குடுக்கினம். எண்டு டொப்பில போகேக்க தானுங்கோ அடியில நெருப்புக் கொடுத்தமாதிரி இருக்கும்.

**நான்:** அடடா இப்பதானே புடிபடுகுது. அண்டைக்கு பிரதமமானவர் சொன்னதையும் அண்மையில வர்ணனை செய்யிற அமைச்சர் சொன்னதையும்தானே சொல்லுறியள்.

**நாடோடி:** ஐயையோ நான் அப்புடிச் சொல்லவில்லையெண்டு உங்களைப்போல பொய் சொல்ல விரும்பவில்லை. உண்மையைச் சொன்னால் இப்பவெல்லாம் நல்ல பேச்சு, மக்களுக்கு தேவையான பேச்சு கேக்கிறதெண்டால் தேடித்தான் பார்க்கவேணுமுங்கோ.

# யாவும் கலப்படமற்ற கற்பனை

## மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



இப்படிப் புத்தகப் பைண்டுத் தொழிலில் மைக்கேல் எட்டு ஆண்டுகள் இருந்தான். பைண்டு செய்யும் பயிற்சியை இலவசமாக அவரது ஸ்தாபனம் மைக்கேலுக்கு அளித்தது. இதனால் மைக்கேல் வருவாய் தரும் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றான்.

பைண்டுக்கு வரும் புத்தகங்களில் பல, விஞ்ஞான சம்பந்தமானவை, எந்தப் புத்தகங்களையும் படித்து கபளீ-கரம் செய்யும் குணமுடைய மைக்கேலுக்கு, விஞ்ஞானப் புத்தகங்களில் தனியானதோர் ஈடுபாடு விழுந்தது. விஞ்ஞானச் செய்திகளில் பல விஷயங்கள் மைக்கேலுக்குப் புரியாது. ஆனால் அதற்காக அதை ஒதுக்கி விடமாட்டான்.

அந்தப் புத்தகத்து உரிமையாளரிடம் தன் சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்பான். லண்டன் நகரில் அடிக்கடி விஞ்ஞான சம்பந்தமான பிரசாரங்கள் நடைபெறும். பெரிய பெரிய விஞ்ஞானிகளும் அறிவா-ளிகளும் ஆராய்ச்சியாளர்களும் பேசுவார்கள். பிரசங்கங்களைக் கேட்கக் கட்டணம் செலுத்தித்தான் உள்ளே போக வேண்டும். இம்மாதிரிப் பிரசங்கங் களைக் கேட்க வேண்டும் என்று பாரடேக்கு ரொம்ப ரொம்ப ஆசை. ஆனால் அதற்கான காலமோ கட்டணமோ பாவம் அவனிடம் கிடையாதே. ஆனால் அதிர்ஷ்டம் கண் திறந்து பார்த்தது மைக்கேலை.

வேலை செய்யும் இடத்தில் முதலாளி. பிரசங்கங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கினார்.

உலகை வியக்க வைத்தவர்கள்

[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)


7 ஆவது


பிறந்தநாள் வாழ்த்து

28.06.2011

கொழும்பு -06 உருத்திரா மாவத்தையில்
வசிக்கும் திரு. திருமதி கமலேந்திரன் - லக்ஷ்மி பிரியதர்சினி
தம்பதிகளின் ஏகபுதல்வன்

செல்வன் க. ரதீஸ்வரா

தனது 7ஆவது பிறந்த நாளை 28.06.2011 அன்று
உருத்திரா மாவத்தையிலுள்ள இல்லத்தில்
வெகுவிமர்சையாக கொண்டாடினார்.
இவரை இவரின் அன்பு அப்பா, அம்மா அக்காமார்களான
கயல்வழி, ரட்ஷகி மற்றும் தாத்தா, பெரியப்பாமார்,
பெரியம்மாமார், அத்தைமார், மாமன்மார், சித்தப்பாமார்,
சித்திமார், அண்ணன்மார், தம்பிமார், மச்சாள்மார்,
மச்சான்மார் ஆகியோருடன் அனைத்து உற்றார், உறவினர்கள்,
நண்பர்களும் இணைந்து ரதீஸ்வராவை
பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தகவல்
A.K. வதிமகன்,
யாழ்ப்பாணம்


# நேர்த்தி!

இப்படங்களைப் பார்க்கும் போது அண்மையில் சனல்- 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட கொலைக்களம் என்ற குறுந்திரைப்படத்தில் காணப்பட்ட காட்சிகள் மனதில் இன்னுமொரு முறை பதிவாகிறது. ஆனால் இதுவொன்றும் அப்படியான சமாச்சாரம் அல்ல.

ஆன்மீகத்தின் உச்சமாய் தங்கள் குலதெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் செய்யும் பக்தர்கள் நம் மத்தியிலும் இருக்கிறார்கள் அல்லவா? குறிப்பாக இந்துமதத்தவர்கள் நேர்த்திக்கடனாக காவடி எடுத்தல், செடில் குத்துதல் என்றெல்லாம் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்கு யமாய்ப்பார்கள். அதுவே பல சமயங்களில் எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவதுண்டு.

ஆனால் இங்கே படத்தில் காட்சியளிக்கும் தாய்லாந்து நாட்டு பக்தர்கள் சிலர்





அதையும் தாண்டிவிட்டார்கள். தம்மைச் சுற்றி முள்ளுக்கம்பிகளைப் போர்த்தி தம்மை வருத்துவதன் மூலம் இரத்தம் கொட்டக் கொட்ட நேர்த்திக்கடன் தீர்க்கிறார்களாம்!

அட கடவுளே! இப்படியானவர்களை அந்தக் கடவுளாலே கூட காப்பாத்த முடியாதப்பா!

# பறவை


தினமும் வேலைக்குச் செல்பவர்கள் வாகன நெரிசலில் சிக்கி வாழ்க்கை வெறுத்துப்போய் மீண்டும் வீடு திரும்புவது வழமையாகிவிட்டது. வெயிலில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது மேலும் வாழ்க்கை வெறுக்கும்.

பறந்து போகக்கூடிய மோட்டார்சைக்கிள் இருந்தால் எப்படி இருக்குமென அடிக்கடி தோன்றுவதுண்டு. அந்த கனவு இப்பொழுது நிஜமாகியிருக்கிறது.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிறிஸ் மல்லோய் என்னும் பொறியியலாளர் பறக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றினை உருவாக்கியிருக்கிறார். ஹூவர்கிறாப் படகின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே இந்த ஹூவர் மோட்டார்சைக்கிளை அவர் உருவாக்கியிருக்கிறார்.

'ஸ்டார் வோர்' திரைப்படங்களில் அதிக நாட்டங்கொண்ட கிறிஸ், அதில் வருகின்ற பறக்கும் மோட்டார்சைக்கிள் போன்ற தொன்னை நிஜத்தில் உருவாக்க விரும்பினார்.

அந்த நினைப்பில் உருவாகியதுதான் இந்த பறக்கும் மோட்டார்சைக்கிள். இந்த கண்டுபிடிப்பு பற்றி கிறிஸ் குறிப்பிடுகையில்,






"இந்த ஹூவர் மோட்டார் சைக்கிளை 10 ஆயிரம் அடி உயரத்தில் மணிக்கு சுமார் 270 கிலோமீற்றர்கள் என்ற வேகத்தில் செலுத்த முடியும். என்னுடைய கண்டுபிடிப்பான இந்த பறக்கும் மோட்டார் சைக்கிள் வெறும் 110 கிலோகிராம் நிறையினையே கொண்டுள்ளது. இது 1170 சி.சி இயந்திர வலுவினைக் கொண்டது" என்று குறிப்பிட்டார்.

கிறிஸின் இந்த அற்புத கண்டுபிடிப்புக்கு முதலீடு செய்ய யாராவது முன்வருவார்களேயானால் தன்னால் மேலும் அரிய படைப்புகளை வழங்க முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த பறக்கும் மோட்டர்சைக்கிள் சுமார் 40 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (சுமார் 43 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்) பெறுமதி வாய்ந்தமை என கணிக்கப்பட்டிருக்கிறது.

---

**இதுவரை நீங்கள் எத்தனையோ சலூன்களில் முடிதிருத்தியிருப்பீர்கள்.. ஆனால் இதைப்போல வித்தியாசமாக வினோதமாக ஒரு முறையை நீங்கள் செய்திருக்கவே மாட்டீர்கள். கத்திரிக்கோல் அல்லது முடிதிருத்தும் பிரத்தியேகமான உபகரணங்கள் மூலம்தான் முடிதிருத்துவது வழமை. ஆனால் இவற்றையெல்லாம்விட வினோதமாக தீச்சுவாலையால் முடி திருத்துகிறார்கள் இவர்கள். இப்படி முடித்திருத்தம் செய்வதால் ஆரோக்கியமான முடி வளரும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த வினோதமெல்லாம் நடப்பது துருக்கி நாட்டில்தான்.**






தினமுரசு இப்போது தினந்தோறும்...

16 பக்கங்கள் விலை 10 ரூபா மட்டுமே.

பதிவிறக்கப் பெட்டகம், பரமர் சங்கமம், செய்தி வெண்பா, உள்ளூர் - சர்வதேச விளையாட்டுச் செய்திகள், விந்தைச் செய்திகள் மற்றும் வடக்கு ? கிழக்கு ? தேசிய ? சர்வதேச அனைத்துவித செய்திகளும்.

தினந்தோறும் வருகிறது தினமுரசு
படியுங்கள், வித்தியாசம் காண்பீர்கள்!